



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:286 | 01-05-2026 | வெள்ளிக்கிழமை | Free E- Paper | சென்னை • மதுரை • கோவை • திருச்சி








# வங்காளத்தில் 77 வாக்குச்சாவடிகளில் மறுதேர்தல்?: தேர்தல் ஆணையம்

**கொல்கத்தா, மே 1:**

ஏப்ரல் 29 அன்று நடைபெற்ற மேற்கு வங்கத் தேர்தலின் இரண்டாம் கட்டத்தைத் தொடர்ந்து, தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 77 வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடத்துவதற்கான கோரிக்கைகளை தேர்தல் ஆணையம் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக ஓர் அதிகாரி வியாழக்கிழமை தெரிவித்தார்.

ஃபால்டாவில் இருந்து 32 மறுவாக்குப்பதிவு புகார்களும், அதனைத் தொடர்ந்து டைமண்ட் ஹார்பரில் இருந்து 29, மக்ரஹாட்டில் இருந்து 13 மற்றும் பட்ஜ் பட்ஜில் இருந்து மூன்று புகார்களும் தேர்தல் ஆணையத்திற்கு வந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக் கோளாறு, வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குப்பதிவின் இரகசியத்தன்மை மீறப்படுதல் போன்ற குறிப்பிட்ட முறைகேடுகளைச் சுட்டிக்காட்டி, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் அல்லது பார்வையாளர்கள் கூட பொதுவாக மறுவாக்குப்பதிவுக்கான கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

புதன்கிழமை வாக்குப்பதிவு முடிந்த உடனேயே எழுந்த புகார்களில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு செய்தல், இயந்திரங்களில் பொருட்களைப் பயன்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு கேமராக்களை மறைக்க முயற்சித்தல் போன்ற குற்றச்சாட்டுகள் அடங்கும். புகார்களின் எண்ணிக்கை மற்றும் தன்மையைக் கருத்தில் கொண்டு, ஆணையம் எந்தவிதமான இடர்பாடுகளுக்கும் இடமளிக்கவில்லை," என்று ஒரு மூத்த அதிகாரி பிடிஐ-யிடம் தெரிவித்தார்.

கிடைத்த அறிக்கைகளின் அடிப்படையில், மறுவாக்குப்பதிவு குறித்த எந்தவொரு முடிவும் இறுதி செய்யப்படுவதற்கு முன்பு கள ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு




சிறப்புப் பார்வையாளர் சுப்ரதா குப்தாவிற்கு தலைமைத் தேர்தல் ஆணையர் (சிஇசி) ஞானேஷ் குமார் உத்தரவிட்டார் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

பல வாக்குச்சாவடிகளில் மறுவாக்குப்பதிவு நடத்துவது குறித்து முடிவெடுப்பதற்காக, குப்தா தற்போது கள ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாகவும், மற்ற பார்வையாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

"இந்த இடங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள நிலைமையை அவர் நேரில் சரிபார்த்து, விரிவான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்," என்று ஓர் அதிகாரப்பூர்வ வட்டாரம் தெரிவித்ததுடன், இந்த நடவடிக்கை வழக்கமான மறுநாள் ஆய்வுச் செயல்முறையிலிருந்து மாறுபட்டது என்றும் குறிப்பிட்டது.

குப்தாவின் ஆய்வுக்குப் பிறகு மறுவாக்குப்பதிவு குறித்து ஆணையம் இறுதி முடிவு எடுக்கும். தேவைப்பட்டால், பாதிக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் வெள்ளிக்கிழமை அன்றே மறுவாக்குப்பதிவு நடத்தப்படலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

டைமண்ட் ஹார்பர் பகுதியிலுள்ள மக்ரஹத் பாஸ்சிம் பகுதியிலிருந்தும் ஒரு குறிப்பாகக் கடுமையான குற்றச்சாட்டு பதிவாகியுள்ளது. அங்கு, வாக்காளர்களின் வாக்களிப்புத் தேர்வுகளைக் கண்காணிப்பதற்காக, அவர்களின் சட்டைப் பைகளில் உளவு கேமராக்கள் வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

"அறிவுறுத்தல்கள் தெளிவாக உள்ளன. முடிவெடுப்பதற்கு முன், கள அளவில் எல்லாவற்றையும் மதிப்பீடு செய்யுங்கள்," என்று மற்றொரு அதிகாரி கூறினார்.

# சாத்தான்குளம் வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரும் ஜூன் 1-க்குள் மேல்முறையீடு செய்யலாம்: ஐகோர்ட்

**மதுரை, மே 1:**

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட போலீஸார் 9 பேரும் ஜூன் 1-க்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாத்தான்குளம் ஜெயராஜ், அவர் மகன் பென்னிக்ஸ் ஆகியோர் கடந்த 2020ல் கரோனா ஊரடங்கு அமலில் இருந்த போது சாத்தான்குளம் போலீஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர்.

இது தொடர்பாக கொலை வழக்குபதிவுசெய்து அப்போதைய காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், மேலும், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமை காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜா, செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோரை சிபிஐ கைது



செய்தது. இந்த வழக்கை மதுரை மாவட்ட நீதிமன்றம் விசாரித்து ஸ்ரீதர் உட்பட 9 பேருக்கும் தூக்கு தண்டனை விதித்தது. தூக்கு தண்டனையை உறுதிப்படுத்தக்கோரி தமிழக அரசு மற்றும் சிபிஐ தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுக்கள் நீதிபதிகள் ஆனந்த் வெங்கடேஷ், ராமகிருஷ்ணன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. ஸ்ரீதர் உட்பட 9 பேரும் சிறையில் இருந்தபடி காணொலி வாயிலாக நீதிமன்றத்தில் ஆஜராகினர். அப்போது நீதிபதிகள், 9 பேரிடமும் வழக்கறிஞர்கள் நியமனம் செய்துள்ளீர்களா? எனக் கேட்டார். அதற்கு, அடுத்த விசாரணைக்குள் வழக்கறிஞர் நியமித்துவிடுவோம் என பதிலளித்தனர்.

இதையடுத்து சிபிஐ மேல்முறையீடு மனுவின் நகலை குற்றவாளிகளுக்கு வழங்க பதிவாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். முதல் குற்றவாளியான ஸ்ரீதர், மேல்முறையீட்டு மனுவை தயார் செய்ய 15 நாள் விடுப்பு வழங்குமாறு கோரிக்கை வைத்தார். அதை ஏற்க மறுத்த நீதிபதிகள், மேல்முறையீடு மனு தயாரிக்க சிறைத்துறை போதிய வசதிகளை செய்து தரும்.

சிறையில் அனைத்து வசதிகளும் உள்ளது. எனவே விடுமுறை தேவையில்லை என்றனர்.

தொடர்ந்து நீதிபதிகள், இந்த வழக்கு தமிழகம் முழுவதும் உற்றுநோக்கப்படும் வழக்காகும். எனவே, ஜூன் 1-க்குள் மேல்முறையீடு மனுக்களை தாக்கல் செய்யுங்கள். ஜூன் 4 முதல் தினமும் விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்பளிக்கப்படும். விசாரணை ஜூன் 4-க்கு ஒத்திவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# மாணவர்களுக்கு தமிழக கவர்னர் அறிவுரை

**நீலகிரி, மே 1:**

நீலகிரி மாவட்டம் லவ்டேல் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தமிழக கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கலந்து கொண்டு மாணவர்களிடம் உரையாற்றினார். இந்த விழாவில் அவர் பேசியதாவது;-

"கல்வியின் நோக்கம் வேலைவாய்ப்பைப் பெறுவது மட்டுமே என்று நினைக்கக் கூடாது. மாறாக, கல்வி என்பது சமூகம் மற்றும் தேசத்தின் மீதான தங்களின் பொறுப்புகளைப் பற்றி சிந்திக்க மாணவர்களைத் தூண்ட வேண்டும்.

மாணவர்கள் தங்கள் கல்வியை பயன்படுத்தி, நாட்டின் முன்னேற்றத்திற்கும், சமூகத்தின் நல்வாழ்விற்கும் அர்த்தமுள்ள பங்களிப்புகளை செய்ய வேண்டும். வேலைவாய்ப்பு ஒரு முக்கிய இலக்காக இருந்தாலும், மாணவர்கள் தங்கள் துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குபவர்களாகவும், தலைவர்களாகவும் ஆக வேண்டும் என்ற இலக்கை கொண்டிருக்க வேண்டும். மனிதநேயத்தை வளர்ப்பதிலும், தனிநபர்களை பொறுப்புள்ள மற்றும் இரக்கமுள்ள குடிமக்களாக உருவாக்குவதிலும்தான் கல்வியின் உண்மையான சாராம்சம் அடங்கியுள்ளது. நேர்மை, அர்ப்பணிப்பு மற்றும் வலுவான தேசபக்தி உணர்வு கொண்ட, சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தன்னலமின்றி பங்களிக்கக்கூடிய தனிநபர்களை உருவாக்குவதே கல்வியின் மிக உயர்ந்த நோக்கம்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.




## இன்றைய பஞ்சாங்கம்

01.05.2026 சித்திரை 18
வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் 5.57

**திதி:**
இன்று இரவு 11.07 வரை பௌர்ணமி பின்பு பிரதமை.

**நட்சத்திரம்:**
இன்று அதிகாலை 2.41 வரை சித்திரை பின்பு சுவாதி

**யோகம் :**
இன்று இரவு 9.21 வரை சித்தி பின்பு வ்யாதீபாதம்.

**கரணம் :**
இன்று காலை 10.28 வரை பத்திரை பின்பு இரவு 11.07 வரை பவம் பின்பு பாலவம்.

**அமிர்தாதி யோகம்:**
இன்று அதிகாலை 2.42 வரை சித்த யோகம் பின்பு காலை 5.56 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

**சந்திராஷ்டமம்**
இன்று அதிகாலை 2.41 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

**நல்ல நேரம்**
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30

**இராகு காலம்**
காலை 10.30 – 12.00.

**எமகண்டம்**
பிற்பகல் 3.00 – 4.30.

**குளிகை**
காலை 7.30 – 9.00.

சித்ரா பௌர்ணமி
புத்த பூர்ணிமா.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மே தினம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**புதுடெல்லி, மே 1:**

உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு என உழைப்பாளர் நாள் வாழ்த்துகள் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

உழைப்பு என்பது மனித இனத்தின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, அதன் அரசியல், சமூகப் பரிணாமத்திற்கும் அடிப்படைக் காரணியாக இருக்கும் உந்து சக்தியாகும். உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு எனது உழைப்பாளர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மே நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மே நாள் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கட்சி ஆட்சிதோறும் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரும் செய்து வந்தனர்.




'தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் சந்தித்திருக்காவிட்டால் நானும் கம்யூனிஸ்டாகத்தான் ஆகி இருப்பேன்' என்று சொன்ன தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் ஆட்சி அமைந்த போதெல்லாம் தொழிலாளர் நலம்காக்க எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றியது வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளாகமின்னிக் கொண்டிருக்கிறது.

அந்த வழித்தடத்தில்தான் திராவிட மாடல் அரசிலும், இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம். கழனியிலும் தொழிற்சாலைகளிலும் பாடுபடும் உழைப்பாளத் தோழர்களின் நலன்களைப் பாதுகாப்பது போலவே, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் மற்றும் திருநங்கைகள் புதிய ஆட்டோ ரிக்சா வாங்க மானியம், பதிவுபெற்ற அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி, அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாக்கிறோம்.

அதோடு, இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடவும் நலவாரியம் உருவாக்கப்பட்டு, அதில் பதிவு செய்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் புதியதாக இ-பைக் வாங்க மானியம் வழங்கும் புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி சாதனைகள் பல படைத்தும், பாட்டாளி மக்களின் உயர்வுக்கு நாம் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்தும் விதமாகவும், "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக் கை விலங்குகளைத் தவிர எதுவுமில்லை" என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்சுக்குச் சென்னையில் சிலை அமைத்துள்ளோம். இப்படி, சொல்லாலும் செயலாலும் வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றுகிறோம்.

உழைப்பையும், உழைப்போரையும் கொண்டாடும் இந்த மே நாளில், திமுக தொழிலாளர்களின் உண்மைத் தோழனாக என்றென்றும் திகழ்ந்திடும் என்ற உறுதியையும், உழைக்கும் தோழர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துகள் என அவர் கூறியுள்ளார்.

# குறைந்தபட்ச ஓய்வூதியம் 7.5 மடங்கு உயர்வா?

**புதுடெல்லி, மே 1:**

தற்போது ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் (EPS-05) வழங்கப்பட்டு வரும் குறைந்தபட்ச மாத ஓய்வூதியத் தொகையான 1,000 ரூபாயால், அடிப்படை வாழ்க்கைச் செலவுகளைப் பூர்த்தி செய்யவில்லை எனக் கூறி, குறைந்தபட்ச தொகையை ரூ. 7,500-ஆக உயர்த்த வேண்டும் என தொழிலாளர் சங்கங்களும் ஓய்வூதியதாரர் சங்கங்களும் கோரிக்கை விடுத்து வருகின்றன. இந்த உயர்வுக்கான கோரிக்கையும் தொடர்ந்து வலுத்து வருகிறது.

இந்த நிலையில், ஓய்வூதியத் தொகையை உயர்த்த நாடாளுமன்றக் குழுவும் பரிந்துரைத்துள்ளது. இந்த முடிவு, நாட்டிலுள்ள லட்சக்கணக்கான ஓய்வூதியதாரர்களுக்கு நல்ல செய்தியாக அமைந்துள்ளது.

இந்த ஓய்வூதிய மாற்றங்களுடன், நிதியாண்டு 2026ல் கணக்குதாரர்களின் வைப்புநிதியில் 8.25 சதவிகிதம் வட்டி வரவை வழங்கவும் வாய்ப்புள்ளது.



# திருக்குறள் குறள்-606

**படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது**



நாட்டை ஆளும் தலைவருடைய உறவுத் தானே வந்து சேர்ந்தாலும், சோம்பல் உடையவர் சிறந்த பயனை அடைய முடியாது.

## சிந்திக்க ஒரு நொடி



அச்சமின்மையே ஒருவனைத் எந்த சூழ்நிலையிலும் தெளிவான முடிவுகள் எடுக்கவும் தைரியமாகச் செயல்படவும் தூண்டுகிறது

**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

## ஸ்ரீகள்ளழகர் மதுரையை நோக்கி புறப்பட்டார்



ஸ்ரீகள்ளழகர் தங்க பல்லாக்கில் கள்ளர் திருக்கோலத்தில் எழுந்தருளி, மதுரையை நோக்கி புறப்பட்டார்.

## வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பு வைப்பறை மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் ஆய்வு.





**திருவண்ணாமலை , மே 01:** திருவண்ணாமலை வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பு வைப்பறைகளையும் மற்றும் வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



தாழம்பூர் நவ நரசிம்மர் கோவிலில் திருத்தேர் வைபவத்தில் பிரஹல்லாத வரதன் ஸ்ரீதேவி பூதேவி சமேத எழுதருளியுள்ளார்

# வாடிப்பட்டியில் மீனாட்சியம்மன் கோவில் சித்திரைதிருவிழாதேர் பவனி





**மதுரை, மே 01:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சி 2 வார்டு குலசேகரன் கோட்டையில் குலசேகரபாண்டிய மன்னரால்கட்டப்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்த இயற்கை எழில்கொஞ்சும் சிறுமலை ஓடைக் கரையில் எழுந்தருளியுள்ள மீனா ட்சி சுந்தரேசுவர் திருக்கோவி ல் சித்திரை திருவிழா கடந்த 19ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தினந்தோறும் மாலை 6மணிக்கு பல்வேறு சிறப்பு அலங்காரங்களில் அம்மன் அருள் பாலித்தார். 28ந் தேதிசெவ்வாய்க்கிழமை காலை 10:25 மணிக்கு மீனாட்சி அம்மனு க்கு திருக்கல்யாணம் நடந்தது. 29ந்தேதி மாலை 6:00 மணிக்கு கோவில் முன்பாக தேர் பவனி தொடங்கியது. இந்த நிகழ்ச்சிக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் கணேசன் தலைமை தாங்கி தொடக்கி வைத் தார்.

போலீஸ்சப்இன்ஸ்பெக்டர் சிவகுமார் முன்னிலை வகித்தார். இந்தத் தேர் பவணியில் வண்ண வண்ண மலர்கள், வண்ண விளக்கு களால் அலங்கரிக்கப்பட்டு மஞ்சள் பட்டு உடுத்தி சுந்த சுந்தரேஸ்வ ரரும், அரக்கு பார்டரில் பச்சை பட்டு உடுத்தி முத்தங்கி ஆடை அணிந்து மீனாட்சி அம்மனும் அருள் பாலித்த னர். இந்த தேர் பவனி குலசேகரன் கோட்டையில் தொடங்கி வி.எஸ். நகர், ராமநாயக்கன்பட்டி, போடி நாயக்கன்பட்டி, பஸ் நிலையம், தாதம்பட்டி,மேட்டு பெருமாள் நகர், நீரேத்தான் யூனியன் ஆபீஸ் ரோடு,மீனாட்சி நகர், போலீஸ் ஸ்டேஷன், லாலா பஜார், சந்தை பாலம், பேரூராட்சி அலுவலகம், கள்ளர் மடம், குலசேகரன்கோட்டை பிரிவு வழியாக அதிகாலை 3 மணிக்கு கோயிலை சென்றடைந்தது.

இந்த தேர் பவனி யில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வீடுகளில் முன்பாக வழிபாட்டு சாமி தரிசனம் செய்தனர். இதன் ஏற்பாடு களை திருப்பணி குழுவி னர் மற்றும் குலசேகரன் கோட்டை கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# 42ம் ஆண்டு வஸந்த உற்சவம்



**தஞ்சாவூர், ஏமே 01:** மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் நான்காவது திருவிவான நேற்று (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் தாயார் சமேதராய் பெருமாள் வஸந்த மண்டபத்தில் எழுந்தருளி தடாக சிறப்பு திருமஞ்சனம், அதனைத் தொடர்ந்து மதியம் 1 மணியளவில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இரவு 7 மணிக்கு தாயார் சமேதராய் பெருமாள் எழுந்தருளி நம் ஸௌராட்ஷ்ட்ர சமூக வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், வஸந்த உற்சவம் சபை மற்றும், உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

# கலசபாக்கம் வட்டார ஆசிரியர் பணி ஓய்வு பாராட்டு விழா



**தி.மலை, மே01:** தி.மலை மாவட்டம், கலசபாக்கம் வட்டாரம். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் வட்டார தலைவர்கி.இராஜகுமாரி தலைமையில் நடைபெற்றது. வரவேற்பு சங்கர் செயலாளர். வே.வெங்கடேசன், குப்புசாமி ,சுரதா,பூ.சரோஜா பட்டதாரி தலைமையாசிரியர் பணி நிறைவு பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நினைவுப் பரிசு வழங்கி,வாழ்த்துரை வழங்கிய.... மாநிலத் தலைவர். தோழர் மூ.மணிமேகலை. மற்றும் பாராட்டுரை வழங்கிய.... STFI. அகில இந்திய பொதுக்குழு உறுப்பினர்... தோழர்.ச.டேவிட்ராசன். வாழ்த்துரை வழங்கிய மாவட்ட தலைவர் தோழர்.த.சாந்தி மாவட்டச் செயலாளர் தோழர் கோ.வெங்கடபதி. மாவட்டப் பொருளாளர் *தோழர் து.கிருஷ்ணன். மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் ச.ரமாபிரபா. மாநில பொதுக்குழு உறுப்பினர் தோழர் மே.வி. சாம்சன்சுரேஷ்குமார். செய்யாறு கல்வி மாவட்ட செயலாளர் தோழர்.சி.அருண்பிரசாந்த். மாவட்ட துணைத் தலைவர்கள். தோழர் கு.சண்முகம்.

**தோழர் ரா.வேலு. மாவட்ட துணைச் செயலாளர் தோழர் கோ.கிரி.**

# பராபவ வருட ப்ரம்மோத்ஸவம்



மாம்பலம் ஸ்ரீகோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 8ம் திருநாள் காலை வெண்ணெய்தாழி கண்ணன் திருக்கோலம். (பல்லக்கு). 30.04.2026

# காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் ஆலயத்தில் ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி மற்றும் வியாழக்கிழமையை முன்னிட்டு பச்சை பட்டு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!

**வேலூர்,மே01:** வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீ ராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீசத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீ க.மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. வியாழக்கிழமையை முன்னிட்டும், ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தியை முன்னிட்டும் அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது. இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. ஸ்ரீ ராகவேந்திரர் பச்சை பட்டு உடையில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ ராகவேந்திரரை தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர்.

இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.



# அருள்மிகு ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு சுவாமி, அம்மன் திருவூடல் உற்சவம்



**திருவண்ணாமலை , மே 01:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அருள்மிகு ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு சுவாமி, அம்மன் திருவூடல் உற்சவம் மற்றும் பாராயணம், வேள்வி, அபிஷேகம், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து வேத மந்திரங்கள் முழங்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது .மாலை 5 மணி அளவில் சுவாமி, அம்மன் மாடவீதியில் சிவகணவாத்தியம் முழங்க சுவாமி, அம்மன் திருவூடல் உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருவூடல் உற்சவத்தில் கலந்து கொண்டு மீனாட்சி சுந்தரேசுவரரை வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பாவேந்தர் பாரதிதாசன் 136-வது பிறந்த நாள் முதலமைச்சர் புகழாரம்

**சென்னை, மே 1:**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 136-ஆவது பிறந்த நாள் புதன்கிழமை கொண்டாடப்பட்டது. இதையொட்டி சென்னை மெரினா கடற்கரை காமராசர் சாலையில் அமைந்துள்ள பாரதிதாசன் திருவுருவ சிலைக்கு தமிழக அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. முன்னதாக, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தமது 'எக்ஸ்' பக்கத்தில், "தமிழெனும் ஆயுதமேந்தி இனமானம் உரைத்த பாவேந்தர் புகழ் வாழியவே" என புகழ் வாழ்த்து தெரிவித்தார். "தமிழின் இனிமையையும் தமிழரின் உயர்வுக்கான வழியையும் தன் கவிதையால் காட்டியவர் புரட்சிக்கவி ஞர் பாரதிதாசன்.

பாவேந்தரின் திண்மை நிறை தமிழ், ஒளியென நம் இனத்திற்குத் துணை நிற்கட்டும்" என்றும் அவர் வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் உணர்வின் அடையாளம் பாரதிதாசன்: கனிமொழி இதேபோல, "தமிழ் உணர்வின் அடையாளமாக, திராவிட இயக்கத்தின் பெருந்தொண்டராக, பகுத்தறிவு மிக்க வரிகளால் தமிழ் மனத்தைத் தட்டி எழுப்பிய புரட்சிக் கவிஞராகத் திகழ்ந்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளில், அவர், தமிழுக்கும் தமி ழர்க்கும் ஆற்றிய அரும்பணிகளைப் போற்றிடுவோம்" என்று நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனி மொழி தமது, 'எக்ஸ்' பக்கத்தில் புகழஞ்சலி செலுத்தினார்.

## 234 தொகுதிகளுக்கும் வெளிமாநில பார்வையாளர்கள் நியமனம்!

**சென்னை, மே 1:**

தமிழகத்தில் மே 4 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணும் பணியை கண்காணிக்க 234 தொகுதிகளுக்கும் வெளிமாநில ஐஏஎஸ் அதிகாரிகளை பார்வையாளர்களாக நியமித்து இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டு உள்ளது. ஒரு தொகுதிக்கு ஒரு பார்வையாளர் என 234 ஐஏஎஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் மே 2-ஆம் தேதிக்கு முன்னதாக தங்க ளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிக்கு வந்து பணியை தொடங்க வேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை தொடங்கிய பிறகு ஒவ்வொரு சுற்று முடிவுகளும் வெளிமாநில பார்வை யாளர் கையெழுத்திட்ட பிறகே அதிகாரப்பூர்வமாக வெளியிட முடியும்.

இறுதி முடிவு அறிவிக்கும்போதும் பார்வையாளரின் கையெழுத்து பெற்ற பிறகே அதி காரப்பூர்வமாக முடிவுகள் அறிவிக்கப்படும். வாக்கு எண்ணும்போது எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் இருக்க தேர்தல் அலுவலர் மற்றும் ஊழி யர்களுக்கு பார்வையாளரே அவ்வப்போது உத்தரவு பிறப்பிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மே 1 முதல் உதகையில் கனரக வாகனங்களுக்கு கட்டுப்பாடுகள்

**உதகை, மே 1:**

உதகை கோடை விழாவை முன்னிட்டு நீலகிரி மாவட்டத் திற்கு செல்ல மாவட்ட காவல்துறை போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

மே 1 முதல் பால், பெட்ரோல், சமையல் எரிவாயு கொண்டு செல்லும் கனரக வாகனங்களுக்கு மட்டுமே உதகை நகருக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. மற்ற கனரக வாகனங்கள் காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை நகருக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டு உள்ளது.

மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை வரும் வாக னங்கள் கேத்தி, லவ்டேல், மஞ்சனகொரை, பர்ஹின்ஹில் வழியாக செல்ல வேண்டும் எனவும், கூடலூரிலிருந்து வரும் இலகுரக வாகனங்கள் தலைகுந்தா மட்டம், புது மந்து வழியாக ஸ்டீஃபன் சர்ச் வழியே நகருக்குள் செல்ல லாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குன்னூரிலிருந்து உதகை வரும் வாகனங்கள் ஆவின் வாகன நிறுத்துமிடத்திலும், கோத்தகிரியிலிருந்து வரும் வாகனங்கள் அரசு கலைக்கல்லூரி தற்காலிக வாகன நிறுத்துமிடத்திலும் நிறுத்தப்படும். அங்கிருந்து தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, தொட்டபெட்டா உள்ளிட்ட சுற்றுலா தலங்களுக்கு அரசு சுற்றுப் பேருந்துகள் மூலம் செல்லலாம் என நீலகிரி மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

## கொச்சி-தூத்துக்குடி: இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்துக்கு அனுமதி; வீடுகளுக்கு தடையின்றி கியாஸ் கிடைக்கும்

**நாகர்கோவில், மே 1:**

கொச்சி முதல் தூத்துக்குடி வரை கன்னியாகுமரி மாவட்டம் வழியாக இயற்கை எரிவாயு குழாய் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வீடுகளுக்கு தடையின்றி கியாஸ் கிடைக்கும் எனற தகவல் வெளியாகியுள்ளது.






ஈரான்-அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையேயான மோதலால் ஹார்முஸ் நீர்சந்தி மூடப்பட்டது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு வினியோக சங்கிலி அறுந்தது. இதன் தாக்கம் எங்கோ இருக்கும் நாடுகளை தாண்டி இந்தியாவின் குக்கிராமத்து அடுப்பங்கரை வரை எதிரொலித்தது.

சிலிண்டர் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட பாதிப்புகள் ஏராளம். வீட்டு தேவையை அரசு பூர்த்தி செய்து விட்டது. ஆனால் வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. ஒரு சிலிண்டரை ரூ.7,000 கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு உணவக உரிமையாளர்கள் தள்ளப்பட்டனர். இந்த இக்கட்டான நிலையை புரிந்துகொண்ட மத்திய அரசு, மக்கள் இயற்கை எரிவாயுவுக்கு (பி.என்.ஜி.) மாற வேண்டும் என அறிவுறுத்தியது.

ஆனால் தற்போது நாட்டின் பெருநகரங்களில் மட்டுமே இந்த வசதி உள்ளது. எனவே இதை விரிவுபடுத்த மத்திய அரசு நடவடிக்கை களெடுத்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம், இந்திய ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்துக்கு ஒரு முக்கிய அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அதாவது கொச்சியில் தொடங்கி கன்னியாகுமரி மாவட்டம் வழியாக தூத்துக்குடி வரை இயற்கை எரிவாயு (மீத்தேன்) குழாய்களை அமைக்கவும், அவற்றை இயக்கவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் கே.டி.பி.எல். (கொச்சி-கன்னியாகுமரி- தூத்துக்குடி குழாய்) என்று அழைக்கப்படுகிறது. இதற்கான ஏலம் முடிந்து, கடந்த மார்ச் 9-ம் தேதி அங்கீகார கடிதம் வழங்கப்பட்டது. மார்ச் 19-ம் தேதி இந்திய ஆயில் கார்ப்பரேஷன் தனது ஏற்பு கடிதத்தை சமர்ப்பித்தது.

இந்த திட்டத்தின் கீழ் குழாய் இணைப்பானது கொச்சி எல்.என்.ஜி. முனையத்தில் இருந்து தூத்துக்குடி வரை மொத்தம் 424.65 கி.மீ. தூரம் அமைக்கப்படும். ஒவ்வொரு பகுதியின் மண் தன்மைக்கு ஏற்ப 16, 14, 12.75 மற்றும் 8.625 அங்குல விட்டம் கொண்ட குழாய்கள் பதிக்கப்படும். நாள் ஒன்றுக்கு 68.40 லட்சம் மெட்ரிக் ஸ்டாண்டர்ட் கியூபிக் மீட்டர் எரிவாயு வழங்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது. தொழிற்சாலைகளுக்கான எரிபொருள் மற்றும் வீடுகளுக்கான கியாஸ் இதன் மூலம் தடையின்றி கிடைக்கும். இந்த ஒப்பந்தத்தில் இந்திய ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் சார்பில் முதன்மை பொது மேலாளர் யோஹான்குமார் மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் சார்பில் செயலாளர் அஞ்சன்குமார்மிஸ்ரா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

## புதுக்கோட்டையில் மறுவாக்குப்பதிவு நடத்தக் கோரிய மனுவை தள்ளுபடி செய்தது சென்னை ஐகோர்ட்டு

**சென்னை, மே 1:**

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் கடந்த 23-ந்தேதி ஒரே கட்டமாக நடைபெற்றது. மே 4-ந்தேதி வாக்கு எண்ணிக்கை நடக்கிறது. இதற்கிடையில், வாக்குச்சாவடியில் வாக்களித்த வர்களின் விவரம் அடங்கிய படிவம் 17ஏ உள்ளிட்ட தேர்தல் ஆவணங்களை ஆய்வு செய்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இதில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டதாகவும், அதில், 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளில் எந்த ஒரு வாக்குச்சாவடிக்கும் மறுதேர்தல் பரிந்துரைக்கப்படவில்லை என்றும் தேர்தல் ஆணையம் விளக்கமளித்துள்ளது.

இந்த நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் திருப்பத்தூர் தொகுதிக்கு உட்பட்ட 6 கிராமங்களைச் சேர்ந்த 2,012 வாக்காளர்கள் வாக்களிக்கவில்லை என்பதால் மீண்டும் வாக்குப்பதிவு நடத்தக் கோரி லட்சுமணன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது தேர்தல் முடிந்த பிறகு எப்படி வாக்களிக்க அனுமதிக்க முடியும்? என கேள்வி எழுப்பிய தலைமை நீதிபதி அமர்வு, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. திருப்பத்தூர் தொகுதியுடன் ஆர்.பாலகுறிச்சி, சீகம்பட்டி, ரெகுநாதபட்டி, கோபால் பட்டி, வைரவன்பட்டி, விடத்தலான்பட்டி ஆகிய 6 கிராமங்கள் சேர்க்கப்பட்டதால் அப்பகுதி மக்கள் தேர்தலை புறக்கணித்தது குறிப்பிடத்தக்கது.

புதுக்கோட்டைமாவட்டத்தில் 83.89 சதவீதம் வாக்குப்பதிவாகி உள்ளது. கடந்த சட்டமன்ற தேர்தலை விட 6 சதவீதம் அதிகரித்து உள்ளது.

## சித்ரா பவுர்ணமி: திருவண்ணாமலைக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**சென்னை, மே 1:**

தமிழ் மாதங்களில் வரும் பவுர்ணமி நாளில் திருவண்ணாமலையில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர். அவ்வாறு அங்கு செல்லும் பக்தர்களின் வசதிக்காக தமிழக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.




இந்த சிறப்பு பஸ்கள் சென்னை, வேலூர், திருத்தணி, காஞ்சிபுரம், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சிதம்பரம், விழுப்புரம், ஒசூர் மற்றும் பெங்களூருவில் இருந்து திருவண்ணாமலைக்கு இயக்கப்படுகின்றன. இந்த நிலையில் திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமி கிரிவலம் நாளை நடைபெற இருக்கிறது. இதில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனையொட்டி தமிழக போக்குவரத்துத்துறை திருவண்ணாமலைக்கு சிறப்பு பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்துள்ளது.

இதன்படி, கிளாம்பாக்கத்தி லிருந்து இன்று 548 பேருந்துகளும், நாளை 565 பேருந்துகளும், மாதவரத்திலிருந்து இன்று 186 சிறப்பு பேருந்துகளும், நாளை 174 சிறப்பு பேருந்துகளும், அடையாறிலிருந்து இன்று 55 பேருந்துகளும், மே 2-ம் தேதி 50 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

## ஆதார், பான் எண்ணைத் திருடி நூதன மோசடி: ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி செலுத்துமாறு ஓட்டுநருக்கு நோட்டீஸ்

**சென்னை, மே 1:**

ஜிஎஸ்டி ரூ.4.70 கோடி செலுத்த வேண்டும் என்று நோட்டீஸ் வந்ததால் கார் ஓட்டுநர் அதிர்ச்சி அடைந்தார். வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் கார் ஓட்டுநர் கமலநாதன் (36).




கடந்த 10 ஆண்டுகளாக திருவேற்காடு அடுத்த புளியம்பேடு நூம்பல் பகுதியில் மனைவி, 2 குழந்தைகளுடன் வசித்து வருகிறார். இந்நிலையில், வேலூரில் உள்ள அவரது சொந்த வீட்டு முகவரிக்கு கடந்த பிப்ரவரி மாதம் ஜிஎஸ்டி அலுவலகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது.

அதில், 'கமலநாதன் ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டும்' என குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக ஜிஎஸ்டி அலுவலகத்தை அணுகி விளக்கம் கேட்டுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர் ஒருவர் கமலநாதனின் ஆதார், பான் அட்டை விவரங்களை பயன்படுத்தி அவரது பெயரில் ஜிஎஸ்டி பதிவு செய்து, ஓசூர், திருப்பூரில் நிறுவனம் தொடங்கி தொழில் செய்து வந்துள்ளார்.

திருப்பூரில் கமல் என்டர்பிரைஸ் என்ற பெயரில் ஏற்றுமதி - இறக்குமதி நிறுவனம் நடத்தி வந்ததாகவும், பின்னர் அதை நிறுத்திவிட்டதும் தெரியவந்தது.

இதையடுத்து, ஜிஎஸ்டி அலுவலக அதிகாரிகள் மற்றும் அதைத் தொடர்ந்து, வானகரம் போலீஸார் அறிவுறுத்தியபடி, சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் கமலநாதன் நேற்று புகார் கொடுத்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியபோது, "ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி வரி கட்ட வேண்டும் என்று எனக்கு நோட்டீஸ் வந்துள்ளது.

எனது ஆதார், பான் விவரங்களைத் திருடி மோசடியில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## சென்னையிலிருந்து கன்னியாகுமரி, தென்காசிக்கு கோடை சிறப்பு ரயில்கள்

**சென்னை, மே 1:**

கோடைக் காலத்தையொட்டி பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி மற்றும் தென்காசிக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சென்னை எழும்பூரிலிருந்து ஏப்ரல் 30 இரவு 11.50 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (வண்டி எண் 06045) மே 1 மதியம் 1 மணிக்கு கன்னியாகுமரியை சென்றடையும். திரும்பும் பய ணமாக கன்னியாகுமரியிலிருந்து மே 3 இரவு 11.25 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06046) மே 4 மதியம் 11.30 மணிக்கு சென்னை எழும்பூரை வந்தடையும். தாம்பரத்திலிருந்து ஏப்ரல் 30 இரவு 10.30 மணிக்கு புறப்ப டும் சிறப்பு ரயில் (06089) மே 1 காலை 10 மணிக்கு தென்காசியை சென்றடையும். திரும்பும் பயணமாக செங்கோட்டையி லிருந்து மே 3 இரவு 9.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (06090) மே 4 காலை 10.30 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும். இந்த சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு ஏப்ரல் 29 மாலை 6 மணியிலிருந்து தொடங்கி விட்டதாக தெற்கு ரயில்வே தெரி வித்துள்ளது.

## சாதி - மதமற்றவர் சான்று வட்டாட்சியருக்கு அதிகாரம் இல்லை என தீர்ப்பு!

**சென்னை, மே 1:**

சாதி - மதமற்றவர் என சான்றிதழ் வழங்கு வதற்கு வட்டாட்சிய ருக்கு அதிகாரம் இல்லை என சென்னை உயர்நீதிமன்றம் தெளிவு படுத்தியுள்ளது. நடிகர் பார்த்திபன் தாக்கல் செய்த வழக்கில் விசாரணை நடத்திய நீதிபதி, இவ் விவகாரத்தில் ஏற்கெ னவே இரு நீதிபதிகள் அமர்வு வழங்கிய உத்த ரவின் அடிப்படை யிலேயே பார்த்திப னுக்கு சான்று வழங்க வேண்டும் என ஆணை யிட்டுள்ளார். சாதி-மதம் அற்றவர் என சுயப் பிரகடனம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை எனவும், விளம் பரத்திற்கு மட்டுமே இத்தகைய சான்று பயன்படும் எனவும் நீதிபதி கருத்து தெரி வித்துள்ளார். இதை யடுத்து பார்த்திபன் தொடர்ந்த வழக்கு முடித்து வைக்கப் பட்டது.

## 4 ஆயிரத்து 602 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு! அமைச்சர் பி.கே. சேகர் பாபு பேட்டி

**சென்னை, மே 1:**

கூஷகடந்த 5 ஆண்டு திமுக ஆட்சியில், இது வரை 4,602 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தியுள்ளதாக துறைமுகம் தொகுதி திமுக வேட்பாளரும் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் நடை பெற்று முடிந்த நிலையில், ஆன்மீக சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுள்ள அமைச்சர் பி.கே. சேகர் பாபு, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் ஆகியோர் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் செய்தனர். திருக்கோவிலில் மூலவர், சண்முகர், சத்ரு சம்ஹார மூர்த்தி பெருமாள், வள்ளி, தெய்வானை ஆகிய சன்னதியில் சிறப்பு பூஜை நடத்தினர். அர்ச்சகர்கள் அவர்களுக்கு வேல் வழங்கியதுடன் பூரணக் கும்ப மரியாதையும் அளித்தனர். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் பி.கே. சேகர்பாபு, "கடந்த ஆட்சி யில் 10 ஆண்டுகளாக அனுமதி வழங்காமல் இருந்த திருச்செந்தூர் திருக்கோவில் வளர்ச்சித் திட்டத்திற்கு எச்சிஎல் நிறுவனத் திற்கு அனுமதி வழங்கினோம். திருக்கோ வில் நிதியும் சேர்த்து ரூபாய் 400 கோடி அளவில் பக்தர்களுக்கான தங்குமிடங்கள், அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கான வசதிகளை ஏற்படுத்தினோம். 38 ஆண்டு கால சட்டப் போராட்டத்திற்கு பிறகு பாம்பன் முருகன் திருக்கோவிலில் குடமுழுக்கை நடத்தியுள்ளோம்" என்று தெரிவித்தார்.

## ஹவுரா எக்ஸ்பிரஸ் ரயிலில் கடத்தி வந்த 25 கிலோ கஞ்சா மூட்டை பறிமுதல்

திருச்சிராப்பள்ளி, ஏப். 29- மேற்குவங்க மாநிலம் ஹவுராவில் இருந்து, கன்னியாகுமரிக்கு ஹவுரா எக்ஸ்பிரஸ் ரயில் சென்று கொண்டிருந்தது. இந்த ரயில் நள்ளிரவு 12 மணிக்கு திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையம் வந்தடைந்த போது, மர்ம நபர் ஒருவர் பெரிய மூட்டையுடன் இறங்கி நடந்து சென்றார். அப்போது அவரை, காவல்துறையினர் பார்த்து உள்ளனர். அந்த மர்ம நபரின் நடத்தையில் சந்தேகம் அடைந்த ரயில்வே பாதுகாப்புப் படை போலீசார் அவர் வைத்திருந்த மூட்டையை வாங்கி சோதனை செய்தார். அப்போது அதில் கஞ்சா பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து, அந்த மர்ம நபரைப்யை பிடித்து ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் 25 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

## மாநில மொழிப் பத்திரிகை பள்ளிகளில் வாசிப்பது கட்டாயம்

**பெங்களூரு, மே 1:**

கர்நாடகமாநிலத்தில் அரசுபள்ளிகளில் தினமும் 10 முதல் 15 நிமிடங்கள் கன்னட பத்திரிகை வாசிப்பதை கட்டாயமாக்கி கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது. இந்த உத்த ரவு அரசு பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மட்டுமல்லாமல் உறைவிடப் பள்ளிகள், விடுதிகள், சிறார் காப்பகங்கள் உள்பட அனைத்து கல்வி நிறுவனங் களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் முன்னர் இதற்கான பரிந்துரையை கல்வித்துறைக்கு அளித்திருந்தது. அதை ஏற்றுக்கொண்ட கல்வித் துறை இப்போது உத்தரவாக வெளியிட்டுள்ளது.

இதற்கு முன்னர் உத்தரப்பிரதேசமும் ராஜஸ்தானும் இதேபோன்ற நடவடிக்கையை எடுத்துள்ளன. அம்மாநிலங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மாணவர்கள் தினமும் 10 நிமிடங்கள் மாநில மொழி பத்திரிகை வாசிக்க வேண்டும் என்று கட்டாயமாக்கப்பட்டது. கர்நாடகம் இப்போது மூன்றாவது மாநிலமாக இந்தப் பட்டியலில் இணைந்துள்ளது.

## ஹோட்டல்களில் உணவுப் பொருட்கள் விலை உயர்வு!

**சென்னை, மே 1:**

சமையல் எரிவாயு தட்டுப் பாடு காரணமாக ஹோட்டல் களில் உணவுப் பொருட்கள் விலை 5 முதல் 10 சதவிகிதம் வரை உயர்த்தப்பட்டு உள்ளதாக ஹோட்டல்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தட்டுப்பாடின்றி எரிவாயு கிடைக்கத் தொடங்கினால் உணவு விலையை குறை க்க தயார் என்றும் சங்கம் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சிலிண்டருக்கான காத்திருப்பு காலம் 5 நாட்களாக குறைப்பு!

இந்திய எண்ணெய் நிறுவனம், பாரத் பெட் ரோலியம் மற்றும் இந்துஸ் தான் பெட்ரோலியம் நிறு வனங்களின் தொடர் முயற்சி மற்றும் தமிழக அரசின் தீவிர கண்காணிப்பு காரணமாக பெரும்பாலான பகுதிகளில் சமையல் எரி வாயு சிலிண்டர் விநியோகத் திற்கான காத்திருப்புக் காலம் 5 நாட்கள் என குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெட் ரோல் மற்றும் டீசலும் போது மான அளவில் கிடைப்பதாக வும் கூறப்பட்டுள்ளது.

## மாணவர்களை தேர்வு எழுத அனுமதிக்க உத்தரவு!

தனியார் சட்டக்கல்லூ ரியில் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் மாணவர்களை தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும் என்று டாக்டர் அம் பேத்கர் சட்டப் பல்கலைக்கழ கத்திற்கு சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. பல்கலைக்கழகம் மாண வர்களுக்கு தேர்வு எழுத அனுமதி மறுத்த நிலையில், பாளையங்கோட்டையைச் சேர்ந்த மாணவி ஒருவர் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கிலேயே, மாணவ -மாணவியரை தேர்வு எழுத அனுமதிக்குமாறு உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

# பழநி பெருமாள் கோயில் சித்திரை திருவிழா தேரோட்டம் கோலாகலம்

**திண்டுக்கல், மே 1 :**



திண்டுக்கல் மாவட்டம், பழநி லட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில் சித்திரைத் திருவிழாவையொட்டி (வியாழக்கிழமை) காலை தேரோட்டம் நடைபெற்றது.

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலின் உப கோயிலான லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இக்கோயிலில் சித்திரைத் திருவிழா ஏப்ரல் 22-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

திருவிழாவையொட்டி தினமும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். விழாவின் 7-ம் நாளான ஏப்ரல் 28-ம் தேதி திருக்கல்யாண வைபவம் கோலாகலமாக நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று (ஏப்ரல் 30) காலை நடைபெற்றது. முன்னதாக, காலை 5.30 மணிக்கு லட்சுமி, நாராயணப் பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றன. இதையடுத்து, சுவாமி, அம்பாள் தேரேற்றம் நடைபெற்றது.

தொடர்ந்து, காலை 8.30 மணிக்கு மேல் திரளான பக்தர்கள் வடம் பிடித்து இழுக்க நான்கு ரத வீதிகளில் தேரோட்டம் நடைபெற்றது.

கோயில் உதவி ஆணையர் செந்தில்குமார், கண்காணிப்பாளர் அழகர்சாமி, ஸ்ரீ கந்தவிலாஸ் உரிமையாளர் என்.செல்வகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். தேர் நிலையை அடைந்த பின்பு தங்கப் பல்லக்கில் வண்டிக்கால் பார்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இன்று (மே 1) இரவு 7 மணிக்கு கொடியிறக்குதலுடன் விழா நிறைவடைகிறது.

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் சித்திரை பிரம்மோற்சவ விழா: கொடியேற்றத்துடன் இன்று தொடக்கம்

**சென்னை, மே 1:**

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலில் ஆண்டு தோறும் சித்திரை மாத பிரம்மோற்சவ விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும். அந்த வகையில், இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவ விழா இன்று (மே 1) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதையொட்டி புஷ்பப் பல்லக்கு சேவை நேற்று இரவு நடைபெற்றது.



பல்வேறு வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் எழுந்தருளிய எம்பெருமானை திரளான பக்தர்கள் தரிசித்து பரவசமடைந்தனர். தொடர்ந்து (30-ம் தேதி) அங்குரார்ப்பணம் எனும் முளையிடுதல் விழா நடக்கிறது. மே 1-ம் தேதி (இன்று) கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவம் தொடங்குகிறது. தொடர்ந்து, தினமும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதி உலா நடக்கிறது.

பிரம்மோற்சவத்தின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் 7-ம் தேதி நடைபெறுகிறது. 8-ம் தேதி பல்லக்கில் வெண்ணெய் தாழி கண்ணன் திருக்கோலத்தில் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது.

9-ம் தேதி காலை 6.15 மணிக்கு ஆளும் பல்லக்கு, காலை 11 மணிக்கு தீர்த்தவாரி நடக்கிறது. அன்று இரவு கொடியிறக்க நிகழ்வு நடைபெறும். 10-ம் தேதி இரவு 10 மணிக்கு சிறிய திருத்தேர் நிகழ்வுடன் விழா நிறைவடைகிறது.

# மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிக்க தங்கப் பல்லக்கில் மதுரைக்கு புறப்பட்டார் கள்ளழகர்

**மதுரை, மே 1:**

மதுரை: மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிக்க அழகர் கோயிலில் இருந்து நேற்று மாலை சுந்தரராஜபெருமாள், கள்ளர் திருக்கோலத்தில் மதுரைக்கு புறப்பட்டார்.



துரை அழகர்கோவிலில் உள்ள கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழா ஏப்.27-ம் தேதி முதல் மே 6-ம் தேதி வரை நடைபெறுகிறது. விழாவின் முதல் 2 நாட்களில் திருக்கல்யாண மண்டபத்தில் சுந்தரராஜ பெருமாள் எழுந்தருளினார். மூன்றாம் நாளான நேற்று முன்தினம் காலை சுந்தரராஜ பெருமாள் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளினார். பின்னர் மாலையில் கொண்டப்ப நாயக்கர் மண்டபத்தில் எழுந்தருளிய சுந்தரராஜ பெருமாள், மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிப்பதற்காக கள்ளழகர் திருக்கோலத்தில் தங்கப் பல்லக்கில் மதுரைக்கு புறப்பட்டார்.

முன்னதாக கோயில் ராஜகோபுர வாசலில் உள்ள பதினெட்டாம்படி கருப்பணசாமி சந்நிதியில் சிறப்பு தீபாராதனை நடைபெற்றது. கருப்பணசாமியிடம் உத்தரவு பெற்று கள்ளழகர் நேற்று மாலை 6.25 மணியளவில் மதுரைக்கு புறப்பட்டார்.

நான்காம் நாளான (ஏப். 30) மதுரை மாநகர எல்லையான மூன்றுமாவடியில் அதிகாலை 5.30 மணியளவில் கள்ளழகருக்கு எதிர்சேவை நடைபெற்றது. ஆண்டாள் நாச்சியார் மாலை: தொடர்ந்து பல்வேறு மண்டகப்படிகளில் எழுந்தருளி இரவு 8.30 மணியளவில் தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாசலபதி கோயிலில் எழுந்தருளினார்.

அங்கு திருமஞ்சனமாகி தங்கக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியார் சூடிக்கொடுத்த மாலையை சூடிக் கொள்கிறார்.

மே 1-ம் தேதி அதிகாலை கோயிலில் இருந்து புறப்பாடாகி தல்லாகுளம் கருப்பணசாமி கோயில் முன்பு அதிகாலை 2.30 மணியளவில் ஆயிரம் பொன் சப்பரத்தில் எழுந்தருள்கிறார். அங்கிருந்து வைகை ஆறு நோக்கி தங்கக் குதிரை வாகனத்தில் புறப்படுகிறார்.

வைகை ஆற்றில் எழுத்தாணிக்காரத்தெரு வீரராகவப் பெருமாள் வெள்ளி குதிரை வாகனத்தில் வரவேற்க, அதிகாலை 5.35 மணி முதல் 5.55 மணிக்குள் கள்ளழகர் ஆற்றில் எழுந்தருள்கிறார்.






## நலம் தரும் மருத்துவம்

# மருத்துவ குணம் கொண்ட மஞ்சள் தர்பூசணிப் பழம்

கோடை காலத்தில் உடலில் நீர்ச்சத்து குறையாமல் பாதுகாக்க வல்லது தர்பூசணிப் பழம். தர்பூசணியில் இன்னொரு வகையான மஞ்சள் தர்பூசணிப் பழத்தில் ஊட்டச் சத்துக்கள் அதிகளவில் உள்ளதால் இதை 'டாப் சம்மர் சூப்பர் ஃபுட்' என வர்ணிக்கின்றனர். இதில் உள்ள முக்கியமான ஒன்பது வகை ஊட்டச் சத்துக்கள் என்னென்ன என்பதை இப்பதிவில் பார்க்கலாம்.

1. மஞ்சள் தர்பூசணிப் பழத்தில் நியோக்ஸாந்தின் (NEOXANTHIN) மற்றும் வயோலாக்ஸாந்தின் (VIOLAXANTHIN) போன்ற கரோட்டீனாய்ட்கள் அதிகம் உள்ளன. இவை ஃபிரீ ரேடிக்கல்ஸ் மூலம் செல் சிதைவடைவதைத் தடுத்து நிறுத்த பெரிதளவில் உதவி புரிகின்றன.

2. மஞ்சள் தர்பூசணிப் பழத்தில் 91 சதவிகிதம் நீர்ச் சத்து உள்ளது. நம் உடல் நீரேற்றத்துடன் சிறப்பாக செயல் புரிய இது உதவுகிறது.

3. இதிலுள்ள நியோக்ஸாந்தின் என்ற கரோட்டீனாய்ட் சரும ஆரோக்கியத்தைக் காக்க உதவுகின்றது. சூரியனின் அல்ட்ரா வயலட் கதிர்களின் தாக்கத்தால் சருமத்தில் உண்டாகும் கோளாறுகளை மறையச் செய்து பள பள சருமம் பெறவும் உதவி புரியும் மஞ்சள் தர்பூசணிப் பழம்.

4. மஞ்சள் தர்பூசணிப் பழத்தில் உள்ள நார்ச் சத்துக்கள் மலச்சிக்கல் நீங்கவும் இரைப்பை குடல் இயக்கங்கள் சிறப்பாக செயல் புரியவும் உதவி புரிகின்றன.

5. இப்பழத்தில் உடலுக்குத் தேவையான வைட்டமின்களும் உள்ளன. இதிலுள்ள வைட்டமின் C உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

6. இப்பழத்தில் உள்ள பொட்டாசியம் சத்தானது இரத்த அழுத்தத்தை சம நிலையில் வைத்துப் பராமரிக்க உதவுகிறது. அதன் மூலம் இதயத்தின் செயல்பாடுகள் எவ்வித கோளாறுமின்றி சிறப்பாக நடைபெற முடிகிறது.

7. மஞ்சள் தர்பூசணியில் உள்ள சிட்ருலின் (CITRULLINE) போன்ற அமினோ ஆசிட்கள் தசைகள் சிறப்பாக செயல் பட உதவுகின்றன. மேலும் உடற்பயிற்சிக்குப் பின் தசைகள் தளர்ந்து போகாமலும் பாதுகாக்கின்றன.

8. இப்பழத்தில் உள்ள ஸியாக்சாந்தின் (ZEAXANTHIN) என்ற கரோடடீனாய்ட் மற்றும் லூட்டின் (LUTIN) என்ற சத்துக்கள், கூசச் செய்யும் வெளிச்சத்திலிருந்து கண்களைப் பாதுகாக்கின்றன. மேலும் பார்வைத் திறனை மேம்படுத்தவும் உதவுகின்றன.

9. இதிலுள்ள க்ளூகோஸ் மற்றும் ஃபிரக்ட்டோஸ் போன்ற இயற்கையான இனிப்புச் சத்துக்கள் உடலுக்கு உடனடி சக்தியளிக்கின்றன. இரத்த சர்க்கரை அளவு உயராமலும் பாதுகாக்கின்றன.

# டாக்டர் அப்பாயிண்ட்மெண்ட் இனி தேவையில்லை? உங்கள் கையில் இருக்கும் இந்த 'Magic Apps' போதும்!

தொழில்நுட்பமும் சுகாதாரமும் இன்று ஒரு புதிய பரிமாணத்தை எட்டியுள்ளன. 2026-ஆம் ஆண்டில், இளைஞர்களுக்கான பிரத்யேக சுகாதார செயலிகள் (APPS) ஸ்மார்ட்போன்களை வெறும் பொழுதுபோக்கு சாதனங்களாக மட்டுமல்லாமல், முக்கியமான மருத்துவ உதவியாளர்களாகவும் மாற்றியுள்ளன. இன்றைய இளைஞர்களுக்கு சுகாதாரம் என்பது டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட ஒன்றாக மாறியுள்ளது.

இளைஞர்களுக்கான சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றங்கள் மற்றும் புதிய செயலிகள் குறித்து விரிவாக பார்ப்போம்:

டிஜிட்டல் மனநல புரட்சி:

இளைஞர்களுக்கான சுகாதார செயலிகளில் மனநலமே முதன்மையான இடத்தைப் பிடிக்கிறது. 2026-ஆம் ஆண்டில், வெறும் தியானப் பயிற்சிகளைத் தாண்டி, செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் செயலிகள் மற்றும் டிஜிட்டல் சிகிச்சை முறைகள் முன்னிலை வகிக்கின்றன.




AI உதவியாளர்கள் மற்றும் 24/7 ஆதரவு: தனிமை மற்றும் நள்ளிரவு நேரங்களில் ஏற்படும் பதற்றம் (ANXIETY) இளைஞர்களிடையே ஒரு பெரிய சவாலாக உள்ளது. WYSA மற்றும் ASH போன்ற செயலிகள் இந்த இடைவெளியை நிரப்புகின்றன.

WYSA: இது ஒரு 'உண்மையான கேட்பவர்' என்று அழைக்கப்படுகிறது. இது காக்னிட்டிவ் பிஹேவியரல் தெரபி (CBT - COGNITIVE BEHAVIORAL THERAPY) முறையைப் பயன்படுத்தி, பயனர்கள் மன அழுத்தத்தைக் கையாளவும், மன உறுதியை வளர்க்கவும் உதவுகிறது.

ASH: இது வெறும் தகவல்களை வழங்கும் செயலி மட்டுமல்ல, பயனர்களுடன் நீண்டகால உரையாடல்களை நினைவில் வைத்துக்கொண்டு, ஒரு மனித சிகிச்சையாளரைப் போலவே ஆதரவை வழங்குகிறது.

EARKICK: இந்தச் செயலி நிகழ்நேரத்தில் பதற்றத்தைக் கண்காணிக்கிறது. உடலில் மன அழுத்தத்திற்கான அறிகுறிகள் தென்படும்போது உடனடியாகப் பயனர்களுக்குப் பயிற்சிகளை வழங்குகிறது.

கேமிஃபிகேஷன் (GAMIFICATION): இளைஞர்களைச் சுகாதாரப் பயிற்சிகளில் ஈடுபடுத்துவது கடினம். AIM2BE போன்ற செயலிகள் ஆரோக்கியமான பழக்கவழக்கங்களை (தூக்கம், உணவு) ஒரு விளையாட்டைப்போல மாற்றியுள்ளன. இதில் புள்ளிகள் (POINTS) மற்றும் பேட்ஜ்கள் (BADGES) போன்ற வசதிகள் இருப்பதால், இளைஞர்கள் ஆர்வத்துடன் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

பாலியல் ஆரோக்கியம் மற்றும் தனித்தன்மை: இளைஞர்களைப் பொறுத்தவரை, பாலியல் ஆரோக்கியம் குறித்த விஷயங்களில் ரகசியம் காக்கப்படுவது மிகவும் முக்கியம். CLUE மற்றும் FLO போன்ற செயலிகள் இப்போது வெறும் மாதவிடாய் கண்காணிப்பு செயலிகளாக மட்டும் இல்லாமல், முழுமையான இனப்பெருக்க சுகாதார அமைப்புகளாக மாறியுள்ளன.

இந்தச் செயலிகளின் சிறப்பம்சங்கள்:: உடனடி ஆலோசனை: சரும வியாதிகள் முதல் மனநலப் பிரச்சனைகள் வரை அனைத்திற்கும் ஆன்லைன் மூலமாகவே நிபுணர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

வெளிப்படைத்தன்மை: இரத்தப் பரிசோதனை முடிவுகள் மற்றும் மருந்துப் பட்டியல்களை உடனுக்குடன் போனில் பார்த்துக் கொள்ளும் வசதி இளைஞர்களுக்குத் தங்கள் ஆரோக்கியத்தின் மீது ஒரு பொறுப்புணர்வையும் உரிமையையும் வழங்குகிறது.

பாதுகாப்பு மற்றும் நெறிமுறைகள்: தொழில்நுட்பத்தால் பல நன்மைகள் இருந்தாலும், சில சவால்களும் உள்ளன.

தரவு தனியுரிமை (PRIVACY): 2026-ஆம் ஆண்டில், இளைஞர்களின் சுகாதாரத் தரவுகள் காப்பீட்டு நிறுவனங்களுக்கோ அல்லது விளம்பரதாரர்களுக்கோ விற்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய "வடிவமைப்பிலேயே தனியுரிமை" (PRIVACY BY DESIGN) என்ற முறை கடைபிடிக்கப்படுகிறது.

டிஜிட்டல் இடைவெளி:

அதிவேக இணையம் மற்றும் நவீன போன்கள் இல்லாத பின் தங்கிய பகுதிகளில் உள்ள இளைஞர்களுக்கும் இந்தச் சேவைகள் சென்றடைவதை உறுதி செய்வது ஒரு பெரிய சவாலாக உள்ளது. இளைஞர்களுக்கான சுகாதாரத்தின் எதிர்காலம் மொபைல் மயமானது மற்றும் அறிவு சார்ந்தது. 2026-ஆம் ஆண்டில், தொழில்நுட்பத்திற்கும் சுகாதாரத்திற்கும் இடையிலான கோடு மறைந்து வருகிறது. நோய் வந்தபிறகு சிகிச்சை அளிப்பதைவிட, இளைஞர்கள் தங்கள் ஆரோக்கியத்தைத் தாங்களே முன்கூட்டியே கவனித்துக்கொள்ள இந்தச் செயலிகள் அதிகாரம் அளிக்கின்றன.

தனியுரிமைக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலமும், செயற்கை நுண்ணறிவைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலமும், சுகாதாரத்துறை இளைஞர்களை அவர்கள் இருக்கும் இடத்திலேயே அதாவது அவர்களின் ஸ்மார்ட்போன்களிலேயே சந்திக்கிறது.

# ஞாபகம் வருதே.....!



மேய்ச்சலை முடித்துவிட்டு மாட்டுக்காரர் மாடுகளை அதட்டியபடியே தெருவில் நடந்தார்.
அந்தி சாய்ந்தது. ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் அடுப்படி புகைமூட்டம் வானோக்கி சென்றது.
சூரியன் மெல்ல மேற்கில் மறைந்தது. காக்கைகளின் இரைச்சல் காதை கிழித்தது.
பெண்கள் ஜோடி ஜோடியாக கையில் பூக்கள் கூடைகளோடு தெருவீதியில் தோழிகளோடு பேசியபடி கோவிலை நோக்கி நடந்தனர்.
பள்ளி மைதானத்தில் விளையாடிவிட்டு, குளத்து தண்ணீரில் முகம் கால் கழுவி அரட்டை அடித்தபடியே இளைஞர்கள் பட்டாலம் கோயிலுக்குள் அடியெடுத்து வைத்தது.
இருட்டு, வெளிச்சத்தை மெல்ல உள்வாங்கிக் கொண்டது.
ஒவ்வொரு வீட்டின் வாசலில் மின்விளக்குகள் எரிந்தன.
கோயில் மணியோசை தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தது
கையில் கொழுக்கட்டையோடு சிரித்து மகிழ்ந்தபடி சின்னஞ் சிறு குழந்தகள் கோயிலுக்கு வெளியே நடந்துவந்தனர்.
வீட்டு மாடத்தில் அகல் விளக்குகளில் எரிந்த தீச் சுடரை, பூவால் அனைத்து விட்டு கூட்டமாக வாசலில் பெண்கள் உட்கார்ந்து இருந்தனர்.
வயதான பெரியவர்கள் தங்களது கடந்தகால நினைவுகளைப் பேசியபடியே திண்ணையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தனர்.
வீதியில் எரியும் விளக்கின் வெளிச்சத்தில் குழந்தைகள் ஓடி ஆடி விளையாடும் சத்தமும் கேட்டது.
காற்றில் கலந்த தெரு மணலின் நாற்றம். விளக்கின் ஒளியை மங்கச் செய்த தூசுக்கள்.
"போதும் போதும் நேரமாச்சு, போய் தூங்குங்க. நாளைக்கு விளையாடலாம்" என்ற அன்பு கலந்த அக்கறையான ஒரு பெண்மணியின் அதட்டலுக்கு குழந்தைகளை கட்டுப்பட வைத்தது.
"டேய் நாளைக்கு வந்துடுங்க "என்ற ஒரு சிறுவனின் பதிலுக்கு,
"சரிடா " என்று மகிழ்ச்சியாக சொல்லிய இன்னொரு குழந்தை அதன் வீட்டை நோக்கிச் சென்றது.
வீதி திடீரென வெறிச்சோடிக் காணப்பட்டது.
வீட்டின் வாசல் கதவுகள் தாழிடப்பட்டன.
தெருவின் பெரும்பாலான வீட்டுத் திண்ணையில் கைத்தடியோடு வயதான பெரியவர்கள் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருந்தனர்.
தெரு மணலின் கதகதப்பில் நாய்கள் தனது உடலுக்குள் கால்களை மடக்கி உறங்கிக் கொண்டிருந்தது.
வானில் மேகக் கூட்டத்தைக் கடந்து நிலவு வேகமாக நடந்தது.
ஒட்டுமொத்த ஊரும் உறக்கத்தில் அமைதியாக அழகாக விழித்திருந்தது.
எங்கிருந்தோ கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளின் ரீங்காரம் விழித்திருந்த ஊரின் அழகிற்கு பின்னணி இசை அமைப்பது போல சத்தம் போட்டுக் கொண்டிருந்தது.



-கயப்பாக்கம்
இரா.இரமேஷ்

# ஜனநாயகம்(ன்)



என்னாங்க! எங்க கிளம்பிகிட்டு இருக்கீங்க....
எங்கேயும் போகாதீங்க....
ஏன் எதுக்கு., என்ன வெளியே போகாதீங்க
ன்னு சொல்ற.....!
யாராவது விருந்தாளி நம்ம வூட்டுக்கு வராங்களா? என்றார் தர்மராஜன்.
விருந்தாளி யாரும் வரல...
தேர்தல் வருதுல்ல...!
தேர்தல் வந்தா என்ன?
நாமதான் ஓட்டு போட போறோமுல்ல.....!
அதுக்கென்ன இன்னும் இரண்டு நாள் இருக்குல்ல.....
ஏங்க....நான்தான் இரண்டு நாளைக்கு முன்னாடி சொன்னேன்ல....
என்ன சொன்னே....எனக்கு எதுவும் ஞாபகம் இல்லியே......
ஆமாம்...எல்லாம் மறந்துதான் போகும் உங்களுக்கு!
ஆனா என்னை திட்டுவதும் மட்டும் உங்களுக்கு மறக்காதே.......!
சரி. இப்ப என்ன வேணும் சொல்லு என்றார் தர்மராஜன்...
அதற்கு அவரது மனைவி வேதவல்லி,
தேர்தலுக்கு வீட்டுக்கு வீடு பணம் கொடுத்துட்டு வராங்கலாம்..! நீங்க பாட்டுக்கு வெளியே போயிடாதீங்க...
என்று கணவருக்கு கட்டளை பிறப்பித்தாள்.....!
எதுக்கு இப்ப என்னை வெளியே போகாதீங்குற...
பணம் கொடுத்தா...நமக்கு என்ன? அந்த பணத்தை யெல்லாம் நம்ம கையால தொடவே கூடாது....
தெரிஞ்சிக்க...
நாம வாங்கிகிட்டு வோட்டு போடறதுக்கு பேரு என்னா தெரியுமா?
அவுங்க கொடுக்கற பணத்துக்கு பேரு என்னான்னு தெரியுமா?
ஏங்க! பணத்துக்கு பேரு பணம்தானேன்னுதானே சொல்லுவாங்க!
அது நல்ல விசயத்துக்கு கொடுக்கற பணத்துக்கு பேரு...!
நாம இந்த நாட்டு குடிமகனுங்குறதை நிருபிக்க நமக்கு அரசாங்கம் கொடுக்கற உரிமை! அந்த உரிமையை நிலைநாட்ட தேர்தல்ல அவசியம் வாக்களிக்க வேண்டியது ஒவ்வொரு இந்தியனுக்கும் உள்ள கடமை!
நமக்கு கிடைச்சிருக்கிற இந்த உரிமைக்கு, நாம் அரசியல் கட்சிகிட்ட பணம் வாங்கிட்டா அதுக்கு பேரு லஞ்சம்கிறது பல பேருக்கு தெரியாமலே இருக்கு! அது தெரிஞ்சி போச்சின்னு வச்சிக்க; இந்த கருமத்தை யாரும் தொடவே மாட்டாங்க....
என்னாங்க. வீட்டுக்கு வர்ற லட்சுமியே வேணாம்னு சொன்னா அப்புறம் நமக்கு கஷ்டம் ஏதும் வந்துறாதுங்கில்ல...!
இந்த பணத்துக்கு பேரு லட்சுமி இல்ல...
லஞ்சம்னு பேரு...அதை முதல்ல தெரிஞ்சிக்க...
பாமர ஜனங்களுக்கு இருக்கற பொருளாதார நெருக்கடியில இதை பத்தியெல்லாம் அவங்களுக்கு தெரியறதுக்கு வாய்ப்பே இல்லை...!
எல்லாமும் தெரிஞ்ச நாம இந்த தவறை செய்யக்கூடாது...!
அப்படி பணத்தை வாங்கிகிட்டு அவங்க சொல்ற நபருக்கு நாம ஓட்டு போட்டா, அதுக்கு பேரு ஜனநாயக கடமை! இல்ல.....!
அதனால இதெல்லாம் நமக்கு வேண்டாம்.....
நமக்கு கிடைச்சிருக்கற " ஜனநாயக உரிமை" யை எந்தவொரு வேட்பாளர்கிட்டேயும் எதுவும் வாங்காம , நம்ம நாட்டோட ஜனநாயகத்தை, நம்முடைய ஜனநாயக உரிமையை காப்பாற்றுவோம்....!
என்று தர்மராஜன் சொன்னதைக் கேட்டு தன் கண்ணத்தில் கை வைத்து நின்றாள் வேதவல்லி......!

-தமிழ்ச் செம்மல்
நன்னிலம்
இளங்கோவன்.

# மாயக்கண்ணன் லீலை (பாகம் -9)



- எம்.எல்.பிரபா
ஆதம்பாக்கம்.
சென்னை 88

கோகுலத்தில் ஓர்நாள் கிருஷ்ணன் காலையில் எழுந்து தன்னுடைய நண்பர்களை சந்தித்து இன்று நாம் வனத்திற்கு சென்று வனபோஜனம் செய்யலாமா? என்று தன் ஆசையை வெளிப்படுத்தினான். அதற்கு இடைச் சிறுவர்கள் எல்லோரும் சரி போகலாம் என்று மகிழ்ச்சியுடன் கூறினர். கிருஷ்ணன் கொம்பூதி மற்ற சிறுவர்களையும் எழுப்பிவிட்டு, தன்னுடைய கன்றுகளை முன்னே போக விட்டார். சக வயதுடைய நண்பர்கள் எல்லோரும் தங்களுடைய உணவுகளை கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். கிருஷ்ணனும் தன்னுடைய உணவை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் புறப்பட்டான். பிரம்பு, கொம்பு வாத்தியம், புல்லாங்குழல், போன்றவற்றை எடுத்துக் கொண்டு வனத்திற்கு சென்றார்கள். இடைச் சிறுவர்கள் தங்கள் கன்று கூட்டங்களை கிருஷ்ணனுடைய கன்று கூட்டதுடன் சேர்த்து ஆங்காங்கே கன்றுகளை மேய விட்டனர். கிருஷ்ணனின் பால லீலைகளில் சந்தோஷம் அடைந்தனர். கிருஷ்ணனும் மற்ற சிறுவர்களும் துளிர், பூங்கொத்து, மலர், மயிலிறகு, போன்றவற்றால் தங்களை அலங்கரித்துக் கொண்டனர். மேலும் அவர்கள் வனத்தில் விளையாட ஆரம்பித்தனர். அவர்கள் 'ஒருவருடைய உரியை எடுத்து ஒளித்து வைத்து மற்றொருவர் அதை கண்டுபிடிப்பது ,அப்படி கண்டுபிடித்தால் அந்த இடத்திலேயே வைத்து விட வேண்டும். இல்லாவிட்டால் சிறிது தூரம் சென்று ஓடி கிண்டல் செய்துவிட்டு பிறகு திரும்ப கொடுத்துவிட வேண்டும்' என்று குழந்தைகள் விளையாடினார்கள். காட்டில் அழகான இடங்களை பார்ப்பதற்காக கிருஷ்ணன் சிறிது தூரம் சென்றான். மற்ற சிறுவர்களும் அவனுக்கு முன்னே சென்று என்னை பிடி என்று கூறிக் கொண்டே ஓடினார்கள். எல்லா சிறுவர்களும் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். ஒரு சிலர் புல்லாங்குழலை ஊதுவதும், சிலர் கொம்பை ஊதுவதும், சிலர் வண்டுகளை பிடிப்பதும் ,சிலர் குயிலை போல் கூவுவதும், சிலர் பறவையின் நிழலைத் தொடர்ந்து ஓடுவதும், சிலர் அன்னங்களுடன் ஒய்யாரமாக நடை போடுவதும், கொக்குகளுடன் உட்கார்ந்து கொண்டும், சிலர் மயில்களுடன் ஆடிக்கொண்டும், சிலர் ஆறுகளில் நீந்திக் கொண்டும் ,சிலர் எதிரொலி சத்தத்தை கேட்டு மீண்டும் கத்துவதும், மிகவும் ஆனந்தமாய் இருந்தார்கள். கிருஷ்ணனும் அவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். அந்த மகிழ்ச்சியான காட்சி கண்டு கோபம் கொண்ட "அகன்" என்னும் கொடிய அசுரன் அவர்களை அணுகினான் .இந்த "அகாசுரன்" பூதனைக்கும், பகா சுரனுக்கும், சகோதரன்ஆவான். இவனும் கிருஷ்ணனை கொல் வதற்காக அனுப்பப்பட்ட அசுரர்களில் ஒருவன் தான், இந்த அகாசுரன். இவன் கிருஷ்ணன் தன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருப்பதை பார்த்து கோபம் கொண்டான் .எனது உடன்பிறந்த சகோதரி பூதனை மற்றும் சகோதரர் பகாசுரனையும் வதம் செய்தவன். இந்த கிருஷ்ணன் தானே? 'கிருஷ்ணனையும் அவனது நண்பர்கள் மற்றும் கன்றுகளையும் கூண்டோடு அழித்து விடுவேன் என மனதில் உறுதி கொண்டான். அதனால் 'அகாசுரன்' ஒரு பெரிய மலை போன்று பருத்து, தன்னுடைய வாயை குகை போன்று திறந்து வைத்து, பெரிய மலைப்பாம்பு போன்ற உருவத்தை எடுத்தான். சிறுவர்களை எப்படியாவது விழுங்கி விட வேண்டும் என வழியிலேயே படுத்துக் கொண்டான். அதைப் பார்த்து சிறுவர்கள் பிருந்தாவனத்தில் மலைப்பாம்பு போன்று ஒரு இடம் உள்ளது என்றும் குகையின் வாயில் வழியாக உள்ளே சென்று விளையாடலாம் என்றும் சிறுவர்கள் எண்ணினார்கள். ஆனால் கிருஷ்ணன் உள்ளே செல்வதை தடுத்தான். ஆனாலும் அந்த சிறுவர்கள் கேட்காமல் உள்ளே நுழைய ஆரம்பித்தார்கள். பின்னே கன்றுகளும் செல்ல ஆரம்பித்தது. அந்த 'அகாசுரன்' அனைவரையும் விழுங்க ஆரம்பித்தான். உடனே கிருஷ்ணனும் சிறிது நேரம் யோசித்து விட்டு அவனும் உள்ளே சென்றான். இதை தேவலோகத்தில் இருந்து பார்த்த தேவர்கள் "ஐயோ" என கத்தினார்கள். அ காசுரனுடைய உறவினர் மற்றும் பிற அசுரர்கள் ஆரவாரம் செய்து மகிழ்ச்சியுடன் கத்தினார்கள். கிருஷ்ணன் சிரி த்தபடியே அந்த அசுரனின் தொண்டைப் பகுதிக்குச் சென்று மெல்ல மெல்ல தன்னுடைய உருவத்தை பெரிதாக்கினான். பெரிய உடல் படைத்த அந்த அசுரனின் மூச்சுக்காற்று உள்ளே வராமலும் வெளியில் செல்லாமலும் மூச்சு திணறல் ஏற்பட்டு விழி பிதுங்கின. அவன் எப்படியாவது கிருஷ்ணனையும் மற்றவர்களையும் மொத்தமாக விழுங்க முயன்றான் .ஆனால் அவனால் முடியவில்லை. அவனுடைய உயிர், மூச்சு முட்டி முட்டி அவனுடைய தலையை பிளந்து கொண்டு வெளியே சென்றது. அவன் இறந்து விட்டான் என தெரிந்த பிறகு கிருஷ்ணன் தன்னுடைய நண்பர்களையும், கன்றுகளையும் உயிருடன் எழுப்பி அவனுடைய வாயிலிருந்து எல்லோரையும் வெளியே அழைத்து வந்தான் .மேலிருந்து பார்த்த தேவர்கள் பரவசம் அடைந்தார்கள். பூ மாரி பொழிந்தார்கள்.அ காசுரன் விரோதியானாலும் பகவானுடைய சேர்க்கை ஏற்பட்டதால் அரக்கி பூதனையைப் போல் இவனும் மோட்சம் அடைந்தான்.





தொடரும்..

# விபூதி உருவான கதை





பர்னநாதன் என்பவன் உணவையும் தண்ணீரையும் மறந்தவனாக சிவனை நினைத்து கடும் தவம் புரிந்தான். ஒருநாள் அவனுக்கு கடுமையான பசி எடுத்தது. தவம் கலைந்தது. கண்ணைத் திறந்தான். அப்போது அவனை சுற்றி சிங்கங்களும், புலிகளும், பறவைகளும் என பல வன உயிரினங்கள் யாவும் காவலுக்கு இருந்தன.

பசியால் முகம் வாடி இருந்தவனைக் கண்ட பறவைகள் பழங்களைப் பறித்து பர்னநாதன் முன் வைத்தன. 'இது ஈசனின் கருணையே' என்று மகிழ்ந்து பசி தீர கனிகளை சாப்பிட்டு முடித்து மீண்டும் தவத்தை தொடர்ந்தான். இப்படியே பல வருடங்கள் கடந்தோடின.

தவத்தை முடித்து கொண்டு சிவ வழிபாட்டைத் தொடங்கினான். ஒருநாள் தர்ப்பைப் புல்லை அறுக்கும் போது அவன் கையில் கத்தி பட்டு இரத்தம் கொட்டியது.

ஆனால் அவனுக்கோ எந்த பதற்றமும் இல்லை. குழந்தைக்கு ஆபத்து என்றால் தாய் பதறுவதை போல பதறியது ஈசன் தான்.

சிவபெருமான் வேடன் உருவில் தோன்றி , பர்னநாதன் கையை பிடித்து பார்த்தார். என்ன ஆச்சரியம்! இரத்தம் சொட்டிய இடத்தில் விபூதி கொட்ட ஆரம்பித்தது. வந்தது உலகையே காக்கும் தாயுமானவர் என்பதை அறிந்தான் பர்னநாதன்.
இரத்தத்தை நிறுத்தி சாம்பலை கொட்டச் செய்த தாங்கள் நான் வணங்கும் சர்வேஸ்வரன் என்பதை நான் அறிவேன்.

இந்த அடியேனுக்கு தங்கள் சுய உருவத்தை காணும் பாக்கியம் இல்லையா ?" என்று வேண்டினான் பர்னநாதன்.

அவனது வேண்டுகோளுக்கு மனம் இரங்கி ஈசன் தமது சுயரூபத்தில் காட்சிக் கொடுத்தார்.

உனக்காகவே இந்த சாம்பலை உருவாக்கினேன். அதனால் இந்த சாம்பல் இன்று முதல் விபூதி" என்று அழைக்கப்படட்டும். உன் நல்தவத்தால் விபூதி உருவானது.

அக்னியை எதுவும் நெருங்க முடியாததை போல, இந்த விபூதியை பூசி அணிந்து கொள்பவர்களின் அருகில் துஷ்ட சக்திகள் எதுவும் நெருங்காது. விபூதி என் ரூபம். அதற்கு நீயும் துணையாக இருந்து வா" என்று ஆசி வழங்கினார் சிவபெருமான்.

**விபூதி அணியும் முறை:**

விபூதியை கட்டை விரலாலும், மோதிர விரலாலும் சேர்த்து எடுத்து மோதிர விரலால் நெற்றியில் இட்டுக் கொள்ள வேண்டும்.

ஆனால் கட்டை விரலும் நடுவிரலும் சேர்ந்து விபூதியை எடுக்கக்கூடாது. கட்டைவிரலாலும் நெற்றியில் விபூதியை வைக்க கூடாது என்கிறது சிவபுராணம். விபூதியால் என்ன நன்மை?

'விபூதி அணிவதால் என்ன நன்மை?' என்று ஸ்ரீஇராமர், அகத்திய முனிவரிடம் கேட்டார்.

பகை, தீராத வியாதி, மனநல பாதிப்பு, செய்வினை பாதிப்பு இப்படி எது இருந்தாலும் தொடர்ந்து விபூதியை அணிந்து வந்தால் அந்த பிரச்சனைகள் விலகும்", என்று அகத்திய முனிவர் ஸ்ரீஇராமருக்கு உபதேசம் செய்தார்.

ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு உகந்ததும் விபூதி. அதனை விரும்பி விபூதி கலந்த நீரில் தினமும் அவள் நீராடுகிறாள். திரு என்றால் மஹாலக்ஷ்மி.

அதனால்தான் விபூதியை திருநீறு என அழைக்கிறோம்.

மந்திரம் ஆவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு
துதிக்கப் படுவது நீறு
வேதத்தில் உள்ளது நீறு
வெந்துயர் தீர்ப்பது நீறு
காண இனியது நீறு
கவினைத் தருவது நீறு
தேசம் புகழ்வது நீறு
திரு ஆலவாயான்
திருநீறே!

ஓம் நமசிவாய!

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!



**ப.கோபிபச்சமுத்து,**
பாரதியார் நகர்,
புதுப்பேட்டை
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் வி.கலியாணசுந்தரனார் வரலாறு

திரு. வி. கலியாணசுந்தரனார்
1935 இல் திரு. வி. க. பிறப்பு
திருவாரூர் விருதாச்சல கல்யாணசுந்தரம்
26 ஆகத்து 1883
தண்டலம் காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா இறப்பு 17 செப்டம்பர் 1953 (அகவை 70)
பணி தமிழறிஞர், செயற்பாட்டாளர்

திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார் அல்லது திரு. வி. க., (THIRU. V. KALY-ANASUNDARAM, 26 ஆகத்து 1883 17 செப்டம்பர் 1953[1]) அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதிய தமிழறிஞர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரது தமிழ்நடையின் காரணமாக இவர் தமிழ்த்தென்றல் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.

வாழ்க்கைச் சுருக்கம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் துள்ளம்(தற்போது தண்டலம்) என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார் - சின்னம்மா தம்பதிகளுக்கு ஆறாவது மகனாகப் பிறந்தார்.

கலியாணசுந்தரனாரின் தந்தை இலக்கியப் பயிற்சியும் இசைப்பயிற்சியும் உடையவர். ஆசிரியத் தொழிலுடன் வணிகமும் புரிந்தவர். ஆசிரியராகத் திருவாரூரில் பணி செய்த போது கலியாணசுந்தரமும் அங்கேயே வளர்ந்தார். இவர் பச்சையம்மாள் என்பவரை மணந்து மூன்று ஆண்களையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றார். இவ்வம்மையார் இறந்த பின்னர் சின்னம்மாள் என்பாரை மணந்து நான்கு ஆண் மக்களையும் நான்கு பெண் மக்களையும் பெற்றார். இவர்களுள் ஒருவரே கல்யாணசுந்தரனார்.

கல்வி

தொடக்கத்தில் தம் தந்தையிடம் கல்வி பயின்றார். பின்னர் சென்னையில் இராயப்பேட்டையில் தங்கி ஆரியன் தொடக்கப் பள்ளியில் சேர்ந்தார். அதன் பின்னர், 1894-இல் வெஸ்லி பள்ளியில் நான்காம் வகுப்பில் சேர்ந்தார். அங்கு அவருக்கு ஒரு காலும் ஒரு கையும் முடங்கின. இதனால் பள்ளிப் படிப்பு சிறிது காலம் தடைப்பட்டது. படிப்பில் நல்ல திறமையுடையவராக விளங்கினார். 1904-ஆம் ஆண்டில் ஆறாம் படிவத் தேர்வு எழுத முடியாமல் போனது. அத்தோடு அவரது பள்ளிப் படிப்பும் முடிந்தது.

தமிழ்க் கல்வி

திரு. வி. க அவர்களின் உருவம் பொறித்த அஞ்சல் தலை



உவெசுலி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை என்ற தமிழறிஞரிடம் நட்பு ஏற்பட்டது. அவரிடம் தமிழ் பயிலத் தொடங்கினார். அவரிடம் தமிழ் நூல்களை முறையாகப் பயின்று சிறந்த புலமை பெற்றார். கதிரவேற்பிள்ளை நீலகிரிக்குச் சென்ற பொழுது அங்கு காலமானார். அதன் பின்னர் கல்யாணசுந்தரனார் மயிலை தணிகாசல முதலியாரிடம் தமிழ், மற்றும் சைவ நூல்களையும் பாடம் கேட்டார்.

**ஆசிரியப் பணி**

1906-ஆம் ஆண்டில் ஸ்பென்சர் தொழிலகம் என்ற ஆங்கில நிறுவனத்தில் கணக்கர் ஆகச் சேர்ந்தார். அக்காலத்தில், பால கங்காதர திலகர் போன்றோரின் விடுதலைக் கிளர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டதனால் அவ்வேலையிலிருந்தும் அவர் நீங்கினார். பின்னர் 1909-இல் ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து ஆறு ஆண்டுகள் பணி புரிந்தார். அப்போது கமலாம்பிகை என்ற நங்கையை 1912-இல் திருமணம் செய்துகொண்டார்.அவருக்கு இரண்டு பிள்ளைகளும் பிறந்தனர். 1918-ஆம் ஆண்டிற்குள் தம் மனைவி, பிள்ளைகளை இழந்து மீண்டும் தனியரானார். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமை ஆசிரியராகச் சேர்ந்தார். நாட்டிற்கு உழைப்பதற்காக அவர் அப்பணியில் இருந்து விலகினார்.

**பத்திரிகைப் பணி**

பின்னர் தேசபக்தன் என்ற பத்திரிகையில் இரண்டரை ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பின்னர் திராவிடன், நவசக்தி போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்து நாட்டு விடுதலைக்குத் தொண்டாற்றினார்.

**அரசியல் பணி**

தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர்களின் உரிமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். சிறந்த மேடைப் பேச்சாளரான இவர் அரசியல், சமுதாயம், சமயம் எனப் பல துறைகளிலும் ஈடுபாடுகொண்டு பல நூல்களை எழுதினார்.

எழுதிய நூல்கள்

வாழ்க்கை வரலாறுகள்

யாழ்ப்பாணம் தந்த சிவஞானதீபம், நா.கதிரைவேற்பிள்ளை சரித்திரம் - 1908
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் - 1921
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை - 1927
நாயன்மார் வரலாறு - 1937
முடியா? காதலா? சீர்திருத்தமா? - 1938
உள்ளொளி - 1942
திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 1 - 1944
திரு.வி.க வாழ்க்கைக் குறிப்புகள் 2 - 1944

உரை நூல்கள்

பெரிய புராணம் குறிப்புரையும் வசனமும் - 1907
பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் விருத்தியுரையும் - 1923
காரைக்கால் அம்மையார் திருமுறை - குறிப்புரை - 1941
திருக்குறள் - விரிவுரை (பாயிரம்) - 1939
திருக்குறள் - விரிவுரை (இல்லறவியல்) 1941

**அரசியல் நூல்கள்**

தேசபக்தாமிர்தம் - 1919
என் கடன் பணி செய்து கிடப்பதே - 1921
தமிழ்நாட்டுச் செல்வம் - 1924
தமிழ்த்தென்றல் (அல்லது) தலைமைப்பொழிவு - 1928
சீர்திருத்தம் (அல்லது) இளமை விருந்து - 1930. (இதன் ஒரு பகுதியை ஒலிப்பு வடிவில் இங்கு காணொலி)
தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு 1 - 1935
தமிழ்ச்சோலை கட்டுரைத் திரட்டு 2 - 1935
இந்தியாவும் விடுதலையும் - 1940
தமிழ்க்கலை - 1953

**சமய நூல்கள்**

சைவசமய சாரம் - 1921
நாயன்மார் திறம் - 1922
தமிழ்நாடும் நம்மாழ்வாரும் - 1923
சைவத்தின் சமசரசம் - 1925
முருகன் அல்லது அழகு - 1925
கடவுட் காட்சியும் தாயுமானவரும் - 1928
இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம் - 1929
தமிழ் நூல்களில் பௌத்தம் - 1929
சைவத் திறவு - 1929
நினைப்பவர் மனம் - 1930
இமயமலை (அல்லது) தியானம் - 1931
சமரச சன்மார்க்க போதமும் திறவும் - 1933
சமரச தீபம் - 1934
சித்தமார்க்கம் - 1935
ஆலமும் அமுதமும் - 1944
பரம்பொருள் (அல்லது) வாழ்க்கை வழி - 1949

**பாடல்கள்**

முருகன் அருள் வேட்டல் - 1932
திருமால் அருள் வேட்டல் - 1938
பொதுமை வேட்டல் - 1942
கிறிஸ்துவின் அருள் வேட்டல் - 1945
புதுமை வேட்டல் - 1945
சிவனருள் வேட்டல் - 1947
கிறிஸ்து மொழிக்குறள் - 1948
இருளில் ஒளி - 1950
இருமையும் ஒருமையும் - 1950
அருகன் அருகே (அல்லது) விடுதலை வழி - 1951
பொருளும் அருளும் (அல்லது) மார்க்ஸியமும் காந்தியமும் - 1951
சித்தந் திருத்தல் (அல்லது) செத்துப் பிறத்தல் - 1951
முதுமை உளறல் - 1951
வளர்ச்சியும் வாழ்வும் (அல்லது) படுக்கைப் பிதற்றல் - 1953
இன்பவாழ்வு - 1925

**பயண இலக்கிய நூல்கள்**

இலங்கைச் செலவு (இலங்கைப் பயணம் குறித்த தொகுப்பு நூல்)

**பொதுவுடைமை தொடர்பான கட்டுரைகள்**

தொழிலாளர் லட்சியங்களைப் பற்றி
ஓர் இந்திய ஒர்க் ஷாப்பிலிருந்து
கர்னாடிக் மில் வேலைநிறுத்தம்
தொழிலாளர் நிலையும் சென்னை சர்க்காரும்
இந்திய தொழிலாளரின் சர்வதேச நோக்கு
ஆம்ஸ்டர்டாம் சர்வதேச ஸ்தாபனமும், மாஸ்கோ சர்வதேச ஸ்தாபனமும்
பெரம்பூர் பட்டாளத்தில் போலீஸ் அட்டூழியம்
வேலைநிறுத்த உரிமை - கில்பர்ட் ஸ்லேடருக்குப் பதில்
மில் வட்டாரத்துக் கலகங்கள்

# "கர" வெளியீட்டை ஒட்டி ரசிகர்களுக்கு இயக்குநர் விடுத்த கோரிக்கை



இயக்குநர் விக்னேஷ் ராஜா மற்றும் நடிகர் தனுஷ் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் "கர". வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் தயாரித்துள்ள இந்தப் படத்தில் தனுஷுடன் ஜெயராம், ரவிக்குமார், கருணாஸ், மமிதா பைஜு ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஜி.வி. பிரகாஷ் குமார் படத்திற்கு இசையமைத்துள்ளார். வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கே. கணேஷ் இப்படத்தைத் தயாரித்துள்ளார். இப்படத்திற்கு தணிக்கைக் குழு 'யு/ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது. இந்தப் படத்தின் வெளியீட்டை ஒட்டி இயக்குநர் விக்னேஷ் ராஜா ரசிகர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.


இது குறித்த எக்ஸ் தள பதிவில், "கரவின் பயணம் பல வழிகளில் சிறப்பானது. கர உலகெங்கும் வெளியாகிறது. நீங்கள் அதை திரையரங்குகளில் பார்ப்பீர்கள் என்று நம்புகிறேன்.

உங்களுக்கு இந்தப் படம் பிடித்திருந்தால், மற்றவர்களுக்கு கதையை சொல்லி கெடுக்காமல், இதைப் பற்றி மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். திரையரங்குகளில் சந்திப்போம்," என்று குறிப்பிட்டுள்ளார்.



நடிகை கல்யாணி பிரியதர்ஷன் தற்போது இளசுகளை அதிகம் கவர்ந்த ஹீரோயின்களில் ஒருவராக மாறி இருக்கிறார். லோகா படம் இந்திய அளவில் வரவேற்பை பெற்ற நிலையில் அடுத்து ஹிந்தி படம் ஒன்றில் அவர் நடித்து வருகிறார். இந்நிலையில் கல்யாணி அழகிய உடையில் எடுத்த லேட்டஸ்ட் போட்டோஷூட் ஸ்டில்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது. பல திருமண நிகழ்ச்சிகள் வருவதால் இப்படி போட்டோஸ் அதிகம் எடுப்பதாக அவர் கூறியுள்ளார்.

# 'மனிதன் தெய்வமாகலாம்' படத்தின் OTT ரிலீஸ் அப்டேட்



இயக்குநர் டென்னிஸ் மஞ்சுநாத் இயக்கத்தில் செல்வராகவன் நடித்துள்ள படம் 'மனிதன் தெய்வமாகலாம்'. விஜயா சதீஷ் இந்தப் படத்தை தயாரித்துள்ளார்.

இப்படத்தில் குஷி ரவி, வை.ஜி. மகேந்திரன், மைம் கோபி, கௌசல்யா, சதீஷ், லிர்திகா, என். ஜோதி கண்ணன் உள்ளிட்ட பலர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர். ஏ.கே.ப்ரியன் இசையமைத்துள்ள இப்படத்தின் ஒளிப்பதிவு பணிகளை ரவி வர்மா மேற்கொண்டார். இப்படத்தின் டீசர் மற்றும் பாடல்கள் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்ற நிலையில், இப்படம் கடந்த 10-ந்தேதி திரையரங்குகளில் வெளியானது.

இந்த நிலையில், 'மனிதன் தெய்வமாகலாம்' படத்தின் ஓ.டி.டி. வெளியீடு குறித்து அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, உழைப்பாளர் தின மற்றும் வார விடுமுறையையொட்டி நாளை மறுநாள் முதல் சன் என்எக்ஸ்டி-ல் கண்டு களிக்கலாம்.

# 'TN 2026' நாளை ஓடிடியில் வெளியீடு... எதில் பார்க்கலாம்?



2026 தமிழ்நாடு தேர்தல் களத்தை அடிப்படையாக கொண்டு உருவான நகைச்சுவைப் படம் 'டிஎன் 2026'. இப்படம் கடந்த 14-ந்தேதி திரையரங்குகளில் வெளியானது. இப்படத்தின் மூலம் இயக்குநராக களம் இறங்கினார் உமாபதி ராமையா.

இப்படத்தில் நடிகர் நட்டி நாயகனாக நடிக்க இவருடன் சிருத்தா ராவ், சாந்தினி தமிழரசன், யாஷிகா ஆனந்த், எம். எஸ். பாஸ்கர், இளவரசு, தம்பி ராமையா மற்றும் ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்து இருந்தனர்.

கண்ணன் ரவி குரூப் சார்பில் கண்ணன் ரவி மற்றும் தீபக் ரவி ஆகியோர் இப்படத்தை தயாரித்தனர். படம் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெற்ற நிலையில், தற்போது ஓ.டி.டி.யில் வெளியாவது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 'டிஎன் 2026' நாளை முதல் பிரபல ஓ.டி.டி. தளமான பிரைம் வீடியோவில் வெளியாகிறது. மேலும் இப்படத்தை சிம்பிளி சௌத், ஷார்ட் ஃப்ளிக்ஸ், ஆஹா மற்றும் ஏபி இன்டர்நேஷனல் ஆகியவற்றிலும் ரசிகர்கள் கண்டு களிக்கலாம் என படக்குழு அறிவித்துள்ளது.

# யஷ் ரசிகர்களுக்கு பேரிடி... மீண்டும் 'டாக்சிக்' ரிலீஸ் ஒத்திவைப்பு

மலையாள இயக்குநர் கீது மோகன்தாஸ் இயக்கத்தில், 'ராக்கிங் ஸ்டார்' யஷ் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'டாக்சிக்'. 1940 முதல் 1970 வரையிலான காலகட்டத்தில், கோவாவில் நிலவிய போதைப்பொருள் கடத்தல் மற்றும் மாஃபியா கும்பல்களை மையமாகக் கொண்ட ஆக்ஷன் த்ரில்லர் கதையாக இந்தப் படம் உருவாகியுள்ளது.


இந்தப் படத்தில் நயன்தாரா, கியாரா அத்வானி, ஹுமா குரேஷி, தாரா சுதாரியா, சுதேவ் நாயர், அக்ஷய் ஒபராய் மற்றும் ருக்மிணி வசந்த் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இதனை படக்குழு ஏற்கனவே தனித்தனி போஸ்டர்களை வெளியிட்டு அறிவித்து இருந்தது.

இதனிடையே இந்தப் படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

இதனை தொடர்ந்து 'டாக்சிக்' படம் மார்ச் மாதம் 19-ந்தேதி வெளியாகும் என முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட போர் பதற்றத்தால் ஜூன் 4-ந்தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. இது ரசிகர்களுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் மேலும் ரசிர்களுக்கு அதிர்ச்சி அளிக்கும் விதமாக படம் வெளியீட்டு தேதி மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 'டாக்சிக்' படம் ஜூன் மாதம் வெளியாகாதது என்றும் விரைவில் வெளியீட்டு தேதி அறிவிக்கப்படும் என்றும் நடிகர் யஷ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில், நாம் உருவாக்கும் படங்கள் சில, ஆனால் சினிமா மீது நாம் ஏன் காதல் கொண்டோம் என்பதை நமக்கு நினைவூட்டும் படங்களும் சில. 'டாக்சிக்' அத்தகைய ஒரு பயணமாகவே அமைந்தது. சினிமா கான் மாநாட்டில் எங்கள் படத்தை வெளியிட்டதும், உலகளவில் கிடைத்த அமோகமான வரவேற்பைக் கண்டதும், இந்தப் படம் உலகெங்கிலும் அதன் முழுமையான ஆற்றலை அடையத் தகுதியானது என்ற எங்கள் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியது.

'டாக்சிக்' படம் நிறைவடைந்துவிட்டது, தற்போது நாங்கள் உலகளாவிய விநியோகம் மற்றும் கூட்டாண்மைகளை ஒருங்கிணைத்து வருகிறோம். இதன் காரணமாக, எங்கள் வெளியீட்டு கால அட்டவணையை மறுசீரமைக்க முடிவு செய்துள்ளோம். முன்னதாக அறிவித்தபடி ஜூன் மாதம் வெளியாகாதது என்றாலும், பின்னர் உலகளவில் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு தேதியில் வெளியிடப்படும். 'டாக்சிக்' விரைவில் உலகெங்கிலும் உள்ள திரையரங்குகளுக்கு வரும்.



இந்திய சினிமா தனது குரலைக் கண்டறிந்து, மிகுந்த நம்பிக்கையுடன் உலக அரங்கில் அடியெடுத்து வைக்கும் இக்காலத்தில், தரத்தை உயர்த்துவது நம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும். ஒரு நடிகர்-தயாரிப்பாளராக, இந்தியத் திரையுலகிற்கும் நம் அனைவருக்கும் எனது பங்களிப்பைச் செய்வதற்கான ஒரு வாய்ப்பாக இந்தத் தருணத்தை நான் காண்கிறேன். நமது படம் உலகை அது ஏற்படுத்த வேண்டிய தாக்கத்துடன் சென்றடைவதை உறுதிசெய்ய நேரம் ஒதுக்குவதன் மூலம் இதைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு அடியிலும், ஒவ்வொரு மாற்றத்திலும் உங்கள் ஆதரவு என்னுடன் நிலைத்திருக்கிறது, அதை நான் நன்றியுணர்வுடன் போற்றுகிறேன். சில கதைகளுக்குப் பொறுமை தேவை. சில பயணங்களுக்கு அது அவசியமாகிறது. நீங்கள் ரசித்து மகிழக்கூடிய ஒரு திரைப்படத்தையும், இந்திய சினிமாவுக்கு ஒரு பெருமைக்குரிய தருணமாகத் திகழும் ஒரு திரைப்படத்தையும் உங்களுக்கு வழங்குவதாக நாங்கள் உறுதியளிக்கிறோம் என்று கூறியுள்ளார்.



கிளாமர் லுக் என்றாலும் சரி, ஹோம்லி லுக் என்றாலும் சரி.. இரண்டிலுமே ரசிகர்களை கவர்ந்து வருபவர் மாளவிகா மோகனன். அவருக்கு தமிழ், தெலுங்கில் அதிகம் ரசிகர்கள் இருக்கிறார்கள். நடிகை மாளவிகா மோகனன் நேற்று நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள ஷார்ட் உடையில் மிக மிக கவர்ச்சியாக வந்து இருக்கிறார்.அதன் வீடியோ மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் வைரல் ஆகி இருக்கிறது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# 'துருவ நட்சத்திரம்' படத்தை ஜூன்.15க்குள் வெளியிட நீதிமன்றம் அனுமதி!



கவுதம் மேனன் இயக்கம் மற்றும் தயாரிப்பில், விக்ரம், ரித்து வர்மா, சிம்ரன், டிடி, பார்த்திபன் உள்ளிட்டோர் நடித்துள்ளப் படம் துருவ நட்சத்திரம்.

இப்படத்தை எஸ்கேப் ஆர்டிஸ்ட் மோசன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் மதன், இயக்குனர் கவுதவ் வாசுதேவ் மேனன் உள்ளிட்டோர் பங்குதாரர்களாக உள்ள கொண்டாடுவோம் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரித்தது. எஸ்கேப் ஆர்டிஸ்ட் தயாரித்த எனை நோக்கி பாயும் தோட்டா படம் தொடர்பான நிதிப் பிரச்சினை காரணமாக, துருவ நட்சத்திரம் படத்தில் உள்ள தனது 50 சதவீத உரிமையை புண்ணியமூர்த்தி மற்றும் பிரேம்குமார் ஆகிய இருவருக்கு மதன் வழங்கினார்.

இச்சூழலில் கடந்த 2023ல் படத்தை வெளியிட கவுதம் வாசுதேவ் மேனன் முயற்சித்தபோது, தங்களுக்கு சேரவேண்டிய தொகையை தராமல் படத்தை வெளியிட கூடாது என புண்ணியமூர்த்தியும், பிரேம்குமாரும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து படத்துக்கு தடை உத்தரவு பெற்றனர்.



நடிகை ஸ்ரீலீலா தற்போது இளசுகளை அதிகம் கவர்ந்த ஹீரோயினாக வலம் வருகிறார். அவருக்கு மிகப்பெரிய ரசிகர் கூட்டம் இருக்கிறது.

அவர் ஒரு பாடலுக்கு டான்ஸ் ஆடினால் அது மிகப்பெரிய ஹிட் ஆகிறது. அதனாலேயே அவர் நடிக்கும் படங்களில் பாடல்கள் எல்லாம் அதிகம் வரவேற்பை பெறுகின்றன. ஸ்ரீலீலா தற்போது ஹோம்லி லுக்கில் அழகாக போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.

# ரஜினிக்கு மகனாக நடிக்கும் மலையாள நடிகர்?






நெல்சனின் 'ஜெயிலர்-2' படத்தை முடித்த கையுடன், சிபி சக்ரவர்த்தி இயக்கும் புதிய படத்தில் நடிக்கவுள்ளார் ரஜினிகாந்த். கமல்ஹாசன் இந்த புதிய படத்தை தயாரிக்கிறார். இந்நிலையில் இந்த படம் குறித்த புதிய தகவல் வெளியாகி இருக்கிறது. அதன்படி இந்த படத்தில் ரஜினிகாந்தின் மகனாக மலையாள சினிமாவின் முன்னணி நடிகரான பசில் ஜோசப் நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது.

சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில், "நான் ஒரு பெரிய படத்தில் ஒப்பந்தமாகி இருக்கிறேன். தற்போது அதன் விவரங்களை தெரிவிக்க முடியாது" என்று பாசில் ஜோசப் கூறியதும் கவனிக்கத்தக்கது. சிவகார்த்திகேயனின் 'பராசக்தி' படத்தில் பசில் ஜோசப் சிறப்பு தோற்றத்தில் நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஓ.டி.டி.யில் வெளியாகும் மூன்றாம் பிறை!



பாலு மகேந்திரா எழுத்து, இயக்கம் மற்றும் ஒளிப்பதிவில், கமல்ஹாசன், ஸ்ரீதேவி நடிப்பில் கடந்த 1982ஆம் ஆண்டு வெளியானப் படம் மூன்றாம் பிறை. சத்ய ஜோதி பிலிம்ஸ் சார்பில் டி.ஜி. தியாகராஜன் படத்தை தயாரித்திருந்தார், இளையராஜா இசையமைத்திருந்தார். இப்படம் அப்போது மிகப்பெரிய ஹிட்டானது.

இப்படத்தின் 'கண்ணே கலைமானே', 'பொன்மேனி உருகுதே', 'பூங்காற்று புதிதானது' போன்ற பாடல்கள் இன்றளவும் ரசிகர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

இத்திரைப்படம் சிறந்த நடிகர் (கமல்ஹாசன்), சிறந்த ஒளிப்பதிவாளர் (பாலு மகேந்திரா) ஆகிய பிரிவுகளில் தேசிய விருதினையும், தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகளில் சிறந்த நடிகர், சிறந்த நடிகை (ஸ்ரீதேவி), சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படம் ஆகிய பிரிவுகளிலும் விருதுகளை வென்றுள்ளது.

இந்நிலையில் 44 ஆண்டுகளுக்கு பிறகு இப்படம் மீண்டும் ரிலீஸ் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் மெருகேற்றப்பட்டு, மே.1ஆம் தேதி அமேசான் ப்ரைம் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கீர்த்தி சுரேஷ், மிஷ்கின் நடிக்கும் 'சத்தியவான் சாவித்திரி' ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு!

கீர்த்தி சுரேஷ் மற்றும் இயக்குனர் மிஷ்கின் கூட்டணியில் உருவாகும் புதிய படத்திற்கு 'சத்தியவான் சாவித்திரி' என்று பெயரிடப்பட்டுள்ளது. பிரவீன் எஸ். விஜய் இயக்கும் இப்படத்தில் கீர்த்தி சுரேஷ் வழக்கறிஞர் கதாபாத்திரத்தில் நடிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அவருக்கு எதிராக வாதிடும் வழக்கறிஞராக மிஷ்கின் நடிக்கிறார். இவர்களுடன் பாலசரவணன், பாலாஜி சக்திவேல், ஆர். சுந்தர்ராஜன் உள்ளிட்ட பல நட்சத்திரங்கள் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு சாம். சி.எஸ் இசையமைக்கிறார். ஜீ ஸ்டுடியோஸ் படத்தை தயாரிக்கிறது.

கடந்த செப்டம்பர் மாதம் பூஜையுடன் தொடங்கப்பட்ட இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



நடிகை க்ரித்தி ஷெட்டி தற்போது தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகைகளில் ஒருவராக இருக்கிறார். இருப்பினும் தமிழில் அவர் நடித்த வா வாத்தியார், LIK போன்ற படங்கள் பெரிய அளவில் வரவேற்பை பெறவில்லை.

அதனால் அடுத்து அவர் நடிக்கும் படங்களில் அவர் அதிகம் கவனம் செலுத்தி வருகிறார். தற்போது க்ரித்தி ஷெட்டி அழகிய உடையில் எடுத்திருக்கும் போட்டோஷூட் ஸ்டில்களை வெளியிட்டுள்ளார். அது ரசிகர்களைக் கவர்ந்து லைக்குகள் குவிந்து வருகிறது.






### "மன்னிப்பும் ஆயுதமே!"

கையில் வன்மக்கத்தி
வைத்தவன் ஒரு உயிரை
வெல்லலாம்! இதயம்
அன்புக்கத்தி வைத்தவன்
உலகையே வெல்லலாம்!

கோபம் என்பது
கொந்தளிக்கும் நெருப்பு!
அது மற்றவரை எரிக்கும் முன்
எய்தவனைத்தான்
சாம்பலாக்கும்!

மன்னிப்பு என்பது
மழைத்துளி!
மண்ணின் மீது விழ
வையகமே பசுமையாகும்!

பகை என்பது பாறை!
மன்னிப்பு என்பது
அதைக்
கரைக்கும்
நீர்வீழ்ச்சி!

வெற்றி என்பது
எதிரியை வீழ்த்துவதல்ல!
வெறுப்பை விடுப்பதே
உண்மையான வெற்றி!

கண்ணீரால் எழுதப்படும்
ரத்தக் கதைகளை
புன்னகையால் அழிக்கும்
அதிசய அழிப்பான் மன்னிப்பு!

வாள் இல்லாமல் வெல்லும்
போராளி யாரென்றால்
கை உயர்த்தாமல்
மனந் தாழ்த்தி நிற்பவனே!.

ஆமாம்... மன்னிப்பு
என்பதோர் ஆயுதம்
காயப்படுத்தாது,
ஆனால் காயங்களை ஆற்றும்!



பழியை முடிப்பதல்ல
மன்னிப்பு!
புதிய அத்தியாயம் எழுதும்
அமைதிக் கையொப்பமே
மன்னிப்பு!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



### இப்படிக்கு காதல்

நீ அடிக்கடி கோயிலுக்குச்
செல்வதால்
உன்னைச்சுற்றுவது எனக்கு
மிகவும் வசதியாகத்தான்
இருக்கிறது!

யார் உன்னை
வரைந்தாலும்
நீ அழகாகவே இருப்பாய்!
ஆனால் நீ என்னைக்
கா த லி த் த தா ல் தா ன்
நான் அழகாக இருக்கிறேன்!
உன்னை வரையத்தான்
எனக்குத்தெரியவில்லை
கவிதையாக்கியாவது
ரசித்துக் கொள்கிறேன்!
எனக்குள் கா த லை
விதைத்துக்கனவுகளை
நிறைவேற்றியவள் நீ!
எதையெதையோ பிடித்துக்
கொண்டிருந்த என்னை
உன்னைப் பிடிக்க வைத்து
விட்டாய்!
நீ ஆடுவது
வேட்டையென்றறிந்தும்
நான் தப்பிக்க
நினைத்ததேயில்லை!
ஏனெனில் கா த ல்
எத்தனை
அழகென்று
உன்னைப்போலவே
எனக்கும்
தெரியும்!




**முத்து ஆனந்த்**
வேலூர்

கல்கி காணாத நந்தினியே
எத்தினி பெண்கள்
இப்பிரபஞ்சத்தில் பிறந்தும்
பித்தெல்லாம் பத்தினியான
உன் மீது தான்!
என் கழுத்தறுக்க
வாள் எதற்கு?
நாகப்பாம்பாய் கொல்லும்
உன் கடைக்கண்
விஷப்பார்வை
ஒரு துளி போதுமடி!
என்னை கொன்று
பாவம் சேர்த்து கொள்ளாதே
நானில்லாத இதயம்
உனதுஎன நானறிந்தால்
என்னை நானே மார்பு
பிளந்து குத்தி கொண்டு
சாகிறேன். எனக்காக
ஒரு துளி
கண்ணீர்
கொடு
நமது காதல்
பரிசாக!



**லி.நௌஷாத் கான்**



அடுக்களை
நம் பிரதேசமாகிறது..
அனல் மூட்டிப்
போகும்பொதெல்லாம்
வெந்து தணிகிறதென் காடு.
இரவின் சூரியனாய்
எப்படி ஒரு நிலவு மாறுகிறது..
கொதிக்கும் பூக்கள்..
உறைவிடம் நீ. வர்ஷிக்கத்
தொடங்கு முத்த மழை !


குவித்துப் பிடித்த
இரு கை நடுவினில்
மலரும் பூ.. உன் முகம்.
இரு கைகளுக்குள்
அடங்காத பேரன்பு நீ.

வாயேன்
கைகளுக்குள்
பிரபஞ்சம்
என்னிடம்என்று
முரசொலிப்பேன்.



**ரிஷபன்**

இளையராஜா பாடலை
கேட்டு தனிமையை
அனுபவித்தது அக்காலம்...
இப்போதெல்லாம் தானே
பாட்டு பாடி செல்ஃபோனில்
பதிவு செய்து
மற்றவர்களுக்கும்
ஷேர்
செய்கிறார்கள்
தன் தனிமை
அனுபவத்தை !



**எம்.பி. தினேஷ்.**
கோவை



### மே தினம்

நமக்கான உணவுப்
பொருட்களை மூட்டை
மூட்டையாய் லாரிகளில்
இருந்து சுமை இறக்கும்
தொழிலாளி

நாம் நல்ல சாலையில்
பயணிக்க கொளுத்தும்
வெயிலில் உருகும் தார்
ஊற்றும் தொழிலாளி

நம்முடைய நேர்த்தியான
ஆடைக்கு தெருமுனை
தள்ளு வண்டியில்
இஸ்திரி போடும்
தொழிலாளி

நமது வீடு தூய்மையுடன்
விளங்கிட எப்பொழுதும்
உழைக்கும் பணிப்பெண்

இவர்கள் யாருக்கும்
தெரியாது இன்று நாம்
அவர்களை வணங்கும்
மே தினம் என்பது

கொடியேற்றம் மட்டுமின்றி
அவர்கள் தோளில் கை
போட்டு
தோழமையுடன்
ஒரு தேநீர்
அருந்தி
மகிழ்வோமே
மே தினத்தில்



**நாகை பாலா**

ஓடுகின்ற அனைத்தும்
வெற்றி பெருவதில்லை...
ஓடாமல் இருத்தலும் வெற்றி
கிடைப்பதில்லை..

வேர்வை சிந்தினால் வெற்றி
நிச்சயம்... வேடிக்கை
மட்டும் பார்த்தால் தோல்வி
அதிசயம்...!

அறிவியல் படிக்க
வேண்டும்... அரசியல்
அனுபவிற்க வேண்டும்...

இருட்டை விரட்ட வெளிச்சம்
வேண்டும்.. கஸ்ட்டத்தை
போக்க நீ சேமிப்பு
வைத்திருக்க வேண்டும்...

மொத்தத்தில்
உழைப்பு உன்
சொத்தா
இருக்க
வேண்டும்....!!



**பொன். கருணா**
நவி மும்பை



### ஹைக்கூகள்

வெண்ணிற எழுதுகோலால்/
வெண்தாளில் வரையும்
மழலை/ மறைந்த தாயை./

எண்பது ஆண்டு
உடனிருந்தும்/ நினைவு
நாளன்று வரவில்லை/
அப்பாவின் ஆன்மா./

ரசிக்க முடியவில்லை/
காலணிகளைச் சரியாக
அணிந்து நடக்கும்
குழந்தையை./

மன்னிப்பு கோருகிறது/
மழலை சுவர்க்
கிறுக்கல்களை/
அழிக்கும் தூரிகை./

பேரனின் பள்ளிக்கட்டணம்/
அடக்கி வாசிக்கிறாள்
அம்மா/ தொடர் இருமலை./

பொத்தலான இருட்டில்/
ஒளியைப் பதித்தவாறே/
பறக்கின்றன மின்மினிகள்./

முறத்தில் பயணித்து/
குப்பைமேட்டில் விழுகின்றன/
நேற்றையப் பச்சையங்கள்./

பணியிடம் மாறும்
ஆசிரியருடன்/
புலம் பெயர்கிறது /
பத்தாம் வகுப்பு கணிதம்./

பிறந்ததும், இறந்தது/
மகப்பேறு
மருத்துவமனையில்/
'மலடி' பட்டம்./

முன்னாள் மாணவர் சந்திப்பு/
அழைப்பு விடுத்திருந்தும்/
பங்கேற்கவில்லை 'இளமை/'.

இடி முழக்கத்திற்கு பிறகு/
விட்ட:இடத்திலிருந்து /
பேசத் தொடங்கியது
மௌனம்/.

அனைத்து பறவைகளும்/
கூடடைந்ததை உறுதி
செய்து/ கறுக்கிறது அந்தி/

பூமியை நனைக்கும் மழை/
போகும்போது
தாவரங்களையும்/
ஈரமாக்கிச் செல்கிறது./

சருகாகின்றன/
பூச்சித்தாக்கி விழுந்த
இலையுடன் காற்றடித்து
உதிர்ந்த
இலையும்/

நனையாமல்
காத்திருக்கிறது/
நனைந்த
சாண்டாகிளாஸ்
வண்டிக்கு/
வழிகாட்டும் பனிப்பிறை./



**முனைவர் வே.புகழேந்தி,**
பெங்களூரு.





### வியர்வைத் துளிகளே.!

வியர்வைத் துளிகளே பேசுங்கள்..
புது விடியல் புலர்ந்திடப் பேசுங்கள்! சோர்வை நீக்கவே..
பேசுங்கள்! ஒளிச் சுடரை ஏற்றவே பேசுங்கள்!

கங்கைத் துளிகள்தான் புனிதமோ? அந்த வான
மழைத்துளிகள் புனிதமோ..? இங்கு வியர்வைத் துளிகளே
புனிதம் தான்! அது விழுந்த நிலமெலாம் புனிதமே.!

உதிக்கும் செங்கதிர் கிழக்கிலே.. அந்த உழைக்கும் தோழனின்
தடத்திலே.. கொதிக்கும் போதெல்லாம் நிலத்திலே..
ஒரு கொடிகள் பறக்குமே உயரத்திலே.!

விதைகள் உறங்குமே பாரிலே.. விதைத்தவன் உறங்குவ
தில்லையே! தேரும் திருவிழாவும் ஊரிலே..
அவன் வியர்வைத் துளிகளின் பெருக்கிலே..

கோட்டை கோபுரங்கள் உயரவே.. தினம் வியர்வை இறைத்தவன்
உதவியிலே.. பாட்டும் கலையும் நாடகமும்..
இங்கு பாட்டாளி சிந்தும் வியர்வையிலே!

உண்டு கொழுத்தவன் தர மாட்டான்.. அங்கே உழைத்து
பிழைப்பவன் விடமாட்டான்! கொண்டு வந்து எவனும்
தரமாட்டான்! வியர்வை கொட்டித் தீர்த்தவன் விடமாட்டான்!

சிந்து கங்கை குடகு காவிரியும்.. சிந்தும் வியர்வை நதி
யாகிறதே! வியர்வை நதி எங்கும் பாய்கிறதே! அதோ.. விடியல்
கண்ணில் வந்து தெரிகிறதே!

முத்து முத்தாய் அரும்பும் வியர்வைகளே..
இத்தரையின் எழுட்சி தீபங்களே! நித்திரைகள் இன்றி
உழைப்பவரின் நிலைகளை மாற்றிட வழியுங்களே!

**வே.கல்யாண்குமார்.**



### நேசித்தல் பழகிக் கொள்.!

வாசித்துப் பாரு புத்தகம் புரியும்.. நேசித்துப் பாரு உறவுகள்
விரியும்! யாசித்துப் பாரு பசி என்னத் தெரியும்.!
நேசித்து வாழு.. உலகமே விடியும்.!

கற்றது கல்வி அவர் கரங்களில் கத்தி! பெற்றது வாழ்வு.. அவர்
பார்வையில் தாழ்வு! உற்றது உயிர்கள் அதனை காத்திடல்
கடனே..! அற்றுவிழும் முன்னே நேசிப்பாய் உடனே.!

முல்லைக் கொடிக்குத் தேராகு தோழா.! வாடியப் பயிருக்கு
நீராகு தோழா.! எல்லையிலா அன்பில் அன்னையாய் மாறு..
ஆண்டவன் எங்கே? அன்பென்றே கூறு.!

மழையென பொழிந்து மண்யெனத் தாங்கு! அழையாதே எங்கும்
அன்புசெய்ய ஓடு.! தழைப்பது அன்பு.. நிலைப்பது நேசம்..
எவ்வுயிர் எனினும் வைப்பதேப் பாசம்.!

நேசிக்கப் பழகு.. மனிதர்க்கு அழகு.! நேசத்தல் சிறகு!
அதனால் வானத்தை அளந்து.. பாசத்தில் பூத்து.. இனிமேல்
நேசித்தே வாழு.! நேசித்தல் தானே நம் வாழ்வு.!

**வே.கல்யாண்குமார்.**

என்னவாம்?

அழைப்பொழிக்கிறது விழி!
எவ்வளவு நேரம்தான்
பேச்சை மட்டுமே பங்கு
வைத்துக்கொள்வது?சற்றே
பார்த்தால்தான் என்னவாம்?


பணிக்கிறது பேச்சு!

பார்வைக்கும் பேச்சிற்குமான
நூழிலை நெசவில்
இணையிழைகிறது காதல்!


அவளருந்திய தேநீர்
இவனுடைதாயும் இவனின்
உணவு அவளுடையதாயும்

அருகருகேயான இருவரின்
பேச்சும் பார்வையும் இடம்
மாறியமர்ந்து!

இப்பொழுது அவள் பார்வை
பேசுகிறது, இவன் பேச்சு
பார்க்கிறது!
பாரித்தோடிய
முதுமையின்
இக்கணத்தில்
வேறென்ன இது
தவிர்த்து?




எவ்வளவு நேரம்தான்
பார்வையில்
ஊடாடிக்கொண்டே இருப்பது,
சற்று பேசினால்தான்



**விமலன்.**

## நூல் விமர்சனம்

"ஹைக்கூ முதற்றே உலகு"
நூல் ஆசிரியர் ;
கவிஞர் இரா.இரவி !
நூல் விமர்சனம் ;
கவிஞர் ஆனந்தி !
வானதி பதிப்பகம், 23, தீன
தயாளு தெரு, தியாகராய நகர்,
சென்னை–17.
பக்கங்கள் : 154,
விலை : ரூ. 100 .
044–24342810.
vanathipathippakam@gmail.




"ஹைக்கூ முதற்றே உலகு" - கவிஞர் இரா.இரவி அவர்களின் ஹைக்கூ கவிதை நூல் தொகுப்பு..."முதற்றே உலகு" தலைப்பு மட்டும் அல்ல... நூலில் இடம்பெற்றுள்ள கருத்துகளும் திருக்குறளுக்கு, நிகரானவைகளாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.... நூலின் பெரும் பகுதியில் ஹைக்கூ வடிவமே நிறைந்திருக்கிறது.. முப்பது பக்கங்களில் சொல்ல வேண்டிய செய்திகளை மிக தெளிவாக மூன்று அடிகளுக்குள் சொல்லியிருப்பது.....வியப்பை தருகிறது....படிக்கையில், வாசகர் மனதிலும் நிலைத்து நின்று சிந்திக்கத் தூண்டுகிறது... கூடுதலாக துளிப்பா, லிமரைக்கூ, லிமர்புன், பழமொன்ரியு போன்ற பல வடிவங்களிலும் கவிதைகள் படைத்திருக்கிறார்கள்...... பல்சுவைகளிலும் தனது எழுத்தாளுமை திறனை நிரூபித்திருக்கிறார்கள்..... சிகரத்தின் சிகரம் கலாம் அவர்களை பெருமைபடுத்தும் விதமாக, நூலின் தொடக்கமே ('கலாம் 40')மிக அருமையாய், 40 ஹைக்கூகள் அமைந்துள்ளது... அடுத்தடுத்து பல்வேறு கோணங்களில் நூல் பயணித்தாலும், இறுதியில் கவிஞரின் நாட்டுப்பற்றும், சமூக அக்கறையுமே வெளிபட்டு, மேலோங்கி நிற்கிறது... "அவர் மூச்சு மட்டுமே நின்றது அவர் பற்றிய பேச்சு நிற்காது கலாம்" -கலாம் அவர்கள், தனது கடைசி நொடி வரை நாட்டிற்காகவே வாழ்ந்தவர்கள்... மாணவர்களிடம் அறிவை விதைத்தவர்கள்...எளிமையான மனிதர்....பெக்ரான அணு சோதனைகள் மூலம் உலக நாடுகளின் பட்டியலில் இந்தியாவிற்கென்று தனி இடத்தை பெற்று தந்தவர்கள்....இறந்தாலும்... அவரது புகழ் நின்று நிலைத்து வாழும்...என்பதை தான் கவிஞர் அழகாய் மூன்று அடிகளுக்குள் சொல்லியிருக்கிறார்கள்...

கைகளின்றியும் வாழலாம் கால்களின்றியும் வாழலாம் வாழ இயலாது தன்னம்பிக்கையின்றி! - தன்னம்பிக்கையூட்டும் அருமையான வரிகள்... நேர்மறை எண்ணங்களை விதைத்து சென்றிருக்கிறார்கள்.... பானையில் கற்கள் போடவில்லை உறிஞ்சியது குழல் வைத்து கணினி யுகத்தின் காகம்! -மாறி வரும் நவீன உலகத்திற்கு ஏற்ப, கவிஞர் காக்கையையும் நவீன படுத்தியிருப்பது வியக்கத்தக்கது....

காயமில்லை வானிலிருந்து விழுந்தும் மழை! - நேர்த்தியான சிந்தனை...முதல் இரண்டு அடிகளை படிக்கும் போதே.... இறுதி வாக்கியம் என்ன என்ற எதிர்பார்ப்பு அதிகமாகிறது... அருமை... இயற்கையின் கஞ்சத்தனம் வறட்சி.... -வறட்சிக்கே புது இலக்கணம் வகுத்திருக்கிறார்கள்.... வெகு சிறப்பான சிந்தனை பாராட்டத்தக்கது.... முடிவாகிறது நிதியால் சில நீதி.... -கையூட்டுக்கு எதிராக சாட்டையை சுழற்றியிருக்கிறார்கள்... வெகு நாட்களாகி விட்டன நேர்மை விடைபெற்று அரசியல்! -அரசியல் பற்றிய, தனது ஆதங்கத்தை பதிவிட்டு இருக்கிறார்கள்.... வயது அறுபது கல்லூரி மாணவர் கதாநாயகன்! -சமகால நிகழ்வுகளை அழகாய் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள்...

வாயுள்ள பிள்ளை பிழைக்கும் எல்லாப் பிள்ளைக்கும் வாயுண்டு பேசத்தெரிந்த பிள்ளை பிழைக்கும்! -எதார்த்தம்...காலத்திற்கு ஏற்றார் போல, பழமொழிகளை மாற்றியிருக்கிறார்கள்....அருமை...

தூரப்போனது தூய்மை அரசியல்... -தற்கால அரசியலுக்குஎதிராய்சாட்டையை சுழற்றி இருக்கிறார்கள்....

பூங்கொத்து, கலங்கரை விளக்கம், விழிகள், பகுத்தறிவு, கண்ணீர் போன்ற பல வித்தியாசமான பாடுபொருள்களை ஹைக்கூவோடு இணைத்திருப்பது வெகு சிறப்பு.... அனைவரும் வாசிக்க வேண்டிய பொக்கிஷம்....




### மீண்டு எழு...

தோல்வி... அது
நின்ற இடமல்ல,
சிந்திக்கச் சொன்ன இடம்.

விழுந்தது ... அது முடிவு
அல்ல, மீண்டும் எழும்
தொடக்கம்

முடியவில்லை... அது
பலவீனம் அல்ல,
வழி தேடும் அறிவு.

தடுமாறும் பாதையில்
தடமான காலடிகளே
ஓர்நாள் வழிகாட்டியாகும்.

தோல்வி... என்ற
சொல்லுக்குள்
மறைந்திருக்கும் வெற்றியின்
விதை

நீ நின்றுவிட்டால் அது
தோல்வி, நீ நகர்ந்தால் அது
அனுபவம்.


நம்பிக்கை நீர் ஊற்றினால்
நாளை மலர்வது நிச்சயம்

### ஞாபகம் வருதே

ஆலமர நிழலின் அருமை
சொல்லும்...

வயலின் பசுமைப்
போர்வை போர்த்திய
மண் மணக்கும் மாலை
நேரம்

மறந்து போன



விளையாட்டுகள் ஏராளம்

காற்றோடு உயரப் பறக்கும்
பட்டம்

கனவுகளோடு விண்ணைத்
தொடும் பார்வைகள்

வெற்றுக் காலில் ஓடும்
சிறுவர்கள்

வெற்றி குரல் கொடுக்கும்
பருவம்



சுற்றி அமர்ந்து
களிக்கும் மகிழ்ச்சி

ஞாபகம் வருதே...
சொல்லத் தோணுதே...

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

---



முதன்முதலாக என்
தோட்டத்தில்
சந்தன முல்லை
மொட்டவிழ்த்த
தருணத்தில்
உன் காதலைச்
சொன்னாய்...

மென்மையும்
மேன்மையும்
காதலென்றுணர்ந்தோம்.

ஊருக்கும் உள்ளத்து
அன்பு நிறைந்தோருக்கும்
உணர்த்த மனம்
திறந்தோம்....

பிறழ்வான சொற்களால்
பிழைத்த கணங்களில்
எல்லாம் சிதைந்தன..

உடல் மொழிகளைக் கடந்து
உள்ளத்து மொழிகள்
உறுதியானவை..

வேறுவேறாய் இலக்கிட்ட
வாழ்வில் வேராய்
பற்றிப் படர்ந்திருக்கிறது..
நம் காதல்..

காலம் தூர்ந்துபோகும்
காதல் தூர்ந்திடாத்
துலங்கும்..



**ஹரணி** தஞ்சாவூர்

---



நேர்த்தியான உடையில்
மயங்குவதன்று
நிறைந்த பேரன்பில்
பெருகிக்கிளைப்பது காதல்..

பகட்டுச் சொற்களிலோ
பரிதாபத்திலோ
பறிகொடுப்பதன்று
பண்புணர்ந்து பரிணமிப்பது
காதல்..

வீண் வித்தைகளில்
வெற்றுக் காட்சிகளில்
விளைவதன்று உண்மை
உள்ளத்து உணர்வுகளில்
பூப்பது காதல்..

ஆண்மையென்பது
நல்வினையின் நற் சான்று..
பெண்மையென்பது
பெருமையின் முத்திரை..
காதல் இரண்டின்
இணையற்ற விளைச்சல்..
ஆதலினால் காதல்
செய்வீர்

---------------------

இப்போது தெளிவற்ற காதலே
தெளிந்து மிதக்கிறது..

தெளியாத மனக்குளத்தில்
தேங்கிய அழுக்கு
எண்ணங்களில்..
கழிவே எஞ்சும் கசியும்
ஒருபோதும் காதலன்று..

விளக்கியுரைக்காமல்
விரைந்து விலகுதல்
அறிவாகும்..

**ஹரணி** தஞ்சாவூர்

---

நான் எந்தக்கட்சிக்கும்
வாக்களிக்கவில்லை.
எந்தச் சின்னத்திற்கும்
வாக்களிக்கவில்லை.
எந்த வேட்பாளருக்கும்
வாக்களிக்கவில்லை.
நான்
வாக்களித்தது
மேற்காணும்
எதற்கும்
இல்லை.



**உ.மு.ந.ராசன்**
**கலாமணி**
கோயம்புத்தூர்.

---

### துலக்கம்.!

சிறு தூறலுக்கே தெறித்து
ஓடும் ஆட்டுக்குட்டியென...
பொருள் ஈட்டிய பெருமிதக்
களைப்போடு...கோணல்
குறுக்கீடுகளை புறந்தள்ளி..
பொறுப்பாக
கூடு
திரும்புகிறான்
குடும்பஸ்தன்.!.



**க.**
**குமாரகுரு,**
மயிலாடுதுறை

---

### துணிவு வேண்டும் தோழன்

துணிவு வேண்டும்
தோழனே! துயர்தரும்
காலங்கள் யாவிலும்
தூண் போல் தளரா நெஞ்சம்
உன்னகத்து தோன்றட்டும்!

இருள் தழைக்கும்
யாமத்தினுள்ளும்
இமையா விளக்கென
எழுந்து நில்!
அணையா ஒளியாய்
உள்நெஞ்சில்
ஆக்க விடியலை வித்திடு!

"வீழ்தல்" விதியாய்
வந்தாலும் "எழுதல்"
இயல்பாய் இயங்கட்டும்!
எழுச்சியின் ஒலிகளே
எதிர்காலக் காவியம்
ஆகட்டும்!

அமைதி ஆழியில்
அமர்ந்திடில் அகத்து
அலைகள் அர்த்தம் தரும்!
நிசப்தத்தின் ஓசைகளும்
நினைவுகளை நிமிர்த்திடும்?

பயநிழல் பின்தொடர்ந்தால்
பதறாது பயணித்திடு
வியத்தகு சாதனைகள்
வழியெங்கும் காத்திருக்கும்!

கூட்டத்தின் கூக்குரலில்
கலங்காதே உன்னுள்ளம்
உரைக்கும் ஒற்றைச் சொல்
உலகெங்கும் ஒலிக்கும்
நாள் வரும் நம்பிடு!

தோல்வி மூடும் கதவல்ல
திசை காட்டும் காற்று!
திறந்து செல்பவனே
தலையெழுத்தை
மாற்றுவான்!

துணிவு வேண்டும்
தோழனே! உலகம் எழுதும்
விதியை மாற்றிப்
புதிதாய்
பொறிக்கும்
அளவு
துணிவு
வேண்டும்
தோழனே!



**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்




### இனித்திடு மே.!

தோள்தந்து சுமந்து மே..
துவலாது உழைத்து
மே.. சுற்றுகிற உலகமும்
இவனாலேச் சுழலு மே!

நாளொன்று விடியு மே..
விடிந்ததும் பசிக்கு மே..
கிடைக்கின்ற கூலியோ
கால் வயிறு நிரப்பு மே..

தாய்ப் பாலுக்கழுகு மே..
தன்பிள்ளை தவிக்கயில்
வேலைக்கு அழைக்கு மே
சங்கொன்று ஒலிக்கு மே

உழைத்தவன் உழைப்புதான்
வலுத்தவனை வளர்க்கு மே
உலகமே.. உலகமே..
உழைத்தவனை மறக்கு மே!

ஒவ்வொரு
நாளு மே
உலகத்தில்
விடியு மே..
உழைப்பவனை
நினைத்துமே..
உப்புக்கடல்
பொங்கு மே!



**வே.கல்யாண்குமார்.**

---



### மே தினம்

சிக்காகோ நகரிலே
சீறி பாய்ந்த உழைக்கும்
வர்க்கம் கள பலி பல
கொடுத்து பெற்றது
எட்டுமணி நேரப்பணி
உலகெங்கும்

உழைக்கும் வர்க்கம்
மகிழ்வுடன் கொண்டாடிடும்
நன்நாள் மே தினம்
உழைக்கும் வர்க்கம்
உரிமைகள் பல பெற்றிட
அடிகோலிய நன்நாள்
மே தினம்
உழைக்கும்
வர்க்கம்
தலைநிமிர்ந்து
நிற்க
உயிர் நீத்த
உத்தமர்களை
போற்றிடுவோம்
இந்த நன்நாளில்



**ராஜகோபாலன்.J**
பெங்களூரு

---

## சுண்டைக்காய்..!!



### காய்கறிகளிலேயே மிகவும் சின்ன காய் என்றால் அது சுண்டைக்காய்..!!

காய்கறிகளிலேயே மிகவும் சின்ன காய் என்றால் அது சுண்டைக்காய் தான் . இந்த சுண்டைக்காயை நுண் ஊட்டச் சத்துக்கள் எல்லாம் நிறைஞ்சு கிடைக்கும் சேமிப்புக் கிடங்கு என்று கூட சொல்லலாம். உடலிலுள்ள கிருமிகளை அழிப்பதிலிருந்து கொழுப்பைக் கரைப்பதுவரை நிறைய வேலைகளைச் செய்யக்கூடிய பெரிய அளவிலான மருத்துவ குணங்கள் எல்லாம் இந்த சுண்டைக்காய் தான் செய்யும். எனவே இவற்றை இயற்கையின் வரப்பிரசாதம் என்று கூட சொல்லலாம். தேவையில்லாத செல் பாதிப்புகள் எல்லாம் நம்ம உடம்புல ஏகப்பட்ட வியாதிகளை கொண்டு வந்து சேர்த்திடும்.

அது போன்ற செல் பாதிப்பு பிரச்சினை எல்லாம் இந்த சுண்டைக்காய் சாப்பிட்டா வராது. நீரிழிவு, இதய நோய் எல்லாவற்றுக்கும் ஏதுவாக உடல் பலவீனமடையும் போது நல்ல ஒரு சுறுசுறுப்பைத் தந்து உடலைத் தேற்றும் சக்தியும் இந்த சுண்டைக்காயில் இருக்கிறது. நோயற்ற வாழ்க்கைக்கு ஆன்டி ஆக்ஸிடண்ட்ஸ் ரொம்ப அவசியம். அதே போல வைட்டமின் A,C,E மாதிரியான சத்துக்களும் நம்ம உடம்புக்கு தேவை, இந்த சுண்டைக்காய்ல இந்த சத்துக்கள் எல்லாம் எக்கச்சக்கமாக இருக்கிறது.

---

## மதுரை ஸ்டைல் அயிரை மீன் குழம்பு செய்வது எப்படி..!!



தேவையான பொருட்கள்
அயிரை மீன்: 1/2 கிலோ
சின்ன வெங்காயம்: 150 கிராம் (பொடியாக நறுக்கியது)
தக்காளி: 2 (நன்கு பழுத்தது)
பச்சை மிளகாய்: 3
புளி: பெரிய எலுமிச்சை அளவு
நல்லெண்ணெய்: 50 மிலி
குழம்பு மிளகாய் தூள்: 3 டேபிள் ஸ்பூன்
மஞ்சள் தூள்: 1/4 டீஸ்பூன்
உப்பு: தேவையான அளவு
வறுத்து அரைக்க:
சீரகம்: 2 டீஸ்பூன்
மிளகு: 1 டீஸ்பூன்
தேங்காய் துருவல்: 3 டேபிள் ஸ்பூன் (தேங்காய் அதிகம் சேர்த்தால் மீனின் ருசி குறைந்துவிடும், அளவாகச் சேர்க்கவும்)

செய்முறை

மசாலா: வறுக்கக் கொடுத்த பொருட்களைச் லேசாக வறுத்து, மிக்ஸியில் நைசாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.

புளிக்கரைசல்: புளியைக் கரைத்து அதில் மிளகாய் தூள், மஞ்சள் தூள் மற்றும் உப்பு சேர்த்து ஒரு பாத்திரத்தில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

தாளித்தல்: அகலமான மண் சட்டியில் (மீன் குழம்பிற்கு மண் சட்டி தான் சிறப்பு) நல்லெண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, வெந்தயம் சேர்த்து தாளிக்கவும்.

வதக்குதல்: சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் மற்றும் கறிவேப்பிலை சேர்த்து பொன்னிறமாகும் வரை வதக்கவும். பின் தக்காளி சேர்த்து மசிய வதக்கவும்.

கொதிக்க வைத்தல்: தயார் செய்து வைத்துள்ள புளிக்கரைசலைச் சேர்த்து பச்சை வாசனை போகும் வரை நன்கு கொதிக்க விடவும். குழம்பு சற்று திக்காக வேண்டும்.

மசாலா சேர்த்தல்: அரைத்து வைத்துள்ள தேங்காய் விழுதைச் சேர்த்து ஒரு கொதி விடவும்.

மீன் சேர்த்தல்: இப்போது சுத்தமான அயிரை மீன்களைச் சேர்க்கவும். அயிரை மீன் மிகச் சிறியது என்பதால் 3 முதல் 5 நிமிடங்களில் வெந்துவிடும். மீன் போட்ட பிறகு கரண்டியால் அதிகம் கிளற வேண்டாம்.

இறுதி கட்டம்: எண்ணெய் பிரிந்து மேலே வரும்போது சிறிது நல்லெண்ணெய் பச்சையாக மேலே ஊற்றி, கறிவேப்பிலை தூவி இறக்கவும்.

மதுரை ஸ்பெஷல் டிப்ஸ்:
மண் சட்டி: இந்த குழம்பை மண் சட்டியில் செய்து ஒரு இரவு முழுவதும் அப்படியே வைத்திருந்து மறுநாள் காலையில் இட்லியுடன் சாப்பிடுவது மதுரையின் ஆகச்சிறந்த காம்பினேஷன்....

---

## பணி நிறைவு பெற்ற தலைமை ஆசிரியருக்கு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டப் பொருளாளர் வாழ்த்து



புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் பொன்னகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி இர மீனாட்சி அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட பொருளாளர் மற்றும் வட்டார செயலாளர் திரு மு சீனிவாசன் ராஜலட்சுமி தம்பதியினர் குடும்பத்தினருடன் சென்று வாழ்த்தி வணங்கினர்

## சித்ரா பௌர்ணமி கிரிவலம் செல்ல பக்தர்கள் வசதிக்காக மாட வீதிகளில் பார்வையிட்டு ஆய்வு




திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்ரா பவுர்ணமி கிரிவலம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு பக்தர்கள் வசதிக்காக திருக்கோயில் வளாகம் மற்றும் மாட வீதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை குறித்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



## ஸ்ரீ ஸ்தலஸயன பெருமாள் பரமோட்சவம் நாள் 7 காலை திருத்தேர்பிரம்மோர்சவம்





அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலை வேந்தர் தமிழ்மாமணி தாழை இரா. உதயநேசன் அவர்கள் சென்னை வருகையின்போது அண்மையில் உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றத்தின் நிறுவுநர்மற்றும் பல்கலையின் பேராசிரியர் முனைவர் கா . ந . கல்யாணசுந்தரம் அவர்களை சந்தித்தார் . சந்திப்பில் முனைவர் கா. ந . க . அவர்கள் தமது ஹைக்கூ நூல்களைக் கொடுத்து மகிழ்ந்தார் . மேலும் வேந்தர் இரா . உதயநேசன் அவர்கள் இயக்குனர் லிங்குசாமி மற்றும் திரைக்கதை வசனகர்த்தா பிருந்தாசாரதி ஆகியோரையும் அவர்களது இல்லத்தில் சந்தித்தார் . சந்திப்பில் அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலையின் செயல்பாடுகள் குறித்து உரையாடல்கள் நிகழ்ந்தன .


WANTED
சமையல்
வீட்டுவேலை
குழந்தை பராமரிப்பு
நோயாளி கவனிக்க உண
இடம் (Accomodation/Place)
சென்னை
தொடர்புக்கு: 9380476241 / 9790766391


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com



டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
2
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041


Seek Strive Succeed
Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
BANK LOAN
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர்
to
செங்கல்பட்டு ரோடு
1 to 2
ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773


துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு
ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617


EMI 50%
50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259


PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரத்தி, படப்பை
EMI Available
BANK LOAN
CONTACT: 8220711499, 8870158259


PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர்,
கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US
7550093245 / 7358696451


WANTED
OFFICE BOY
GUINDY
CALL US
7550093245 / 7358696451


WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451


WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அணுகவும். 8668107106






















## ATTENTION

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.










































திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

ஆட்கள் தேவை

ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை

கல்வி தகுதி
10 முதல் any Degree


தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com





# பல்சுவை களஞ்சியம்




# சிவனுக்கு எத்தனை கண்கள்?

வரதன் என்ற இயற்பெயர் கொண்ட காளமேகப் புலவர் திருவரங்கக் கோவிலின் மடைப்பள்ளியின் சமயல்காரர். இவரது கனவில் தோன்றிய அன்னை சரஸ்வதி தேவி, தனது தாம்பூலச் சாற்றை இவரது நாவில் உமிழ்ந்ததனால், கல்வியறிவு இல்லாத போதும், மேகம்போல் கவிமழை பொழியும் திறன் கைவரப் பெற்றார். அன்று முதல் சமையல்கார வரதன், கவிகாளமேகம் என்ற சிறப்புப் பெயரில் புகழ்பெற்றார் என்பது தொன்மம்.

ஒரு சமயம் காளமேகத்தின் நண்பர் ஒருவருக்கு சிவபெருமானின் கண்கள் பற்றி ஒரு சந்தேகம் வந்துவிட்டது. அதாவது, சிவனுக்கு சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈஸானம் என ஐந்து முகங்கள் உள்ளன. அப்படியானால் சிவனை பத்துக்கண்ணன் என்றுதானே அழைக்க வேண்டும். ஆனால் முக்கண்ணன் என்று அழைக்கிறார்களே. உண்மையில் சிவனுக்கு கண்கள் தான் எத்தனை என்று காளமேகப் புலவரிடம் கேட்டார். அதற்கு குசும்புக்கார காளமேகம் சிவனுக்கு உரியது அரைக் கண் மட்டுமே. அதனால் சிவன் அரைக்கண்ணன் என்றார். அதிர்ந்து போனார் நண்பர். அவருக்கு புலவர் அளித்த விளக்கம் :

இந்திரனுக்கு (தண்டனையாகக் கிடைத்தது) ஆயிரம் கண்கள். முகத்துக்கு இரண்டு வீதம் ஆறுமுகக் கடவுளுக்கு பன்னிரு கண்கள். நான்முகனாகிய பிரம்மனுக்கு முகத்துக்கு இரண்டு வீதம் எட்டு கண்கள். சிவனுக்கு முகத்தில் இரண்டு, நெற்றியில் ஒன்று என எண்ணிக்கையில் கண்கள் மூன்று என்பது சாதாரணக் கணக்கு. ஆனால் முக்கண்ணன் என்று சொல்லப்படும் சிவபெருமான் "தனது" என்று சொல்லிக்கொள்ள அவருக்கு அமைந்தது அரைக்கண் மட்டும் தான் என்றார். நண்பர் குழம்பினார்.



காளத்தி வேடன் தனது கண் ஒன்றை சிவனின் பழுது பட்ட கண்ணில் அப்பியதால் சிவனின் ஒரு கண் கண்ணப்பரின் கண் ஆகிப்போனது. சிவன் தன் மேனியில் நேர்பாதியை அன்னை உமையவளுக்கு அளித்து விட்டதால் சிவனின் இடது பாகத்தில் ஒரு கண்ணும், நெற்றியில் பாதிக்கண்ணும் என ஒன்றரைக்கண் உமையவளின் கண் ஆகிப்போனது. எனவே மீதமிருக்கும் அரைக்கண் மட்டுமே சிவனின் கண் ஆகிறது என்றார் புலவர். இதை ஒரு வெண்பாவாகவும் பாடிக்காட்டினார்.

"முக்கண்ணன் என்று அரனை
முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற்கு உள்ளது
அரைக் கண்ணே - மிக்க
உமையாள் கண் ஒன்றரை
மற்று ஊன்வேடன் கண் ஒன்று
அமையும் இதனால் என்று
அறி".

நண்பருக்கு தலை சுற்றியது. வாயடைத்துப்போய் நகர்ந்து விட்டார்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

காதலன் : இன்று படத்துக்குப் போகலாமா?

காதலி : இரு. அப்பாவிடம் கேட்டுச் சொல்கிறேன.

ஐயோ ! வேண்டாம். சரி அப்படி என்றால் உன் அப்பாவிடம் கேள்.

என் அப்பாவிடம் கேட்டால் அவ்வளவுதான் வீட்டை விட்டே துரத்தி விடுவார்.

இரண்டு பேர் அப்பாவும் ஒரே மாதிரி தான். சம்மதிக்க மாட்டார்கள்.
அதனால் நாம் படத்திற்குப் போக வேண்டாம். நீ உன் நண்பர்களுடன் போயேன்..

அடி...போ... நண்பர்களுடன் போனால் உன்னுடன் வருவது போல் கிக் இருக்குமா...

அப்படி என்றால் படம் பார்ப்பதற்காக நீ வரவில்லை. என்னைத் தொடக்கூடாத இடத்தில் தொட்டு முத்தம் கொடுக்க தானே........



சரியாகப் புரிந்து கொண்டாயே..

போடா..பொறுக்கி....

என்னடி ரொம்பத் திமிராகப் பேசுகிறாய்.. செருப்பால் அடிப்பேன்.

நீயாவது செருப்பால் அடிப்பேன் என்று சொல்வதோடு நிறுத்திக் கொண்டாய். நான் உன்னை இப்போது செருப்பால் அடிக்கிறேன் பார் என்று எதிர்பாராமல் அவனைச் செருப்பால் அடித்தாள்.

தெருவில் போகிறவர்கள் எல்லாம் வேடிக்கை பார்த்தார்கள். அவனுக்கு மிகவும் அவமானமாகப் போய்விட்டது.

கடும் கோபம் கொண்ட அவன், ஏண்டி உனக்கு என்ன திமிர் என்று கூறிவிட்டு தன் பாக்கெட்டில் வைத்திருந்த பேனா கத்தியை எடுத்து அவள் வயிற்றில் சர மாரியாகக் குத்தினான். அவள் அலறிக்கொண்டே கீழே விழுந்து மாய்ந்து போனாள்.

செய்தித்தாளில் காதலன் காதலியைக் குத்திக் கொன்றான் என்று படித்து வியப்படைகிறோம். இப்படியும் நடப்பது தான் இன்றைய கொடூரக் காதல்.



**உ.மு.ந. ராசன் கலாமணி**
4, சுபி இல்லம்
கிழக்குப் பூங்கா தெரு
கோபிச்செட்டிப்பாளையம்

# மீம்ஸ்










# விடுகதை


| | |
|---|---|
| சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம் அது என்ன? | கொசு |
| மழையில் பிறந்து வெயிலில் காயுது? | காளான் |
| அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான், அவன் யார்? | பந்து |
| வட்ட வட்ட நிலவில் வரைஞ்சிருக்கு; எழுதியிருக்கு. அது என்ன? | நாணயம் |
| ஓடையில கருப்பு மீனு துள்ளி விளையாடுது அது என்ன ? | கண் |
| பூ பூப்பது கண்ணுக்குத் தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்குத் தெரியாது. அது என்ன? | வேர்கடலை |
| பட்டுப்பை நிறைய பவுண் காசு. அது என்ன? | வத்தல் மிளகாய் |



# ஜோக்ஸ்

வம்புலே மாட்டுறதுக்கு இன்பாக்ஸ் கேள்விகள் &பதில்கள்

1. U from??
எதுக்கு?
2. Married ah??
ஏஏஏன்?
3. Age yenna??
ஏழு கழுதை வயசாச்சு, என்ன இப்போ??
4.Saptingala??
அதுலாம்



நேராநேரத்துக்கு தெளிவா,
5. Good morning, good afternoon, good night, ப்ளீஸ் இதையெல்லாம் கமெண்ட்ல சொன்னா உங்க கெத்து போய்டுமா??
6.Yenna work panringa?
சோறு.. சோறு.. தண்டச்சோறு..
7. What's doing?
வெட்டி.. எப்பவுமே



வெட்டி தான்,
8. Pathil solla matingala??
அதான் சொல்லலைனு தெரியுதுல,
9. What's app number yenna?
ம்ம்க்கும், அங்க ஒன்னும் தேறாது, பதில் சொல்றதுக்கு பல மாசம் ஆகும்,
10. Unga photo anupunga.,
ஏன் வாழறதுக்கு விருப்பம் இல்லையா?
11. Neenga ponne ila, nan namba maten, போய்ட்டு வாங்க புத்திசாலி,
12. Ennai miss panringala?
அய்யோ ஆண்டவா... மண்டைய கொண்டுபோய் எங்க மோத்திக்குவேன்?
13. Yeppavum online thana?
என்ன பிரச்னை உமக்கு?
14. Nenga yenna community?
என் புருஷனுக்கு பொஞ்சாதி,/ என்பொஞ்சாதிக்கி ஆண்சாதி போதுமா?
15 Oi hoii,
என்ன வாந்தி வருதா??
16› இதுதான் இன்றைய முகநூல் வாட்சாப் லொள்ளு நிலவரம்

# தெய்வீக அருள் தரும் ஆன்மிகம்

## பிறவிப்பிணியை தீர்க்கும் திருத்தலம்


பாண்டிய நாட்டில் உள்ள 14 சிவ தலங்களில் மிகவும் தொன்மையானது, திருக்குற்றாலம் குற்றாலநாதர் கோவில். தென்காசியை அடுத்துள்ள குற்றாலத்தில் இருக்கும் இத்தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகியவை இணைந்த சிறப்புமிக்கது.
'கு' என்பதற்கு 'பிறவிப்பிணி' என்றும், 'தாலம்' என்பதற்கு 'தீர்ப்பது' என்றும் பொருள். பிறவிப்பிணியைத் தீர்க்கும் திருத்தலம் என்பதால் இந்த ஊர், 'குத்தாலம்' என்று அழைக்கப்பட்டு, அதுவே மருவி 'குற்றாலம்' என்றானதாக சொல்கிறார்கள்.
இந்த குற்றாலம், மூலிகை நிறைந்த மலைப் பகுதியாகும். இந்த மலையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூலிகைச் செடிகள் உள்ளன.இவ்வாலய இறைவனின் பெயர் திருக்குற்றாலநாதர், அம்பாளின் திருநாமம், குழல்வாய் மொழி என்பதாகும். இங்குள்ள தீர்த்தம் 'சிவமது கங்கை', 'வட அருவி', 'சித்ரா நதி' என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறது.
உற்சவ மூர்த்தியின் திருநாமம் சோமாஸ்கந்தர். சிவபெருமானின் பஞ்ச சபைகளில் ஒன்றான சித்திர சபை, இந்த குற்றாலநாதர் கோவிலில் உள்ளது. சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான இக்கோவில் சங்கு வடிவ அமைப்பில் உள்ளது.
சித்திர சபையை காசி பராக்கிரம பாண்டிய மன்னன் கட்டியுள்ளார். இந்தக் கோவிலின் தலவிருட்சம் குறும்பலா மரம். இது, குழல்வாய் மொழி அம்பாள் சன்னிதி முன்பாக உள்ளது.
பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மும்மூர்த்திகளின் பெயர் தாங்கிய 3 சிகரங்கள் உள்ளதால், குற்றால மலையை 'திரிகூடமலை' என்றும், இறைவனை 'திரிகூடநாதர்' என்றும் அழைப்பார்கள்.
குழல்வாய்மொழி அம்பாள் உயரமான கர்ப்பக்கிரகத்தில் எழுந்தருளியுள்ளார்.
குழல்வாய்மொழி என்றால் 'வேய்ங்குழலின் ஒலி போன்று இனிமை பொருந்திய சொல்லுடையவள்' என்று பொருள்.
இந்த கோவில் ஆரம்ப காலத்தில் திருமால் கோவிலாக இருந்தது. அந்த சமயத்தில் 'திருமுற்றம்' என்று அழைக்கப்பட்டது. சிவன்,





சக்தி திருமணத்தின் போது வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்தது. இதை சமன் செய்ய தெற்கு நோக்கி ஈஸ்வரனால் அனுப்பப்பட்ட அகத்தியப் பெருமான் இந்த கோவிலில் உள்ள திருமாலை அழுத்தி சிவனாக மாற்றினார். இதனால் அவருடைய ஐந்து கை விரல் தழும்பு சிவலிங்கத்தின் உச்சியில் தற்போதும் பதிந்திருப்பதைக் காண முடியும். தலையில் உள்ள தழும்பால் சிவனுக்குத் தலைவலி வந்து விடக்கூடாது என்பதற்காக, இத்தலத்து இறைவனுக்கு மூலிகை அபிஷேகம் நடக்கிறது.
குற்றாலத்திற்கு பெருமை சேர்க்க பல அருவிகள் உள்ளன. அதில் செண்பகாதேவி அருவி, தேனருவி, சிற்றருவி, ஐந்தருவி, பேரருவி, புலிஅருவி என்ற பாசுபதசாஸ்தா அருவி, பழைய குற்றால அருவி ஆகியவை முக்கியமானவை. இந்த அருவிகளில் குளித்து நமது புற அழுக்கை கழுவி, மன அழுக்கு நீங்க குற்றாலநாதரை வணங்குவது சிறப்பானது. முற்காலத்தில் குற்றால நங்கை என்ற தேவி, சித்திர சபையின் வடக்கு வாசலில் அமர்ந்து அருள்பாலித்துள்ளார்.
இந்த ஆலயம் தற்போது, குற்றாலநாதர் ஆலயத்துக்கு நன்னகரம் அருகில் உள்ள பாட்டக்கரையில் உள்ளது.
வயல் வேலை செய்யும் பெண் ஒருத்திக்கு, குழல்வாய் மொழியம்மையின் அருளால் நீண்ட காலத்திற்குப் பிறகு, குழந்தைப் பேறு உண்டானது. நிறைமாத கர்ப்பிணியான அந்த பெண்ணுக்கு பிரசவ வலி வந்தபோது, அவள் அருகில் யாரும் இல்லை. 'அம்மா..' என்று அலறியபடி மயங்கிச் சரிந்த அந்தப் பெண்ணின் குரல் கேட்டு, குற்றாலநாதர் ஆலயத்தில் இருந்து அம்மன், பச்சைக்கிளியாக மாறி இவ்விடம் பறந்து வந்தாள். பின்னர் தாயாக மாறி அந்தப் பெண்ணுக்கு பிரசவம் பார்த்தாள்.
இந்த நிலையில் தன்னிடம் சொல்லாமல் சென்றதால், 'இனி நீ ஆலயத்திற்குள் வர வேண்டாம்' என்று சிவபெருமான் நங்கையம்மனிடம் கூறினார். உடனே அன்னை, 'உங்களிடம் சொல்லாமல் சென்றாலும், நான் நல்ல நோக்கத்திற்காகவே சென்றேன். என் குற்றத்தை பொறுத்தருள வேண்டும்' என்று வேண்டினாள். இதையடுத்து அந்த அம்மனை குற்றாலநாதர் ஆலயத்தில் இருந்து வடக்கு பகுதியில் தங்கி இருக்கும்படியும், வருடத்திற்கு ஒரு முறை தன்னை தேடி வரவும் சிவபெருமான் அருள்பாலித்தார். அப்படி அந்த அம்மன் அருள்பாலிக்கும் ஊர் 'காசிமேஜர்புரம்' என்று அழைக்கப்படுகிறது.
தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் இருந்து 1 கிலோமீட்டர் தொலைவில் காசிமேஜர்புரம் உள்ளது. தை மாதம் நான்கு செவ்வாய்க்கிழமையும் இந்த ஆலயத்தில் திருவிழா நடைபெறும். முதல் செவ்வாய் அன்று வரியேடு என்னும் வைபவம் நடைபெறும். இவ்வேளையில் அம்மனிடம் உத்தரவு வாங்கி மக்கள் வரி பிரித்து கோவில் கொடை விழாவிற்கு ஆயத்தமாவார்கள். இரண்டாம் செவ்வாய்க்கிழமை கால் நாட்டு வைபவம் மிகச்சிறப்பாக நடைபெறும்.
மூன்றாம் செவ்வாய் அன்று கோவில் பூசாரி சூலாயுதம் எடுத்து அம்மனின் மூல ஆலயத்துக்கு சென்று, உத்தரவு வாங்கி வந்த பின்பு கொடை விழா வெகு விமரிசையாக நடைபெறும்.
அன்றைய நாளில் செண்பகாதேவி அம்மன் கோவிலில் இருந்து காவு சாமி எனும் அகத்தியர் அழைப்பு நடந்தேறும். இந்த அம்மனுக்கு புட்டு அமுது படைப்பார்கள். அப்பம், வடை சுண்டல், தேன் திராட்சை உள்பட பல்வேறு பதார்த்தங்களை படைத்து வணங்குவார்கள். இந்த அன்னையை வேண்டினால் குழந்தைப் பேறு கிடைக்கும் என்பது ஐதீகம். இந்த ஆலயத்தில் செண்பகாதேவி அம்மன் கிழக்கு நோக்கி உள்ளார். ஆதி அம்மனும் இந்த ஆலய வளாகத்துக்குள் வடக்கு நோக்கி உள்ளார். கோவில் வளாகத்தில் கருப்பசாமி, பன்றி மாடசாமி, சங்கலி பூதத்தார், கொம்பு மாடசாமி ஆகியோர் உள்ளனர். வெளியே சின்னத்தம்பி காவல்தெய்வமாக உள்ளார்.
பொதிகை விநாயகர், ஆதி அம்மன், செண்பகாதேவி ஆகியோரும் இந்த கோவில் வளாகத்தில் உள்ளனர். பாலமுருகன், பால விநாயகர் ஆகியோரும் புதிதாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆலயம் தினமும் காலை 7 மணி முதல் 10 மணி வரையும், மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரையும், பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக திறந்துவைக்கப்பட்டிருக்கும்.

## சித்ரா பவுர்ணமி பாவ மன்னிப்பை அருளும் சித்திரகுப்தர் வழிபாடு



சித்திரை மாதத்தில் வரக்கூடிய சித்ரா பவுர்ணமி வானியல் ரீதியாகவும், ஆன்மிக ரீதியாகவும் ஒரு அதிசயமான நாள். வானத்தில் நிலவு அன்று எந்த களங்கமும் இல்லாமல் முழு பொலிவுடன் பூமிக்கு மிக அருகில் வந்து காட்சி தரும் அற்புதமான நாள் இது.
இந்த ஆண்டு சித்ரா பவுர்ணமி இன்று (வெள்ளிக்கிழமை) வருகிறது. பவுர்ணமி திதி நேற்று (வியாழக்கிழமை) இரவு 9.12 மணிக்கு தொடங்கி இன்று இரவு 10.52 மணிக்கு முடிகிறது. சந்திரனும் சூரியனும் முழு பலன் பெற்று விளங்கும் இந்த நாளில் இறைவனை வழிபட்டால் வாழ்வில் பெரும் மாற்றங்கள் உருவாகும்.
மற்ற மாதங்களில் வரக்கூடிய பவுர்ணமிகளை சித்ரா பவுர்ணமி நாளில் செய்யும் பாவ, புண்ணியங்களுக்கு ஏற்றபடி நிறைய பலன்கள் கிடைக்கும். அதேபோல் தெரியாமல் செய்த பாவங்கள் கூட தவிடுபொடியாகும் நாள் சித்ரா பவுர்ணமி தான். இந்த நாளில் நாம் தெரியாமல் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் கண்டிப்பாக நமது பாவங்கள் மன்னிக்கப்படும் என்பது ஐதீகம். குறிப்பாக நம் வாழ்வின் பாவ புண்ணியங்களை நிர்ணயிக்கும் சித்திரகுப்தரை வழிபட வேண்டிய மிக முக்கியமான நாள் இது.
இவர் ஆச்சரியப்படத்தக்க முறையில் கணக்குகளை எழுதி ரகசியமாகக் காப்பாற்றுவதால், 'சித்ரகுப்தன்' எனப்படுகிறார். சித்' என்றால் மனம், 'குப்தம்' என்றால் மறைவு என்றும் பொருள். மனிதனுடைய உள்மனதில் மறைவாக இருக்கக்கூடிய எண்ணங்களின் அடிப்படையில் அவரவரின் வாழ்க்கை முறைகளை அமைத்துத்தருபவர், உயிர்களைப் பறிக்கும் எமதர்மராஜனிடம் தலைமைக் கணக்கராக இருப்பவர். அவரைக் கொண்டாடி விழா எடுக்கும் நாளே சித்ரா பவுர்ணமி. இந்தியாவில் 11 இடங்களில் சித்ரகுப்தருக்கு கோவில் இருந்தாலும் தென்னகத்தில் காஞ்சிபுரத்தில் பஸ் நிலையம் அருகே நெல்லுக்கார வீதியில் இவருக்கு தனிக் கோவில் உள்ளது. இங்கு சித்திரகுப்தன் மனைவி சித்ரலேகாவுடன் அருள்புரிகிறார். இவளைப் பிரபாவதி என்றும், கர்ணிகை என்றும் சொல்கிறார்கள்.
இக்கோவிலில் மூலவராக அமர்ந்த நிலையிலும், உற்சவராக நின்ற நிலையிலும் சித்ரகுப்தன் அருள்பாலிக்கிறார். சித்ரா பவுர்ணமிதோறும் இந்திரனே இந்த ஆலயத்தில் வந்து பூஜிப்பதாக ஐதீகம். அன்று காலையில் சித்ரகுப்தருக்கு மகாபிஷேகமும், மாலையில் திருக்கல்யாணமும் நடைபெறுகிறது. நவக்கிரகங்களில் ஒன்றான கேதுவுக்குரிய பிரத்யேக தேவதையாக சித்ரகுப்தனைக் கூறுவர். சித்ரா பவுர்ணமி நாளன்று செய்யும் சித்ரகுப்த பூஜை, சித்ரகுப்தரின் அருளைப் பெற்றுத் தரக்கூடியதாகும். அந்த நாளில் சித்ரகுப்தரை அர்ச்சித்து பூஜை செய்தால், கேது கிரகத்தால் விளையும் தீமைகள் ஒடுங்கும். ஒவ்வொரு பவுர்ணமிக்கும் ஒரு வகையான விசேஷ பூஜை முறையை காரணாகமம் சொல்லி இருக்கிறது. சித்ரா பவுர்ணமி அன்று மேற்கொள்ளும் ஒரு விசேஷ விரதம் சித்ர குப்த விரதம்.
இந்த நாளில் நாம் சாப்பிடும் உணவில் ஒருவேளை உணவிலாவது உப்பை தவிர்த்தால் தீராத கர்ம வினைகள் கூட தீரும் என்பது ஐதீகம். அதேபோல் சித்ரகுப்தருக்கு உப்பு இல்லாத தயிர் சாதம் படைத்து வழிபாடு செய்வது மிகவும் சிறப்பு வாய்ந்தது. சித்ரகுப்த விரதம் இருப்பவர்கள் அன்று பசுவின்பால், தயிர், நெய் சேர்க்காமல் இருந்தால் நல்லது. சாதாரணமாக பூஜைகளில் பெரும்பாலும் பசும் பாலையே பயன்படுத்துவது வழக்கம். எமதர்மராஜனுடைய வாகனம் எருமை என்பதால், இந்த பூஜையில் எருமைப்பால் விசேஷம். எமதர்மராஜன் தென்திசைக்கு அதிபதி என்பதால், இந்நாளில் வீட்டு வாசலில் போடப்படும் கோலங்கள் தென்புறவாசலை அடைப்பதுபோல் போடும் வழக்கம் இன்றும் உள்ளது. மாக்கோலம் போடும்போது தெற்குப் பக்கத்தை மூடிவிட்டு மற்ற இடங்களில் கோலமிட வேண்டும்.
மாக்கோலத்தில் தெற்கு நோக்கிய தேரில் எழுத்தாணி ஓலை இவற்றைக் கையில் கொண்ட சித்திரகுப்தர் திருவுருவம் வரைந்து கொள்ள வேண்டும். அதன் முன் ஒரு சிறு பித்தளை அல்லது வெள்ளி அல்லது தங்கக் குடத்தில் நூல் சுற்றிவைக்கவேண்டும். அவர் கையில் பென்சில், பேனா, காகிதம் ஆகியவற்றை வைக்க வேண்டும். வழிபட்டு முடிந்ததும் சித்திரகுப்தன் கையிலுள்ள பேனா, பென்சில், காகிதம் போன்றவைகளை தானமாகத் தந்துவிட வேண்டும். ஏழை, எளியவருக்கு குடை அல்லது செருப்பு தானம் செய்வது உங்கள் முன்னோர்களுடைய ஆசையை நேரடியாக பெற்றுத்தரும். அதேபோல் அன்றைய தினம் ஏழை, எளிய மாணவர்களுக்கு அவர்களின் படிப்பிற்காக உங்களால் முடிந்த உதவிகளை செய்வது புண்ணியத்தைத் தரும்.
இரவு நிலவுக்கு கீழே நின்று நீங்கள் செய்யும் பிராயசித்த பிரார்த்தனை உங்களுடைய பாவக்கணக்கையே மாற்றி எழுதும் வல்லமை கொண்டது. அன்று நிலவு மிகவும் பிரகாசமாக இருப்பதால் மனத்தெளிவு மற்றும் நேர்மறை ஆற்றல் நமக்கு கிடைக்கும். அன்றைய தினம் முழுவதும் விரதம் அனுஷ்டித்து இரவு நிலவு தரிசனம் செய்த பின் உணவருந்தவேண்டும்.
இந்த நாளில் செய்யப்படும் தானங்கள் பல மடங்கு புண்ணியத்தை தேடித்தரும் என்பது ஐதீகம். எனவே உங்களால் முடிந்த தான தர்மங்களை கண்டிப்பாக செய்வது நல்லது. அன்றைய தினம் பொய் பேசுதல், சூதாட்டம், பிறரை நிந்தித்தல், தகாத சொற்களால் பேசுவது, அசைவ உணவு சாப்பிடுவது, போதை வஸ்துக்களை சாப்பிடுவது, மது அருந்துவது, மாலையில் உறங்குதல் போன்றவற்றை கண்டிப்பாக செய்யக்கூடாது. சித்திரகுப்தர் கர்மாவின் கணக்காளர் மட்டுமல்ல. அவர் நம் வாழ்வின் வழிகாட்டி. இந்த நன்னாளில் நல்ல எண்ணங்களை விதைப்போம். நம் வாழ்வின் கணக்கு புத்தகம் புண்ணியங்களால் நிறையட்டும். அன்றைய தினம் சித்திரைகுப்தரிடம் இறைவா தெரிந்தும், தெரியாமலும் செய்த பிழைகளை மன்னித்து இனி என் எண்ணங்களையும் செயல்களையும் தூய்மையாக வைத்திரு என்று நாம் வைக்கும் ஒரு நிமிடம் மவுன பிரார்த்தனை ஆயிரம் பூஜைகளுக்கு சமமானது.










## மனக்கஷ்டங்கள் நீங்க எளிமையான பரிகாரம்!

மனிதனாக பிறந்த எல்லோருக்கும் ஏதாவது ஒரு விதத்தில் ஒரு மன சஞ்சலம் அல்லது மனதளவில் ஏதாவது ஒரு கஷ்டம் இருந்து கொண்டே இருக்கும். அந்த கஷ்டத்தை ஒரு சில வழிபாட்டு முறைகளின் மூலம் விரட்டி விடலாம்.

1.வெள்ளிக்கிழமைகளில் நவகிரக சுக்கிரனுக்கு அகல் விளக்கில் கற்கண்டு போட்டு அதில் நெய் தீபம் ஏற்றி வழிபட கணவன்- மனைவி கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

2. இரண்டு சர்ப்பங்கள் இணைந்தது போல் இருக்கும் நாகராஜா சிலைக்கு, வெள்ளிக்கிழமை காலை (10.30-12.00) ராகு காலத்தில், மஞ்சள் குங்குமம் வைத்து, செவ்வரளிப் பூ சாற்றி, அபிசேகம் செய்து, நெய்தீபம் ஏற்றி, தம்பதிகள் பெயருக்கு அர்ச்சனை செய்தால் தம்பதிகள் ஒற்றுமையாக, அன்னியோன்யமாக வாழ்வார்கள்.

3. குடும்பத்தில் தாங்க முடியாத கஷ்டங்கள் வந்தால், மன அமைதி குறைந்தால் அருகில் உள்ள ஆலயங்களில் தீபம் ஏற்றி வழிபடுவது ரிஷிகள் சொல்லிய பரிகாரம்.


4. கொடிய கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீ யோக நரசிம்மரையும், மற்ற கடன் தொல்லைகளுக்கு ஸ்ரீ லட்சுமி நரசிம்மரையும் வழிபடுவது நல்ல பரிகாரம் ஆகும்.

5. ஸ்ரீநரசிம்மரின் எந்த திருக்கோலத்தை தரிசித்தாலும் கடன் தொல்லைகள், பில்லி, சூனியம், ஏவல், திருஷ்டி திருமண தடை விலகி நன்மை பெறலாம்.

6. ஆலய திரி சூலத்தில் குங்குமம் இட்டு, எலுமிச்சை பழம் குத்தி வழிபட, திருஷ்டி, செய்வினை தோஷம் நீங்கும்.

7. வெள்ளெருக்கு விநாயகரை வீட்டு அறைகளில் கைக்கு எட்டாத உயரத்தில் வைத்து இருந்தால்,ஏதும் பூதகண சேஷ்டைகள் இருந்தால் நின்று விடும்.

8. சக்கரத்தாழ்வார் சந்நிதியில் நெய்தீபம் ஏற்றி12 முறை, 48 நாட்கள் சுற்றி வழிபட தொழில், வழக்குசாதகமாதல், பில்லி, சூனியம்,ஏவல்நீங்கும். 21செவ்வாய்கிழமைகளில் நெய்தீபம் ஏற்றிவழிபட கொடுத்த கடன் வசூல் ஆகும்.



9. கொடுத்த கடன் வசூல் ஆக பைரவர் சந்நிதியில் தொடர்ந்து 8 செவ்வாய் கிழமைகளில் நெய்தீபம் ஏற்றி சகஸ்ர நாம அர்ச்சனை செய்ய வேண்டும்.

10. ஜாதகப்படிசனிபகவானின்பா திப்புகுறைய,திங்கட்கிழமை களில் சிவபெருமானுக்கு,பால் அபிசேகம் செய்து, அர்ச்சனை செய்ய வேண்டும். சனிக் கிழமைகளில் சனி பகவான் சந்நிதியில்தேங்காய் உடைத்து, இரண்டு மூடிகளிலும்நல்லெண்ணெய் ஊற்றி, எள்ளு முடிச்சு தீபம் ஏற்றவும்.சிவன் கோவிலில் கால பைரவரையும்,விஷ்ணு கோவிலில் சக்கரத்தாழ்வாரை யும்வழிபட செய்வினை தோஷம் நெருங்காது.

11. சிவன் கோவில் வன்னி மரம், வில்வ மரத்தை 21 முறை வலம் வந்து நமது குறைகளைக் கூற,நல்ல பலன் கிடைக்கும். தீர்ப்புகள் சாதகம் ஆகும். இம்மரங்களுக்கு நாம் கூறுவதை கேட்கும் சக்தி உள்ள தாக ஒரு ஐதீகம் உண்டு.

12. பிரதோஷகாலத்தில், ரிஷபா ரூட மூர்த்தியாய்,மகேசனை தேவியுடன் வழிபடுவோர் 1000 அஸ்வமேத யாகங்களை செய்த பலனை பெறுவார்கள். அதிலும் ஈசானிய மூலையில் ஈஸ்வரனுக்கு காட்டப் படும் தீபாரதனையை பார்த்தால்எல்லா நோய்களும், வறுமையும் நீங்கும்.

13. மாதாமாதம் உத்திர நட்சத்திரத்தன்று சிவனுக்கு தொடர்ந்து 11 மாதங்கள் பால் அபிசேகம் செய்தால், விரைவில் திருமணம் நடை பெறும்.

14. கலியுகத்தில் காரிய சித்திக்கு துர்க்கை வழிபாடு அதுவும் இராகு காலத்தில்,செய்வது சிறந்தது. இராகு காலத்தில் கடைசி 1/2 மணி நேரமான அமிர்தகடிகை நேரமே சிறப்பான பரிகார நேரம். நெய்விளக்கு ஏற்றவும் உகந்த நேரம். ஞாயிற்றுகிழமை மாலை 4.30-6.00 மணிக்குள் துர்க்கை க்கு விளக்கு ஏற்றி வழிபட நாம் வேண்டிய பிராத்தனை கள் நிறைவேறும்.

15. வெள்ளிக்கிழமை காலை 10.30-12.00 இராகு காலத்தில் துர்க்கைக்கு தாமரை தண்டு திரி போட்டு நெய்விளக்கு ஏற்றி வழிபட,தெய்வ குற்றம்,குடும்ப சாபம் நீங்கும். ஹஸ்த நட்சத்திரத்தன்று துர்க்கைக்குசிகப்பு பட்டு துணி சாற்றி, சிகப்பு தாமரையை பாதத்தில் வைத்து 27 எண்ணிக்கை கொண்ட எலுமிச்சை பழ மாலை சாற்றி, குங்கும அர்ச்சனை செய்து, அந்த குங்குமத்தை நெற்றியில் வைத்து வர உடனே திருமணம் நடைபெறும்.

16. சங்கடஹரசதுர்த்தியில் விநாயகருக்கு அருகம் புல் மாலைசாற்றி,அர்ச்சனை செய்து வழிபட சங்கடங்கள் தீரும். சங்கடஹரசதுர்த்தியில் விநாயகருக்கு எருக்கம் திரி போட்டு விளக்கு ஏற்றி வழிபடபிள்ளைகள் கல்வியில் முன்னேறுவார்கள்.

17. இரட்டைப் பிள்ளையாருக்கு ரோகிணி நட்சத்திரத்தன்று சந்தனக் காப்பு செய்து வழிபட கடன் பிரச்சனை தீரும்.

18. செவ்வாய்க்கு அதிபதியான முருகப்பெருமானுக்கு செவ்வாய் தோறும் நெய்விளக்கு ஏற்றி வழிபடமூன்று மாதத்தில் வேலை கிடைக்கும்.

19. விபத்துகளில் இருந்து தப்பிக்க அவிட்ட நட்சத்திரத்தன்று முருகனுக்கு வேலில் எலுமிச்சை சொருகி அர்ச்சனை செய்யவும்.

20. ருத்ராட்சம், சாளக்கிராமம், துளசி,வில்வம் உள்ள இடத்தில் இருந்து சுமார் 10கி.மி தூரத்திற்கு செய்வினை அணுகாது.

21. பஞ்சகவ்ய கலவையை வாரம் ஒரு முறை வீடுகளில் தெளிக்க ,தோஷம், தீட்டு நீங்கி, லஷ்மி கடாக்ஷம் கிடைக்கும்.பால், தயிர், கோமூத்திரம், சாணம் கலந்தது பஞ்சகவ்ய கலவை.

22. புத்திர பாக்கியம் இல்லாதோர் 6 தேய்பிறை அஷ்டமிகளி ல் காலபைரவருக்கு சகஸ்ர நாம அர்ச்சனை செய்தால் விரைவில் புத்திர பாக்கியம் கிட்டும்.

23. வியாழக்கிழமைகளில் ஒரு நேரம் விரதம் இருந்து மாலையில் ஆலய தட்சணா மூர்த்திக்கு தொடர்ந்து நெய்விளக்கு ஏற்றி வர ,விரதம் ஏற்ற 192 நாட்களில் கருத்தரிப்பு ஏற்படும் வாய்ப்பு உண்டு.


24. பெருமாள் கோவிலில் உள்ள கருடாழ்வார் சந்நிதியை சுற்றி வந்து நெய்விளக்கு ஏற்றி வழிபடசர்ப்ப தோஷம், கால சர்ப்ப தோஷம் நீங்கும்.

25. வறுமையில் இருப்பவருக்கு தானம் கொடுத்தல், பூஜை நடக்காமலிருக்கும் கோவில்களில் பூஜை நடக்க உதவுதல், அனாதைப் பிணங்களின் தகனத்திற்கு உதவுதல்- ஆகிய மூன்றும் செய்தால் அசுவமேத யாகம் செய்ததற்குச் சமம்.

26. தொழில் தடை, கணவன்- மனைவிக்கு கருத்து வேறுபாடு நீங்க, வாழ்வில் நலம் பெற, வெளிநாட்டு வேலை முயற்சி வெற்றி பெற, -என்று நல்ல காரியங்கள் நடைபெற பௌர்ணமி தோறும் நடைபெறும் சத்திய நாராயணா பூஜையில் கலந்து கொள்வது நற்பலன் களைத் தரும்.

27. எத்தகைய கிரக தோசமானாலும் தினமும் சுந்தர காண்டத்தில் ஒரு அத்தியாயம் பாராயணம் செய்வது மிக, மிக நன்மை தரும். வாழைத் தண்டு திரியினால் வீட்டில் தீபம் ஏற்றினால் குலதெய்வ குற்றமும், குலதெய்வ சாபமும் நீங்கும்.




இந்த பகுதியில் உங்கள் படைப்புகள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் மருத்துவம் ஆய்வு





**திருவண்ணாமலை, மே 01:** திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்ரா பௌர்ணமி கிரிவலம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு பக்தர்கள் வசதிக்காக திருக்கோயிலில் மூன்றாம் பிரகாரத்தில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மருத்துவ வசதிகளை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை






திருப்புல்லாணி நேற்று மாலை

## பணி ஓய்வுக்கான ஆணை




தி.மலை மாவட்டம், வருவாய் துறையில் 35 ஆண்டுகளாக பணியாற்றி வந்த திரு. சு. பார்த்திபன் (SP) முதுநிலை வருவாய் ஆய்வாளர் அரசு பணியில் இருந்து பணி ஓய்வுக்கான ஆணையினை நேற்று (30.4.26) பிற்பகல் தி.மலை மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட வருவாய் அலுவலர், மா.ஆ.த.நே.மு. உ ( பொது) மற்றும் அலுவலக மேலாளர் உட்பட அனைவரும் ஆணையினை வழங்கியும் சந்தன மாலை மற்றும் பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சியுடன் வழங்கி வழி அனுப்பி வைத்தனர். வாழ்த்துகளுடன்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தென்பாதியில் அமைந்துள்ள ஸ்ரீசத்குரு சாய்பாபா தியான ஆலயத்தில் வியாழக்கிழமை சிறப்பு ஆரத்தி மற்றும் அலங்காரம் நடைபெற்றது.

## வாசவி ஜெயந்தி சிறப்பு வழிபாடு

**கிருஷ்ணகிரி, மே 01:** கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் வாசவி ஜெயந்தியை முன்னிட்டு மூலவர்க்கும், உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், மூலவர் முத்தங்கி அலங்காரம், வெள்ளிக் கவசத்துடன், தங்க ஆபரணங்களுடன், பெண் குழந்தைகளுக்கு கன்னி பூஜையும், ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் குங்குமம் அர்ச்சனைகள், ஜலதீபம் அலங்கரித்து தீபம் ஏற்றியும் , வேத மந்திரங்கள் ஒலிக்க, பக்தி பாடல்களை பாடி, மங்கள வாத்தியங்கள் இசைக்க, வாசவி அம்மனுக்கு ஆரத்திகள் காண்பித்து, பிரசாதம் நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.



அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது. மற்றும் இரவு நம் வாசவி அம்மன் வண்ணமலர் மாலைகளால் அலங்காரத்துடன், மங்கள வாத்தியத்துடன் மாட வீதி சுற்றி வந்தன. ஆர்ய வைஸ்ய ஆண்கள்,பெண்கள் அனைவரும் வாசவி ஜெயந்தி விழாவில் கலந்துகொண்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தபால் வாக்குகளை எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கான பயிற்சி

**வேலூர், மே 01:** தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 வேலூர் மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் தபால் வாக்குகளை எண்ணும் பணியில் ஈடுபட உள்ள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் வே.ரா. சுப்புலட்சுமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடந்தது. இப் பயிற்சியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் மா. சிவசுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் குணசேகரன்



(பொது) ,பாஸ்கரன் (தேர்தல்), அருண் (நிலம்) தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மாறன் (காட்பாடி) ஏ. செந்தில்குமார் (வேலூர்), ஆர். குணசேகரன் (அணைக்கட்டு), எஸ். சரவணன் (கே. வி. குப்பம்), செல்வி எஸ். சுபலட்சுமி (குடியாத்தம்), தேர்தல் வட்டாட்சியர் ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சாணம் பட்டிசித்தர் பீடத்தில் சித்ரா பௌர்ணமி அன்னதானம் மருத்துவ முகாம்

**வாடிப்பட்டி, மே.01:** மதுரை மாவட்டம் வாடிப் பட்டி அருகே சாணம்பட்டியில் இயற்கை எழில் கொஞ்சும் சிறுமலை ஓடைக்கரையில் பதினெண் சித்தர் பீடத்தில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு சித்தர் முறைப்படி யாகமும் பதினெட்டாம்படி கருப்புசாமி பீடம் மற்றும் பதினெண் சித்தர் பீடத்திற்கு மகா சிறப்பு அபிஷேகமும் நடந்தது.

இந்த யாகசாலை சிறப்பு பூஜையினை சித்தர் பீட அறக்கட்டளை மேலாண்மை இயக்குனர் விஜயபாஸ்கர்,பட்டர் சுப்பிரமணி ஆகியோர் செய்தார். அறக்கட்டளை உறுப்பினர்கள் பஞ்சவர்ணம் ஷாலினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் மாமல்லன் கார்த்திக் வரவேற்றார்.




இந்த அன்னதானத்தை அறக்கட்டளை தலைவர் விவசாய விஞ்ஞானி சி. ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். இதில் சித்தா, வர்மா, அக்குபஞ்சர் மருத்துவர்டாக்டர் லிங்க செல்வி தலைமையில் மருத்துவக் குழுவினர் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை மற்றும் ஆலோசனைகள் மருந்து மாத்திரைகள் வழங்கினார்கள். முடிவில் அறக்கட்டளைஉறுப்பினர் பொன்ராம் நன்றி கூறினார்.

## சேர்க்காடு திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தில் 2026-2027 ஆம் கல்வி ஆண்டு மாணவர் சேர்க்கை தொடக்கம்!

**வேலூர், மே01:** வேலூர் மாவட்டம், காட்பாடி அடுத்த சேர்க்காட்டில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தில் 2026-2027 ஆம் கல்வி ஆண்டிற்கான முதுநிலை, இளநிலை மற்றும் பட்டப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தற்போது தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கலாம் என பல்கலைக்கழக பதிவாளர் செந்தில் வேல்முருகன் தெரிவித்துள்ளார். கீழ்க்கண்ட துறைகளில் உள்ள முதுநிலை படிப்புகளுக்கு நுழைவுத் தேர்வுகள் அடிப்படையில் சேர்க்கை நடைபெறும். எம்.ஏ. (தமிழ், ஆங்கிலம், பொருளாதாரம்) எம்.காம், எம்.பி.ஏ, எம்.எஸ்.சி. (விலங்கியல், வேதியியல், கணிதவியல், உயிரி தொழில்நுட்பவியல், கணினி அறிவியல், இயற்பியல், சுற்றுச்சூழல் அறிவியல், நுண்ணுயிரியல்) முதுகலை நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நேரடிச் சேர்க்கை நடை பெறும் படிப்புகள் கீழ்க்காணும் படிப்புகளுக்கு நேரடிச் சேர்க்கை (*Direct Admission*) நடைபெறும். 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலைப் படிப்புகள் தமிழ், ஆங்கிலம், பயன்பாட்டு




பொருளியல், எம்.காம், பயன்பாட்டு விலங்கியல், பயன்பாட்டு வேதியியல், கணிதவியல், தரவு அறிவியல் மற்றும் பெரிய தரவு பகுப்பாய்வு, தகவல் தொழில்நுட்பம், இயற்பியல் மற்றும் நுண்ணுயிரியல். 3 ஆண்டு இளநிலைப் படிப்புகள் பி.எஸ்.சி. கணினி அறிவியல் மற்றும் பி.எஸ்.சி. தரவு அறிவியல். 1 ஆண்டு முதுகலைப் பட்டயப் படிப்புகள் தொடர்பு வழி ஆங்கிலம், தொழிலக வேதியியல், டெக்ஸ்டைல் மற்றும் பாலிமர் வேதியியல், உயிர் உரத்தொழில் நுட்பவியல், நோய் அறிதல் நுட்பங்கள், தொழில் துறை பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தணிக்கை. தகுதியுள்ள மாணவர்கள் பல்கலைக் கழகத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.tvu.edu.in வாயிலாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். கூடுதல் விவரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள பத்திரிகை செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.




**உத்திரகோச மங்கை திருமணம்**

## தீர்த்தவாரி, கொடி இறக்கம் பிரம்மோற்சவம் நிறைவு சிறப்பு வழிபாடு

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு ஆஞ்சநேய குளக்கரையில் அஸ்திரதேவர் (சூலப்படை) தீர்த்தவாரி முடிந்து சிறப்பு அபிஷேகங்களுடன் தீபாராதனையும் நடைபெற்றது. மற்றும் சுவாமி, அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. பிரமோற்சவம் நிறைவு, கொடி இறக்கத்துடன் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பிரமோற்சவ நிறைவு விழாவில் கலந்து கொண்டு மீனாட்சி சுந்தரேசுவரரை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



## சித்திரை வசந்த உற்சவம் 10-ஆம் நாள் தீர்த்தவாரி சிறப்பு வழிபாடு

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்திரை வசந்த உற்சவத்தை முன்னிட்டு பத்தாம் நாள் ஐயங் குளத்தில் தீர்த்தவாரி மற்றும் சுவாமி, அம்மன் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க மகாதீபாராதனையும் நடைபெற்றது.



ஏராளமான பக்தர்கள் தீர்த்தவாரியில் சுவாமியை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வளத்தி ஊராட்சியில் நீர்மோர் பந்தல் திறப்பு

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் திமுக சார்பில் வளத்தி ஊராட்சியில் கோடைக்காலம் தொடங்கியதும் கடந்த ஐந்து ஆண்டுகளாய் ஆண்டு தோறும் கோடைக்காலங்களில் நீர் மோர் பந்தலைதிறந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மண்பானையில் குளிர்ந்த தண்ணீர், வெள்ளரிக்காய், தர்பூசணி, பழவகைகள் மோர் உள்ளிட்டவைகளை வழங்கி வருகின்றனர் அதன் தொடர்ச்சியாக நேற்று செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ முன்னிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நீர்மோர் பந்தல் திறக்கப்பட்டது.



இந்நிகழ்வில் ஒன்றிய சேர்மேன் கண்மணி நெடுஞ்செழியன் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் மற்றும் மாவட்ட ஒன்றிய கிளைக்கழக நிர்வாகிகள் தொண்டர்கள், பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

அகரம் ராமதாஸ் செய்தியாளர்

## முளைப் பாரி உற்சவ விழா



மண்டபம் அருகே ஸ்ரீ பிள்ளைக்காத்த காளியம்மன் கோவிலில் 5-ம் ஆண்டு முளைப் பாரி உற்சவ விழா நடைபெற்றது.

## சீனிவாச பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவில் மகா கும்பாபிஷேக விழா..!

**வந்தவாசி, மே 01:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தென்கரை மதுரா, பெரும்பாக்கம் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பத்மாவதி சாயிகா சமேத ஸ்ரீ சீனிவாச பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலில் மகா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. முன்னதாக கோவில் பிரகாரத்தில் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் உள்ளிட்டவைகள் நடைபெற்றது. மேலும் புனித நீர் கலசங்கள் வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

பிறகு புனித நீர் கலசம் மேளதாளத்துடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்து, வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசங்களில் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் திரளான பக்தர்கள்



கலந்து கொண்டு கோவிந்தா கோவிந்தா என்ற கோஷத்துடன் வழிபட்டனர். முன்னதாக மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. இந்த வைபவத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

# சுற்றுலா: கண்களுக்கு குளுமை தரும் எழில்மிகு ஏலகிரி!

சென்னையிலிருந்து டக்குனு எங்கயாவது போகலாம்னு நினைத்தபோது 'ஏலகிரி' எங்களுக்கு 'இமயமலை' போல காட்சியளித்தது. இந்த காலத்துல இணையவழியில் பயண திட்டம் போடுவது சுலபம் என்பதால், நாங்க வீட்டிலிருந்தபடியே ஒரு விடுதியை புக்செய்து, கூகிள் மேப் உதவியுடன் காரில் கிளம்பினோம்.



புறநகர் பகுதி வந்தவுடனேயே கரிச்சான் மற்றும் பல குருவி வகை பறவைகள் கண்ணில் அதிகம் தென்படத் துவங்கின. வேலூர் மாவட்டத்தினுள் நுழைந்த உடனேயே எங்கு திரும்பினாலும் மலைத்தொடர்கள்; கண்களுக்கு மிகவும் குளுமையாக இருந்தது. ஏலகிரி மலைத்தொடரில் மொத்தம் பதினைந்து கொண்டை ஊசி வளைவுகள் இருந்தன. நல்ல அகலமான வளைவுகள் என்பதால், எந்த சிரமமுமின்றி மிதவேகத்தில் இருபக்கமும் மரங்களையும், குரங்குகளையும் பார்த்தவாறு மலை ஏறினோம்.

ஒவ்வொரு வளைவிற்கும் பாரதி வளைவு, திருவள்ளுவர் வளைவு, கம்பர் வளைவு என்று பெயரிடப் பட்டுள்ளது. இந்த வளைவுகளில் கடையெழு வள்ளல்களான - பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரியும் அடக்கம். இந்த வள்ளல்களின் கதைகளை குழந்தைகளுக்கு சொல்லியவாறே ரிசார்ட் வந்தடைந்தோம்.

**சுற்றுலாத் தலங்கள்**

படகுக் குழாம் : ஏலகிரி சிறிய ஊர் என்பதால் இரண்டே நாட்களில் பார்த்துவிடலாம். இருந்தும், ஆர அமர நிதானமாக நான்கு நாட்கள் கண்டுகளித்தோம். படகுக் குழாம் மிகவும் ரம்மியமாக இருந்தது. வார நாட்களில் சென்றால் கூட்டமே இன்றி மிகவும் மலிவாக படகு சவாரி மேற்கொள்ளலாம்.

உயர்ந்த மரங்களும், வண்ண சோலைகளும், நீர் பவுண்டன்களும் காண்போர் கண்ணை கவரும் விதம் அமைந்திருந்தது அந்த இயற்கை பூங்கா. புகைப்பட பிரியர்களுக்கும், காதலர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஏற்ற இடம்.

த்ரில் வேலி (THRILL VALLEY) இங்கேஜிடத்திலிருந்துமற்றோர் இடம் கயிற்றிலேயே அந்தரங்கத்தில் தனியாக தொங்கியபடி செல்ல 'ZIP LINE' இருந்தது, இது நிஜமாகவே ரொம்ப த்ரில்லிங்கா இருந்தது. இதைத் தவிர ROPE COURSE, துப்பாக்கி சுடுதல், வில் அம்பு எய்தல், TRAMPOLINE, SLINGSHOT என்பதுபோல பல விளையாட்டுகள் இருந்தன. நேரம் போவதே தெரியாமல், பெரியவர்களும் குழந்தைகளாக மாறி உற்சாகமாக விளையாடினர்.

ஃபன்டேரா பறவைகள் மையம் (FUNDERA): பறவைகள் என்றால் யாருக்குத்தான் பிடிக்காது? அதுவும் இந்த காட்சியகத்தில் தென் ஆப்ரிக்க மகாவ் பறவை, இந்தோனேசியாவிலிருந்து வண்ண கிளிகள், ஆப்ரிக்க கிளிகள் என விதவிதமான பறவைகளை ஒரே இடத்தில் காண முடிகிறது.

புறாக்களில் மட்டும் ஒரு முப்பது வகை, கோழிகளில் இருபது வகைகள் என, மிகப் பெரிய நெருப்புக் கோழி முதல் சின்ன கோழி குஞ்சுகள் வரை காணலாம். இவ்விடத்தில் மேலும் ஒரு சிறப்பு என்னவென்றால், மனிதர்களுடன் நட்பாக பழகும் ஒரு சில பறவைகளுக்கு நாமே உணவு கொடுக்கலாம். அவை நமது கைகளில் அமர்ந்து அதன் உணவை சாப்பிட்டுவிட்டு பறந்துவிடும். சிலிப்பூட்டும் தருணம் அது.

முருகன் கோயில்: 'குன்றுகள் இருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான்' என்று நாம் கேட்டிருப்போம். அதுபோல, மலைகள் சூழ்ந்திருக்க அழகிய ஒரு மலையின் மீது கம்பீரமாக முருகப் பெருமான் வீற்றிருந்தார். முருகன் சந்நிதியில் பக்தியுடன் திருப்புகழ் ஒன்றை பாடிவிட்டு அமைதியாக சில நிமிடங்கள் அங்கே கழித்தோம். மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது. தமிழ்நாட்டின் பிற மலைப்பிரதேசங்களைப்போல ஏலகிரி குளுமையாக இல்லை. பகல் நேரங்களில் நல்ல வெயில். இரவில்தான் சற்று குளு குளுவென மாறியது. இங்கே இரவு ஏழுமணிக்கு மேல் எந்த நடமாட்டமும் இல்லை. கடைகளும் இல்லை. வெறும் சுற்றுலாவை மட்டுமே நம்பியிருக்கும் அழகிய இடம் ஏலகிரி. இதன் எளிமையும் அமைதியும் பரபரப்பான நகரவாசிகளான எங்களை மிகவும் கவர்ந்தது.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ரயில்வே நிதிக்கழகத்தில் உதவி மேலாளர் வேலை

இந்திய ரயில்வே அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் 'ஏ' அட்டவணை மற்றும் 'நவரத்னா' அந்தஸ்து பெற்ற ஒரு பொதுத்துறை நிறுவனம் இந்திய ரயில்வே நிதி நிறுவனம் லிமிடெட் (ஐஆர்எப்சி). இந்நிறுவனம் ரயில்வேக்கு 'ரோலிங் ஸ்டாக்' (என்ஜின்கள், பயணிகள் பெட்டிகள் மற்றும் சரக்கு பெட்டிகள்) மற்றும் பல்வேறு ரயில்வே திட்டங்களை குத்தகைக்கு விடுவதே முதன்மையான பணியாகும். இந்த திட்ட வசதிகளுக்கு தேவையான நிதியைத் திரட்டுவதற்காக, பல்வேறு நிதிச் சந்தைகளிலிருந்து பலதரப்பட்ட நிதிசார் உத்திகள் மூலம் நிதி வளங்களை ஈட்டுகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில், இந்திய அரசாங்கத்தால் ஐஆர்எப்சி தொடர்ந்து 'சிறப்பாக' செயல்பட்டு வருகிறது. 2025 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, இந்த நிறுவனத்தின் மொத்த வரவு ரூ. 27,152.14 கோடியாகவும், நிகர மதிப்பு ரூ. 52,667.77 கோடியாகவும் உள்ளது.

இந்த நிறுவனத்தில் தற்போது, காலியாக உள்ள உதவி மேலாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் விருப்பமும் உள்ளவர்களிடம் இருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு அறிவிப்பு எண்: 01/ 2026; Dated 04.04.2026 பணி: Assistant (NES Level) காலியிடங்கள்: 16

சம்பளம்: மாதம் ரூ.21,000 - 74,000 தகுதி: வணிகவியல் பிரிவில் 60 சதவீத மதிப்பெண்களுடன் இளநிலைப் பட்டம் முடித்து ஐசிஏஐ இடைநிலை தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு: 18 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும்.

பணி: Assistant Manager (Finance) காலியிடங்கள்: 7

சம்பளம்: மாதம் ரூ.40,000 -1,40,000 தகுதி: வணிகவியல் பிரிவில் 60 சதவீத மதிப்பெண்களுடன் இளநிலைப் பட்டம் பெற்றிருப்பதுடன் சிஏ, சிஎம்ஏ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு: 18 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும். உச்ச வயது வரம்பில் எஸ்சி, எஸ்டி பிரிவினர்களுக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகள் சலுகை வழங்கப்படும்.

தேர்வு செய்யப்படும் முறை: கணினி வழித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். விண்ணப்பிக்கும் முறை: https://irfc.co.in என்ற இணைய தளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 1.5.2026

## பெட்ரோல் ரூ. 10, டீசல் ரூ. 12.50 விலை உயர்வு உண்மையா? பொய்யா? அரசு விளக்கம்

**புதுடெல்லி, மே 1:**

பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டிருப்பதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் அறிக்கையைபோலியானதுஎன மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் போருக்கு மத்தியில், சர்வதேச அளவிலான கச்சா எண்ணெய் வர்த்தகம் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. இதனைத்தொடர்ந்து, பல்வேறு நாடுகளில் எண்ணெய்த் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், சில நாடுகளில் பெட்ரோல், டீசல் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவிலும் மே 1 முதல் பெட்ரோல் லிட்டருக்கு ரூ. 10, டீசல் லிட்டருக்கு ரூ. 12.50 உயர்த்தப்படுவதாக மத்திய பெட்ரோலியம் மற்றும் எரிவாயுத் துறை அமைச்சகம் வெளியிட்டதாக சமூக ஊடகங்களில் போலியான அறிக்கை பரவி வந்தது.

கேரளம், புதுச்சேரி, அஸ்ஸாம், தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஆகிய 5 மாநிலங்களின் பேரவைத் தேர்தல்கள் முடிவடைந்தவுடன், பெட்ரோல் மற்றும் டீசலின் விலை உயர்த்தப்படும் என கடந்த சில நாள்களாகவே வதந்திகள் பரவி வந்தன.


இதனிடையே, போலி அரசு அறிக்கையும் சமூக ஊடகங்களில் வைரலாகியதையடுத்து, வதந்திகளை நம்ப வேண்டாம் என அதிகாரப்பூர்வமாக மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து, மத்திய அரசின் தகவல் சரிபார்ப்பகம் கூறியிருப்பதாவது, பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டதாகக் கூறி மத்திய அரசு வெளியிட்டதாகப் பரவி வரும் அறிக்கையானது முற்றிலும் போலியானது. இதுபோல எந்த அறிவிப்பையும் அரசு வெளியிடவில்லை. எந்த அறிவிப்பாக இருந்தாலும், அரசின் அதிகாரபூர்வ தளங்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று தெரிவித்துள்ளனர்.

## 3-வது பிரசவத்துக்கு 12 வாரங்கள் விடுப்பு வழங்கும் அரசாணை உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிரானது: ஐகோர்ட்

**சென்னை, மே 1:**

மூன்றாவது பிரசவத்துக் கும் ஓராண்டு விடுப்பு வழங்க வேண்டுமென்றும், 12 வாரங் கள் மட்டும் விடுப்பு வழங்கும் அரசாணை உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப் புகளுக்கு எதிரானது என்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் திண் டிவனம் மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான இழப் பீட்டு தீர்ப்பாயத்தில் பணியாற் றும் சாய்நிஷா என்பவர் தனது 3-வது பிரசவத்துக்காக 2026 பிப்ரவரி முதல் 2027 பிப்ரவரி வரை மகப்பேறு விடுப்பு வழங் கக்கோரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதியிடம் விண் ணப்பித்தார்.

ஆனால் அதை ஏற்க மறுத்த மாவட்ட முதன்மை நீதிபதி, 3-வது பிரசவத்துக்கு 12 வாரங் கள் மட்டுமே விடுப்பு வழங்க முடியும் என்ற அரசாணைப்படி ஏப்ரல் மாதத்துக்குள் பணியில் சேரும்படி சாய் நிஷாவுக்கு உத் தரவிட்டார்.

வலியும், வேதனையும் இதை எதிர்த்து சாய் நிஷா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர் .சுரேஷ்குமார், என்.செந்தில்கு மார் ஆகியோர் அடங்கிய அமர் வு, 3-வது பிரசவமும் முதல் இரு பிரசவங்களைப் போல வலியும், வேதனையும் அடங் கியதுதான்.

இதைக் கருத்தில் கொண்டே உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன் றமும் அரசு பெண் ஊழியர் களின் மூன்றாவது குழந்தைக் கும் ஓராண்டு காலம் மகப் பேறு விடுப்பு வழங்க உத்தர விட்டுள்ளது.

எனவே மனுதாரருக்கு ஓராண்டு காலத்துக்கு மகப் பேறு விடுப்பு வழங்க வேண் டும் என விழுப்புரம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதிக்கு உத்தரவிட்டுள்ளனர்.

3-வது பிரசவத்துக்கு 12 வாரங் களுக்கு மட்டும் விடுப்பு வழங்க வேண்டுமென்ற அரசாணை உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன் றத் தீர்ப்புகளுக்கு எதிரானது. அரசின் இந்த அரசாணை நீதித் துறையை எவ்விதத்திலும் கட் டுப்படுத்தாது என்றும் உத்தர விட்டுள்ளனர்.

## கோடை வெயில் தாக்கம்: திருச்சி அரசு மருத்துவமனையில் சிறப்பு வார்டு

**திருச்சி, மே 1:**

தமிழகத்தில் பல மாவட்டங்களில் கோடை வெயில் 100 டிகிரி செல்சியஸை தாண்டி, மக்களை சுட்டெரித்து வருகிறது. தமிழகத்தில் அதிகபட்சமாக திருச்சி மாவட்டத்தில் வெப்பம் பதிவாகி வருகிறது. செவ்வாய் அன்று திருச்சியில் 105 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. இந்த நிலையில், கடும் வெப்பத்தால் ஏற்படும் சொப்பளம், உடல் சோர்வு, மயக்கம் போன்றவற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் சிறப்பு வார்டு அமைக்கப்பட்டுள்ளது. சூப்பர் ஸ்பெஷாலிட்டி கட்டிடத்தில் உள்ள மூன்றாவது தளத்தில் 12 படுக்கை வசதிகளுடன் இந்த சிறப்பு வார்டு தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் ஏசி வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் குளுக்கோஸ் போன்றவை வைப்பதற்கு பிரிட்ஜ் வசதி செய்யப்பட்டுள்ளது. உடலில் இருக்கும் சூட்டை குறைக்க குளிர்ச்சியாக குளுக்கோஸ் ஏற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து திருச்சி அரசு மருத்துவக் கல்லூரியில் மருத்துவமனை டீன் குமரவேல் கூறுகையில், "வெப்ப அதிகரிப்பால் உடலில் நீர்ச்சத்து குறைபாடு ஏற்படுகிறது. இதன் காரணமாக வெப்ப வாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மக்கள் வெளியில் செல்வதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக கர்ப்பிணிகள், குழந்தைகள், முதியவர்கள் இந்த நேரத்தில் வெளியில் செல்லக்கூடாது. வெப்ப வாதம் ஏற்பட்டால் முதலில் அவர்களின் ஆடைகளை தளர்த்த வேண்டும். மயக்கமாக இருக்கும்போது வாயில் தண்ணீர் ஊற்றக்கூடாது. உடல் சூட்டை குறைப்பதற்கு முகத்தில் ஈரத் துணியால் துடைக்கலாம். இது போன்ற முதலுதவிக்குப் பின்னர், உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும்" என்றார்.

## சாத்தான்குளம் வழக்கு: தண்டனையை உறுதி செய்யக்கோரி சிபிஐ மனு

**மதுரை, மே 1:**

சாத்தான்குளத்தில் செல் போன் கடை நடத்தி வந்த ஜெயராஜ், அவரது மகன் பென் னிக்ஸ் ஆகியோர், கொரோனா ஊரடங்கு அமலில் இருந்த காலகட்டத்தில் 2020 ஜூன் 19-ல் போலீசாரால் விசா ரணைக்கு அழைத்துச் செல் லப்பட்டு, பின்னர் உயிரிழந் தனர். இந்த சம்பவம் தொடர் பாக, சிபிஐ கொலை வழக்குப் பதிவு செய்து காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்து ராஜா, செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 9 பேரை கைது செய்தனர்.

இந்த வழக்கை, மதுரை முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றம் விசாரித்தது. விசா ரணை முடிந்த நிலையில், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உள்பட 9 பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்து, ஏப்ரல் 6-ம் தேதி நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்த தூக்குத் தண்டனையை உறுதி செய்யக் கோரி, தமிழக அரசு மற்றும் சிபிஐ தரப்பில் மதுரை ஐகோர்ட்டு அமர் வில் மனுத்தாக்கல் செய் யப்பட்டது. இந்நிலையில், சாத்தான்குளம் தந்தை - மகன் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 9 குற்றவாளிகளும் மேல்முறையீட்டு மனுக்களை ஜூன் 1ம் தேதிக்குள் தாக்கல் செய்ய மதுரை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. வழக்கின் முக்கியத்துவம் கருதி ஜூன் 4ம் தேதி முதல் தினசரி விசாரிக்கப்படும் என நீதிபதிகள் ஆனந்த் வெங் கடேஷ், ராம கிருஷ்ணன் அமர்வு அறிவித்துள்ளனர். விசாரணை நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை உறுதி செய்யக்கோரி சிபிஐ தரப்பிலும் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே குற்றவாளியான முன்னாள் ஆய்வாளர் ஸ்ரீதர், 15 நாட்கள் பரோல் விடுப்பு கோரிய மனுவையும் நீதிபதிகள் நிராகரித்தனர்.

## தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குழந்தையை காப்பாற்றிய அரசு மருத்துவர்கள்

**சென்னை, மே 1:**

சென்னை: தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பச்சிளம் குழந்தையை சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மருத்துவர்கள் காப்பாற்றினர்.

இதுதொடர்பாக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் சாந் தாராமன், மருத்துவக் கண் காணிப்பாளர் பாஸ்கர், எழும் பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மதி வாணன் ஆகியோர் கூறியதாவது: சென்னை புரசைவாக்கத்தில் உள்ள அரசு மகப்பேறு மருத் துவமனையில் கடந்த மாதம் தனலட்சுமி என்ற பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்தது.

மருத்துவமனையில் இருந்த ஒரு உபகரணத்தில் மின்கசிவால் ஏற்பட்ட தீ விபத்தால், குழந் தையின் உடலில் 23 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டது.

இதையடுத்து, குழந்தை மேல்சிகிச்சைக்காக சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந் தைகள் நல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.

அப்போது, குழந்தையின் உடலில் சூடு குறைந்து போயிருந் தது. நாடி மெலிதாக துடித்துக் கொண்டிருந்தது.

துரிதமாக செயல்பட்ட மருத்துவக் குழுவினர், உடனே குழந்தையின் உடலில் ஏற் பட்டிருந்த காயத்தை சுத்தப் படுத்தி, தீவு சிகிச்சையும் மேற் கொண்டனர்.

இதன்பிறகு, 4 நாட்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் செயற்கை சுவாசத்தில் குழந்தை வைக்கப் பட்டது. தீக்காயத்தில் கிருமித் தொற்று இருந்ததால் ஆன்டிப யாடிக் மருந்துகள் தொடர்ந்து 14 நாட்கள் செலுத்தப்பட்டன.

இதற்கிடையே, 3-ம் நாளில் குழாய் மூலம் குழந்தைக்கு தாய்ப்பாலும் கொடுக்கப்பட் டது. பின்னர், படிப்படியாக பாலாடை வழியாகவும், நேரடி யாகவும் தாய்ப்பால் கொடுக் கப்பட்டது. தினமும் காயத்தை சுத்தப்படுத்தி தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டது.

24 நாட்களில் குழந்தை முழு மையாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளது. குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய மருத்து வர்களுக்கு பெற்றோர் கண் ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பத்ம விருது பெற விண்ணப்பிக்கலாம்

**தஞ்சாவூர், மே 1:**

குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பன்முக திறமைக்கான விருதான "பத்ம விருது -2027" பெறுவதற்கு தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான நபர்கள் விண்ணப்பிக்கலாம் என தஞ்சை மாவட்ட ஆட்சியர் பா. பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "2026-ஆம் ஆண்டில் கலை, இலக்கியம் மற்றும் கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூகப்பணி, அறிவியல், பொது விவகாரங்கள், சிவில் சேவைகள், வர்த்தகம் மற்றும் தொழில் போன்ற துறைகளில் அளப்பரிய சாதனை புரிந்தவர்களுக்கு 26.01.2027-ஆம் நாளன்று கொண்டாடப்படும் குடியரசு தின விழாவில் மாநில அளவில் விருதுகள் வழங்கப்படவுள்ளது. மேற்படி, விருதிற்கு பன்முக திறமை புரிந்த நபர்களிடமிருந்து கருத்துரு 10.06.2026-க்குள் இணையதளம் (HTTPS://AWARDS.GOV.IN) மூலம் வரவேற்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான நபர்கள் இணையதளத்தில் விண்ணப்பித்த விவரத்தினை அறை எண். 303,3 ஆவது தளம், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் என்ற முகவரியில் நேரில் தொடர்பு கொண்டு விவரம் தெரிந்து கொள்ளலாம்" என கூறப்பட்டுள்ளது.

# டீப்ஃபேக் வீடியோ மூலம் வங்கியில் கடன் பெற்று நூதன மோசடி: குஜராத்தில் 4 பேர் கைது




**அகமதாபாத், மே 1:** டீப்ஃபேக் வீடியோ மூலம் வங்கியில் கடன் பெற்று நூதன மோசடி செய்த நான்கு பேரை அகமதாபாத் சைபர் க்ரைம் போலீஸார் கைது செய்துள்ளனர். இந்த சம்பவம் எப்படி கவனம் பெற்றுஎன்பதுகுறித்துபார்ப்போம்.

வழக்கமாக சைபர் மோசடியாளர்கள் ஓடிபி எண்ணை கொண்டு மோசடி செய்வர். அதனால் ஓடிபி-யை யாரிடமும் பகிர வேண்டாம் என காவல் துறையினர், வங்கிகள் சொல்வதுண்டு. இந்நிலையில், அந்த ஓடிபி-யை பெற டீப்ஃபேக் வீடியோவை குஜராத்தில் நான்கு பேர் பயன்படுத்தி உள்ளனர்.

அகமதாபாத் நகரைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவருக்கு தனது வங்கியில் இருந்து எந்தவித ஓடிபி-யும் கடந்த சில நாட்களாக வரவில்லை என்பதை கவனித்துள்ளார். அது தொடர்பாக சந்தேகம் அடைந்த அவர், போலீஸாரை தொடர்புகொண்டார். தொடர்ந்து போலீஸார் விசாரணையில் ஈடுபட்டு, இது தொடர்பாக நான்கு பேரை கைது செய்துள்ளனர்.

இந்த மோசடி எப்படி நடந்தது என்பது குறித்து போலீஸார் விவரித்துள்ளனர். சம்பந்தப்பட்ட தொழிலதிபரின் ஆதார் எண் உடன் லிங்க் செய்யப்பட்ட மொபைல் எண் மாற்றப்பட்டுள்ளது எங்களுக்கு தெரியவந்தது. இதற்காக அவரது பயோமெட்ரிக் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாற்றப்பட்ட அந்த மொபைல் எண்ணை கொண்டு, அந்த தொழிலதிபரின் பெயரில் வங்கிக் கணக்கு தொடங்கி, ரூ.25,000 கடன் பெற்றுள்ளனர். மேலும், அவரது டிஜிலாக்கர் கணக்கிலும் முக்கிய தரவுகள் உள்ளதா என்பதை மோசடியாளர்கள் ஆராய்ந்துள்ளனர்.

இதற்காக ஏஐ டூலை கொண்டு அந்த தொழிலதிபரின் டீப்ஃபேக் வீடியோவை உருவாக்கி உள்ளனர். அதன் மூலம் ஆதார் ஆத்தென்டிகேஷனை சரிபார்த்து, அதில் மொபைல் எண்ணை மாற்றி, ஓடிபி பெற்றுள்ளனர். தொடர்ந்து கேஒய்சி சரிபார்ப்பு மூலம் வங்கியில் கணக்கு தொடங்கி, கடன் பெற்றுள்ளனர். இந்த குற்றம் தொடர்பாக கனுபாய் பர்மர், ஆஷிஷ் வானந்த், முகமது கைஃப் படேல், தீப் குப்தா ஆகிய நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் பொது சேவை மையத்தில் பணி செய்தவர் என போலீஸார் தெரிவித்துள்ளனர்.

## விளையாட்டு செய்திகள்

### தாமஸ் கோப்பை பாட்மிண்டன்: சீனாவிடம் இந்திய அணி தோல்வி

**புதுடெல்லி, மே 1:** புதுடெல்லி: தாமஸ் கோப்பை பாட்மிண்டன் போட்டியில் சீனாவிடம், இந்திய அணி தோல்வி கண்டது. டென்மார்க்கின் ஹார்சென்ஸ் நகரில் தாமஸ் கோப்பைக்கான பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சீனா, இந்திய அணிகள் மோதின. முதல் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்திய வீரர் லக்சயா சென் 19-21, 21-8, 12-21 என்ற கணக்கில் சீனாவின் லீ ஷி பேங்கிடம் வீழ்ந்தார். இதைத் தொடர்ந்து இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ், சிராக் ஷெட்டி ஜோடி 13-21, 21-13, 24-26 என்ற கணக்கில் சீனாவின் லியாங் வெய் காங், சாங் வாங் ஜோடியிடம் வீழ்ந்தது. பின்னர் நடைபெற்ற மற்றொரு ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் ஆயுஷ் ஷெட்டி 17-21, 21-13, 21-15 என்ற கணக்கில் சீனாவின் வெங் ஹாங் யாங்கை தோற்கடித்தார். மற்றொரு இரட்டையர் ஆட்டத்தில் இந்தியாவின் ஹரிஹரன் அம்சகருணன், எம்.ஆர். அர்ஜுன் ஜோடி 17-21, 13-21 என்ற கணக்கில் சீனாவின் ஹி ஜி டிங், ரென் ஜியாங் யூ ஜோடியை வீழ்ந்தது.

கடைசியாக நடைபெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் இந்திய வீரர் எச்.எஸ்.பிரணாய் 20-22., 21-19, 21-11 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். இறுதியில் சீனா 3-2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

### காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்: இந்தியாவுக்கு 4 தங்கப்பதக்கம்




**புதுடெல்லி, மே 1:** காமன்வெல்த் இளையோர், ஜூனியர் மற்றும் சீனியர் பளுதூக்குதல் சாம்பி யன்ஷிப் போட்டி சமோவா நாட்டின் அபியா நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண்களுக்கான 65 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் சுனில் சிங் 'ஸ்னாட்ச்' முறையில் 126 கிலோ, 'கிளீன் அண்ட் ஜெர்க்' முறையில் 145 கிலோ என மொத்தம் 271 கிலோ எடைதூக்கி தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். 71 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் அபினோப் கோகோய் மொத்தம் 284 கிலோ (ஸ்னாட்ச்-129, கிளீன் அண்ட் ஜெர்க்-155) எடையை தூக்கி தங்கப்பதக்கத்தை தன்வசப்படுத்தினார். பெண்களுக்கான 58 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீராங்கனை அய்சங்பா கோகோய் மொத்தம் 185 கிலோ எடை தூக்கி (ஸ்னாட்ச்-79, கிளீன் அண்ட் ஜெர்க்-106) தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார். சீனியர் பிரிவில் ஆண்களுக்கான 65 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் சாரு பேசி 289 கிலோ எடை தூக்கி (ஸ்னாட்ச்-127, கிளீன் அண்ட் ஜெர்க்-162) தங்கப்பதக்கம் வென்றார்.

# தொழிலாளர் வர்க்கத்தினர் அனைவருக்கும் மே தின வாழ்த்து - செல்வப்பெருந்தகை

**சென்னை, மே 1:** தமிழககாங்கிரஸ்தலைவர் செல்வப்பெருந்தகைவெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தொழிலாளர்கள் தாங்கள் போராடிப் பெற்ற உரிமைகளை காக்கும் பொருட்டு ஒவ்வொரு வருடமும் மே மாதம் முதல் தேதியை மே தினமாக கடைபிடித்துக்கொண்டாடி வருகிறார்கள். ஒன்றிய பா.ஜ.க.அரசுநீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வந்த தொழிலாளர் நலச் சட்டங்களை அகற்றிவிட்டு, அவர்களுக்கு விரோதமாக புதிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. பண மதிப்பிழப்பு,அதிகப்படியான சரக்கு மற்றும் சேவை வரி, பணவீக்கம், பொருளாதார தேக்கநிலையினால் பல சிறு குறு, நடுத்தர தொழிற்சாலைகள் மூடப்பட்டு, உற்பத்தி குறைந்து பலர் வேலை வாய்ப்புகளை இழந்துள்ளனர். தொழிலாளர்கள், பணியாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஒவ்வொரு முன்னேற்றத்திற்கும் அடிப்படைக் காரணம் உழைப்பாளர்களின் அர்ப்பணிப்பு. எனவே, அவர்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும். அவர்கள் முன்னேறினால் தான் நாடு முன்னேறும். சமத்துவமும், சமூகநீதியும் நிலைநாட்டும் நாளாக இந்த மே தினம் அமையட்டும். வறுமையை வெல்லும் ஆயுதமானது உழைப்பு. அதை மதிப்பதும், காப்பதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும். உழைப்பை போற்றி, உழைப்போரை உயர்த்தி சமத்துவத்தை நிலை நிறுத்துவோம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி எப்போதுமே உழைப்பாளர்களின் உரிமைகளுக்காக போராடும், குரல் கொடுக்கும் என்ற உறுதியுடன், உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தினர் அனைவருக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் மே தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# கீழடியில் சாய கிண்ணங்கள் கண்டுபிடிப்பு - ஆய்வாளர்கள் வியப்பு



**சிவகங்கை, மே 1:** சிவகங்கை மாவட்டம், கீழடி பகுதியில் மத்திய, மாநில அரசுகள் சார்பில் ஏற்கனவே 10 கட்ட அகழாய்வு பணிகள் நடந்து முடிந்துள்ளன. இதில் 2,600 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழங்கால மக்கள் பயன்படுத்திய பல்வேறு பொருட்கள் கிடைத்துள்ளன. இது தமிழர்களின் பாரம்பரியத்தையும், பழங்கால நாகரிகத்தையும், தமிழரின் வீரத்தையும் பறைச்சாற்றும் வகையில் அமைந்துள்ளது. இந்த பொருட்கள் கீழடி அருங்காட்சியகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த அருங்காட்சியகத்தை தமிழக அரசின் தொல்லியல் துறை பராமரித்து வருகிறது.

குறிப்பாக, 2014-15- ஆம் ஆண்டுகளில்('ARCHAEOLOGICAL SURVEY OF INDIA') ஆர்க்கிலாஜிக்கள் சர்வே ஆப் இந்தியா வைகை நதிக்கரை நாகரிகத்தை ஆய்வு செய்ய தொடங்கியது. அதன் தொடர்ச்சியாக 2015-16- ஆம் ஆண்டில் மிகப்பெரிய செங்கல் கட்டுமானம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கண்டுபிடிப்பு 'INDUS VALLEY CIVILIZATION'-ஐ ஒத்த கட்டுமானமாக இருப்பதால், தமிழகத்தின் தொன்மை வரலாற்றிற்கு முக்கிய ஆதாரமாக அமைந்தது.

பின்னர் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடி, அகரம், கொந்தகை பகுதிகளில் தொடர்ந்து அகழாய்வுகளை மேற்கொண்டு பல்வேறு பழமையான பொருட்களை கண்டறிந்தது. இருப்பினும், இரண்டாம் கட்டத்தில் கண்டறியப்பட்ட செங்கல் கட்டுமானத்தின் முழு தொடர்ச்சியை உறுதிப்படுத்த பல ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், கஜேந்திரன் என்பவரின் நிலம் நீண்ட கால முயற்சிக்குப் பின் அரசால் பெற்றுக் கொள்ளப்பட்டு, கடந்த மார்ச் 18- ஆம் தேதி 11- ஆம் கட்ட அகழாய்வு தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் தோண்டப்பட்ட குழிகளில் செங்கல் கட்டுமானம், சாயக் கிண்ணம், சரிந்த கூரை ஓடுகள் போன்றவை கண்டறியப்பட்டன. கீழடியில் நடந்து வரும் 11ம் கட்ட அகழாய்வில் தொடர்ச்சியாக சாய கிண்ணங்கள் கண்டெடுக்கப்பட்டு வருவது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு மீட்டர் ஆழத்தில், எட்டு அடுக்குகள் கொண்ட செங்கல் கட்டுமானத்தின் தொடர்ச்சி கண்டறியப்பட்டதால் தொல்லியல் ஆய்வாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தற்போது கண்டறியப்பட்ட கட்டுமானம் தெற்கு திசையில் தொடர்வதாக இருப்பதால், அந்தப் பகுதியிலும் அகழாய்வு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக அதிகளவில் செங்கல் கட்டுமானங்கள் வெளிப்படுவதால், கீழடி ஒரு பெரிய நகரமாக இருந்திருக்கலாம் என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது. இதனால் அகழாய்வு பணிகளில் தொல்லியல் துறை மாணவர்களும் கூடுதலாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பகுதியில் பண்டைய காலத்தில் சாயத் தொழிற்சாலை செயல்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

# சகோதரியின் எலும்புக் கூடுடன் வந்த பழங்குடியின நபருக்கு பணத்தை வழங்கியது வங்கி நிர்வாகம்



**புவனேசுவரம், மே 1:** ஒடிசா மாநிலம் கேந்துஜார் மாவட்டம் தியானாலி கிராமத்தைச் சேர்ந்தவர் ஜீத்து முண்டா. இவரது சகோதரி கக்ரா முண்டா இரண்டு மாதங்களுக்கு முன்பு காலமானார். மல்லி பாசி பகுதியில் உள்ள ஒடிசா கிராமின் வங்கிக் கிளையில் கக்ரா கணக்கு வைத்திருந்தார். அதில் இருந்த ரூ.19,400-ஐ எடுப்பதற்காக ஜீத்து முண்டா வங்கிக்குச் சென்றுள்ளார்.

கல்வியறிவு இல்லாத பழங்குடியினரான ஜீத்து முண்டாவிடம், அவரது சகோதரியின் இறப்புச் சான்றிதழ் அல்லது வாரிசுச் சான்றிதழ் இல்லை. இதனால், கணக்கு வைத்திருப்பவர் நேரில் வர வேண்டும் அல்லது உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று வங்கி மேலாளர் கூறியுள்ளார்.

சட்ட நடைமுறைகளைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் விரக்தியடைந்த ஜீத்து முண்டா, கடந்த திங்கள்கிழமை மயானத்திற்குச் சென்று தனது சகோதரியின் உடலைத் தோண்டி எடுத்து, எலும்புக்கூடை துணியால் சுற்றி தோளில் சுமந்தபடி 3 கிலோ மீட்டர் தூரம் நடந்து வங்கிக்கு வந்தார்.

இந்தக் காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாகி நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இது வங்கியின் மனிதாபிமானமற்ற செயல் எனப் பலரும் கண்டனம் தெரிவித்தனர். இதையடுத்து ஒடிசா முதல்வர் மோகன் சரண் மாஜியும் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

இந்நிலையில் ஒடிசா கிராமின் வங்கி தனது எக்ஸ் தளத்தில், "இறந்தவர் நேரில் வர வேண்டும் என்று வங்கி அதிகாரிகள் தெரிவித்தாகக் கூறப்படும் தகவல் தவறானது. சட்டப்படியான ஆவணங்கள் இல்லாததால் பணத்தை வழங்க முடியவில்லை. அந்த நபர் மதுபோதையில் இருந்ததால் நடைமுறைகளை விளக்கிக் கூறியும் அவர் ஏற்கவில்லை. தற்போது அரசு அதிகாரிகள் வழங்கிய வாரிசுச் சான்றிதழின் அடிப்படையில், ரூ.19,402 தொகை 3 வாரிசுதாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### நடத்தையில் சந்தேகம்... இளம்பெண்ணை கொன்று கடற்கரையில் வீசிய கணவர்

**மலப்புரம், மே 1:** கேரளம் மாநிலம் மலப்புரம் மாவட்டம் பொன்னானியை சேர்ந்தவர் பாத்திமா (வயது 22). இவரது கணவர் முகமது (24). இவர்களுக்கு கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு ஒரு குழந்தை உள்ளது. முகமது போதைப்பொருள் பயன்படுத்தி வந்ததாக தெரிகிறது. இதற்கிடையே அவர் தனது மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டார்.

இதுதொடர்பாக கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது. சம்பவத்தன்று முகமது. பாத்திமா இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த முகமது தனது மனைவியின் கழுத்தை துப்பட்டாவால் இறுக்கினார். இதில் மூச்சுத்திணறி பாத்திமா உயிரிழந்தார். இந்த கொலை வெளியே தெரியாமல் இருப்பதற்காக, பாத்திமா உடலை முகமது பொன்னானி துறைமுகம் அருகே கடற்கரையில் வீசி உள்ளார்.

இதற்கிடையே கடற்கரை மணலில் இறந்து கிடந்த ஒரு பெண்ணின் காலை தெருநாய்கள் கடித்து இழுத்ததை மக்கள் பார்த்தனர். உடனே இதுகுறித்து பொன்னானி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரித்தபோது, பாத்திமாவின் உடல் என்பது தெரியவந்தது. பின்னர் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பொன்னானி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். கடற்கரையில் மனைவியின் உடலை வீசிய முகமது. அதன் மீது மணலை குவித்து மூட முயன்றதாக தெரிகிறது. விசாரணையில் நடத்தையில் ஏற்பட்ட சந்தேகத்தால் பாத்திமாவை முகமது கழுத்தை நெரித்து கொன்று கடற்கரையில் வீசியது தெரியவந்தது. இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து, முகமதுவை போலீசார் கைது செய்தனர். மேலும் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பின்னர் முழு விவரம் தெரியவரும் என்று போலீசார் தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### மூதாட்டியை கொன்று நகைகளை கொள்ளையடித்த இளைஞர் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கைது

**சென்னை, மே 1:** கரூர் மாவட்டம், வெள்ளியணை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சாலைப்பட்டியில் தனியாக வசித்து வந்தவர் தாயாரம்மாள் (79). கடந்த 26-ம் தேதி, திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை லந்தக்கோட்டையில் வசிக்கும் தனது மகள் மனோரஞ்சிதத்துடன் செல்போனில் பேசிவிட்டு, திண்ணையில் கட்டிலில் படுத்து தூங்கினார்.

மறுநாள் காலை, மூதாட்டியின் உறவினர் அருணாச்சலம் அந்த வழியாக சென்றார். அதிகாலை 4 மணிக்கே எழுந்து வீட்டு வேலைகளை செய்யும் தாயாரம்மாள் காலை 6.45 மணி ஆகியும் எழாததால் சந்தேகம் அடைந்தார்.

இதையடுத்து, வீட்டு வாசல் கேட்டை திறந்து உள்ளே சென்று பார்த்தபோது, கை, கால்கள், வாய் ஆகியவை துணியால் கட்டப்பட்டு இறந்த நிலையில் தாயாரம்மாள் கிடந்தார்.

இதுகுறித்து, தாயாரம்மாளின் மகள் மனோரஞ்சிதத்துக்கு அருணாச்சலம் தகவல் தெரிவித்தார். மனோரஞ்சிதம் சாலப்பட்டிக்கு விரைந்து வந்து, தாயாரின் சடலத்தை பார்த்து அதிர்ச்சியடைந்தார். மேலும், அவர் அணிந்திருந்த அரை சவரன் தோடு மற்றும் கால் சவரன் மூக்குத்தி ஆகியவற்றை காணவில்லை. இந்த கொலை தொடர்பாக மனோரஞ்சிதம், வெள்ளியானை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

இதன்பேரில், போலீஸார் தீவிர விசாரணை நடத்தி, செல்போன் சிக்னல்களை ஆய்வு செய்ததில் மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தை சேர்ந்த பாண்டீஸ்வரன் (19) என்பவர் தான் கொலை செய்து விட்டு தப்பியது தெரிந்தது.

அவரது செல்போன் எண்ணை ஆய்வு செய்த போது, கேரள மாநிலம் ஆலப்புழாவில் இருந்து, ஜார்கண்ட் மாநிலம் தன்பாத் செல்லும் விரைவு ரயிலில் பயணம் செய்வது தெரிய வந்தது. இதையடுத்து, கரூர் மாவட்ட போலீஸார், சென்னை சென்ட்ரல் ரயில்வே போலீஸாருக்கு தகவல் அளித்தனர். அதன்பேரில், தன்பாத் விரைவு ரயில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு சென்ட்ரலுக்கு வந்தவுடன், உரிய அடையாளம் மற்றும் போட்டோவை வைத்து, பாண்டீஸ்வரனை ரயில்வே போலீஸார் கைது செய்தனர்.

## வணிகச் செய்திகள்

### கிரெடிட் கார்டு பணம் செலுத்த ரிசர்வ் வங்கி கூடுதல் அவகாசம்!

**புதுடெல்லி, மே 1:** கிரெடிட் கார்டு நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்த, நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்குப் பிறகு 3 நாள்கள் வரை கூடுதல் அவகாசம் வழங்கி புதிய விதிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

தற்போதைய நடைமுறைப்படி, கடைசி தேதி முடிந்து ஒரு நாள் தாமதமானாலும் வங்கிகள் அபராதம் வசூலித்து வருகின்றன. ஆனால் புதிய விதியின்படி, நிர்ணயிக்கப்பட்ட தேதி முடிந்து 3 நாள்கள் கடந்த பிறகே ஒரு கணக்கை நிலுவையில் உள்ள கணக்காக வங்கிகள் கருத வேண்டும்.

இந்த 3 நாள்களுக்குள் தொகையைச் செலுத்தினால், கூடுதல் அபராதக் கட்டணங்கள் வசூலிக்கப்படாது என்பதுடன், வாடிக்கையாளரின் கடன் தகுதி பாதிக்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றொரு முக்கிய மாற்றமாக, அபராதக் கட்டணத்தை கணக்கிடும் முறையில் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதுவரை மொத்த நிலுவைத் தொகையின் மீதும் அபராதம் விதிக்கப்பட்டு வந்தது. ஆனால் இனி கடைசி தேதிக்கு முன்னதாக வாடிக்கையாளர் ஒரு பகுதியைச் செலுத்தியிருந்தால், மீதமுள்ள நிலுவைத் தொகைக்கு மட்டுமே அபராதம் விதிக்கப்பட வேண்டும். அதேநேரம், இந்த 3 நாள் அவகாசம் என்பது அபராதம் மற்றும் கடன் தகுதி பாதிப்பில் இருந்து மட்டுமே வாடிக்கையாளர்களைக் காக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. கடைசி தேதிக்கு அடுத்த நாள் முதல் நிலுவைத் தொகைக்கான வழக்கமான வட்டி கணக்கிடப்படும் என்பதால், வாடிக்கையாளர்கள் நிதி ஒழுக்கத்தைப் பேணுவது அவசியம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# பெங்களூருவில் கனமழை: மருத்துவமனை சுவர் இடிந்து விழுந்து 7 பேர் பலி

**பெங்களூரு, மே 1:**

பெங்களூருவில் பெய்த அதீத கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக, சிவாஜிநகர் பகுதியில் உள்ள பவுரிங் மற்றும் லேடி கர்சன் மருத்துவமனையின் சுற்றுச்சுவர் இடிந்துவிழுந்ததில் 7 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.

மழையிலிருந்து தப்பிக்க சுவரின் ஓரமாக ஒதுங்கியிருந்த நடைபாதை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் மீது சுவர் இடிந்து விழுந்ததாக கூறப்படுகிறது. இதில் சம்பவ இடத்திலேயே 7 பேர்



பரிதாபமாக உயிரிழந்தனர். பலியானவர்களில் 3 குழந்தைகளும் அடங்குவர்.

மேலும், இந்த விபத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த உடனே மீட்புப் படையினர் மற்றும் போலீசார் விரைந்து வந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என கர்நாடக முதல்-மந்திரி சித்தராமையா அறிவித்துள்ளார்.

மேலும், துணை முதல்-மந்திரிடி.கே.சிவக்குமார் மற்றும் முதல்-மந்திரி சித்தராமையா ஆகியோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

காயமடைந்தவர்களுக்கு சிறந்த சிகிச்சை வழங்கவும், மீட்புப் பணிகளை விரைவு படுத்தவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# தெலங்கானா ஏரிக்கரையில் சிதறி கிடந்த ரூ.500 கள்ள நோட்டுகள்

**கம்மம், மே 1:**

தெலங்கானா மாநிலம் கம்மம் மாவட்டம், லச்சாபுரத்தில் உள்ள ஏரிக்கரையில், நேற்று அதிகாலை 500 ரூபாய் நோட்டுகள் நாலா புறமும் சிதறி கிடந்தன. இதனை பார்த்த அப்பகுதியினர் ஆச்சரியப்பட்டனர்.

இது குறித்து லச்சாபுரம் போலீஸாருக்கு தகவல் எட்டியது. உடனே போலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு சிதறி கிடந்த சுமார் 30 ஆயிரம் மதிப்புள்ள 500 ரூபாய் நோட்டுகளை சேகரித்து சோதித்து பார்த்தனர். அப்போது அவை அனைத்துமே கள்ள நோட்டு கள் என்பது தெரியவந்தது. யாரோ கள்ள நோட்டுகளை மாற்ற பயந்து, இங்குள்ள ஏரிக்கரையில் வீசி விட்டு சென்றுள்ளனர் என போலீஸார் கருதுகின்றனர். இது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்தியா விலைவாசி உயர்வுக்கான சவாலை சந்திக்கும் - மத்திய நிதி அமைச்சகம்




**புதுடெல்லி, மே 1:**

மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள மாதாந்திர பொருளாதார அறிக்கையில், ஈரான் போர் பதற்றம் எதிரொலியாக இந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்க அபாயத்தை ஏற்படுத்தக்கூடும் என்று எச்சரித்துள்ளது. இந்த அறிக்கையின் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

ஈரானுக்கும் இஸ்ரே லுக்கும் இடையிலான போர் மற்றும் போர் பதற்றம் காரணமாக எரிசக்தி மற்றும் உரங்களின் வினியோகம் பாதிக்கப்படலாம். இது பொருட்களின் விலையை உயர்த்தி பணவீக்கத்தை அதிகரிக்க வாய்ப்புள்ளது. கடல்வழி வணிகத் தடைகள் மற்றும் போர் சூழலால் சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்படும் அபாயம் உள் ளது.

சர்வதேச அளவில் நெருக்கடி இருந்தாலும், இந்தியாவின் உள்நாட்டு பலம் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும். உள்நாட்டிலே யே பொருட்களுக்கான தேவை அதிகமாக இருப்பது வெளிநாட்டுப் பாதிப்புகளைக் குறைக்க உதவும். விவசாயிகளைப் பாதுகாக்க, எதிர்வரும் காரீப் பருவத்துக்கான (சித்திரைபட்டம்) உர மானியத்தை அரசு 12 சதவீதம் அதிகரித்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்ப ட்டுள்ளது.

# வரும் ஆண்டுகளில் மழை, வெயிலின் தாக்கம் அதிகரிக்கும்- ஆய்வில் தகவல்

**புதுடெல்லி, மே 1:**

'டெல்லியில் காலநிலை மீள்திறன் பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் நுண்ணறிவு அமைப்பின் (வலைத்தளம்) தொடக்க விழா நடைபெற்றது. இந்த தளத்தை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை மந்திரி பியூஷ் கோயல் தொடங்கி வைத்தார்.

ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் கவுன்சில் உருவாக்கிய இந்த தளத்தில் காலநிலை மாற்றம் தொடர்பாக பதிவுகள் உள்ளன.



அடுத்த 2 தசாப்தங்களில் இந்தியா ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 15 முதல் 40 அசாதாரணமான வெப்ப நாட்களை எதிர் கொள்ளக்கூடும் என்றும், இது மனித ஆரோக்கியத்தை பாதிக்கும் என்றும் இந்த பதிவுகளில் கூறப்பட்டு உள்ளது.

இது குறித்து கவுன்சிலின் தலைமை நிர்வாக அதிகாரி அருணபா கோஷ் பேசுகையில், "டெல்லியில், வெப்பமான இரவுக ளின் எண்ணிக்கை, தற்போதுள்ள ஆண்டுக்கு சுமார் 180 நாட்க ளிலிருந்து, அடுத்த 25 ஆண்டுகளில் 210 நாட்களுக்கும் மேலாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. உயர்ந்து வரும் வெப்பநிலைக்கு இணையாக, அடுத்த 2 தசாப்தங்களில் கன மழை நிகழ்வுகளும் சீராக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள் ளது.

மராட்டியம், தெலுங்கானா, ஆந்திர பிரதேசம், கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு போன்ற மத்திய மற்றும் தென் மாநிலங்களில், வெயிலும், மழையும் கணிசமாக அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது" என்றார்.

# வெறுப்புப் பேச்சுகளுக்கு எதிரான மனுக்கள்: உச்சநீதிமன்றம் தள்ளுபடி

**புதுடெல்லி, மே 1:**



நாட்டில் அதிகரித்து வரும் வெறுப்புப் பேச்சுகளைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்க வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீது உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு புதன்கிழமை தீர்ப்பளித்தது.

அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது: குற்றங்களுக்குத் தண்டனையை நிர்ணயிப்பது என்பது முழுமையாக நாடாளுமன்ற அதிகார வரம்புக்குள்பட்டதாகும். பிஎன்எஸ்எஸ் சட்டத்தின் கீழ் அமைந்துள்ள சட்ட ரீதியான கட்டமைப்பு, குற்றவியல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விரிவான வழிமுறையை அளிக்கிறது. இதில் சட்டரீதியாக எந்த வெற்றிடமும் இல்லை.

வெறுப்புப்பேச்சுக்கு எதிராக சட்டம் இயற்றும் அதிகாரம் நீதிமன்றங்களிடம் இல்லை. நாடாளுமன்றத்திடம்தான் உள்ளது. அதிகபட்சமாக சீர்திருத்தத்தின் அவசியத்தை நீதிமன்றம் சுட்டிக்காட்டலாம். ஆனால் சட்டம் இயற்றுவதா? வேண்டாமா? அவ்வாறு சட்டம் இயற்றுவதாக இருந்தால், அதை எவ்வகையில் இயற்றுவது என்பது குறித்த முடிவு நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளின் தனிப்பட்ட அதிகார வரம்புக்குள்பட்டதாகும்.

கட்டாயப்படுத்த முடியாது: அரசியல் சாசன நீதிமன்றங்கள் சட்டம் குறித்து தெளிவுரை வழங்கலாமே தவிர, சட்டம் இயற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. மேலும் ஏற்கெனவே உள்ள குற்றவியல் சட்டங்களின் கீழ், வெறுப்புப் பேச்சு தொடர்பான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க வழியுள்ளது. வெறுப்புப் பேச்சுக்கு எதிராக அந்தச் சட்டங்களே போதுமானவையாக உள்ளன என்று தெரிவித்தது.

எனினும் மாறிவரும் சமூகச் சூழல்களின் பின்னணியில், வெறுப்புப் பேச்சுகளைத் தடுக்க புதிய சட்டம் ஏதேனும் அவசியமா என்பதை பரிசீலிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு அறிவுறுத்திய நீதிபதிகள் அமர்வு, மனுக்களை தள்ளுபடி செய்தது.

# 'ஆட்டோ, டாக்ஸி ஓட்டுநர்களுக்கு மராத்தி மொழி தெரிந்திருக்க வேண்டும்'

**புதுடெல்லி, மே 1:**

மகாராஷ்டிராவில் ஆட்டோ, டாக்ஸி ஓட்டுநர் களுக்கு மராத்தி மொழி தெரிந்திருக்கிறதா என்பதை அறிய மே.1 முதல் ஆக.15 வரை சிறப்பு சரி பார்ப்புப் பணி நடைபெற உள்ளது.

இது குறித்து மகாராஷ்டிர போக்குவரத்துத் துறை அமைச்சர் பிரதாப் சர்நாயக் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "இந்தச் சோதனையின் போது ஆட்டோ, டாக்ஸி ஓட்டுநர் களுக்கு மராத்தி மொழி தெரியவில்லை என்றால் ஓட்டுநர் உரிமம் ரத்து ஆகாது. ஆனால், மராத்தி மொழி கற்க கால அவகாசம் அளிக்கப்படும். ஏற்கெனவே உள்ள சட்ட விதிகளின்படி மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

ஓட்டுநர் களுக்கு மராத்தி மொழி தெரிந்திருக்கிறதா என்பதை அறியும் பணி மாநிலம் முழுவதும் உள்ள 59 மண்டலப் போக்குவரத்து அலுவலகப் பகுதிகளில் நடைபெறுகிறது.

சமீபத்தில் மும்பை மீரா பாந்தர் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில், 3,443 ஆட்டோ ஓட்டுநர் களில் 565 பேருக்கு மராத்தி மொழி பேச தெரியவில்லை என்ற விவரம் தெரிந்தது.

# பேஸ்புக் விளம்பரத்தை நம்பி ரூ.12 லட்சத்தை இழந்த பெண்

**பெங்களூரு, மே 1:**

வெளிநாட்டிற்கு சுற்றுலா செல்லத் திட்டமிட்டு, சமூக வலைதள விளம்பரத்தை நம்பிய பெங்களூருவைச் சேர்ந்த பெண் ஒருவர், சுமார் 12 லட்ச ரூபாய் பணத்தை பறிகொடுத்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் 33 வயது பெண், ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலா செல்ல விரும்பியுள்ளார். இதற்காக பேஸ்புக்கில் உள்ள ஒரு பயணப் பக்கத்தை (TRAVEL PAGE) அணுகியுள்ளார். அங்கிருந்த கவர்ச்சிகரமான விளம்பரங்களைப் பார்த்து, அவர்களின் மூலம் பயணத்தைத் திட்டமிட முடிவு செய்துள்ளார்.

அவர்கள் அந்தப் பெண்ணிடம் விசா, விமான டிக்கெட்டுகள் மற்றும் அங்கு தங்குவதற்கான இடங்கள் எனப் பல காரணங்களைக் கூறி, பல்வேறு தவணைகளில் மொத்தம் ரூ. 12,77,000 வசூலித்துள்ளனர்.




பணம் முழுவதையும் செலுத்திய பிறகு, திடீரென அந்தப் பயணப் பக்கத்தின் நிர்வாகம் தொழில்நுட்பக் காரணங்களால் "ட்ரிப் ரத்து" செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

அந்தப் பெண் தனது பணத்தைத் திரும்பக் கேட்டபோது, வெறும் ரூ. 1.18 லட்சத்தை மட்டும் திருப்பி அளித்துள்ளனர். மீதமுள்ள சுமார் 11.59 லட்ச ரூபாயை வழங்க மறுத்து, அவரைத் தொடர்பு கொள்ள முடியாதபடி ஏமாற்றியுள்ளனர்.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்தப் பெண், உடனடியாக பெங்களூரு சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்தார்.

புகாரைப் பெற்றுக்கொண்ட போலீசார், தற்போது வழக்குப்பதிவு செய்து மோசடியில் ஈடுபட்ட நபர்களின் வங்கி கணக்குகள் மற்றும் பேஸ்புக் பக்கத்தின் பின்னணி குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பஞ்சாப் சரக்கு ரயில் வழித் தடங்களில் 'ட்ரோன்' மூலம் கண்காணிப்பு: ரயில்வே அமைச்சகம்

**புதுடெல்லி, மே 1:**

பஞ்சாபில் பிரத்யேக சரக்கு ரயில் வழித் தடத்தில் கடந்த 3 மாதங்களில் 2 வெடி தாக்குதல்கள் நிகழ்ந்துள்ள நிலையில், இந்த வழித்தடங்களை ஆளில்லா விமானங்கள் மூலமும் கண்காணிப்பை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று ரயில்வே இணையமைச்சர் ரவ்னீத் சிங் பிட்டு தெரிவித்தார். மேலும், 'இந்த ரயில் பாதைகளில் 24 மணி நேரமும் ரோந்துப் பணியும் மேற்கொள்ளப்படும்' என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ரயில் வழித் தடத்தில் செவ்வாய்க்கிழமை வெடிச் சம்பவம் நிகழ்ந்த பகுதியை புதன்கிழமை பார்வையிட்ட பிறகு, இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

ஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் ஷாம்பு பகுதியில் செல்லும் பிரத்யேக சரக்கு ரயில் வழித் தடத்தை, பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ ஆதரவு பெற்ற காலிஸ்தான் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய நபர்கள் வெடி வைத்து தகர்க்கும் முயற்சியில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர். ஆனால், அந்த வெடிமருந்து முன்கூட்டியே வெடித்ததால், அதை எடுத்துவந்த நபர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தார். ரயில் பாதைக்கு பெரிய அளவில் சேதம் ஏற்படவில்லை. சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்ட கைப்பேசி சிம்கார்டில் மேற்கொண்ட ஆய்வு மற்றும் கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில், இந்த சதித் திட்டத்தைத் தீட்டிய முக்கிய குற்றவாளியான பிரதீப் கல்சாதான் உள்பட நால்வரை பஞ்சாப் போலீஸார் கைது செய்தனர்.

வெடிச் சம்பவம் நிகழ்ந்த ரயல் வழித் தட பகுதியை புதன்கிழமை ஆய்வு செய்த மத்திய அமைச்சர் ரவ்னீத் சிங் பிட்டு, பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கிழக்கு பிரத்யேக சரக்கு ரயில் வழித் தடத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வழித் தடத்தில் 24 மணி நேர ரோந்துப் பணி அமல்படுத்தப்பட உள்ளது. பஞ்சாபில் இந்த வழித் தடத்தில் ஏற்கெனவே 173 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில், மேலும் அதிக இடங்களில் கண்காணிபபு கேமராக்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ஆளில்லா விமானங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி கண்காணிப்பது உள்பட நவீன கண்காணிப்பு முறைகள் மூலம் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட உள்ளது. சூரிய சக்தியில் செயல்படும் கேமராக்களும் பொருத்தப்பட்டு வருகின்றன என்றார்.

# 12 நாடுகளுடன் மேலும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள்- பியூஷ் கோயல் தகவல்

**புதுடெல்லி, மே 1:**

கனடா, இஸ்ரேல், பிரேஸில் உள்பட மேலும் 12 நாடுகள் மற்றும் கூட்டமைப்புகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் தயாராகி வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் புதன்கிழமை தெரிவித்தார்.

மேற்காசிய போரால் எழுந்துள்ள சவால்களுக்கு மத்தியிலும் இம்மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக தில்லியில் செய்தியாளாகளுக்கு புதன்கிழமை அளித்த பேட்டியில் பியூஷ் கோயல் கூறியதாவது:

ஐக்கிய அரபு அமீரகம்,



பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், 4 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய தடையற்ற வர்த்தக கூட்டமைப்பு, ஆஸ்திரேலியா, மோரீஷஸ், ஓமன், நியூஸிலாந்து ஆகிய நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்கள், உள்நாட்டு தொழில்துறைக்கு மிகப் பெரிய உத்வேகத்தை அளித்துள்ளன.

கடந்த நிதியாண்டை ஒப்பிடுகையில், நடப்பு ஏப்ரல் மாதத்தின் முதல் 3 வாரங்களில் நாட்டின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. மேற்காசிய போரால் எழுந்துள்ள சவால்களுக்கு மத்தியிலும் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்துக்கான முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையில் தொடர்ந்து சவாலான சூழல் நிலவுவதால், பிற வழித்தடங்கள் வழியாக சரக்கு போக்குவரத்து மேற்கொள்ளப்படுகிறது.

அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தைப் பொருத்தவரை, கடந்த வாரம் ஆக்கபூர்வ பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

சிலி, பெரு, இஸ்ரேல், வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில், கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் அதன் அண்டை பிராந்தியங்கள், பிரேசில் மற்றும் அதன் அண்டை நாடுகள் மற்றும் ரஷியாவுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகிறது.

அதன்படி, மேலும் 12 ஒப்பந்தங்கள் தயாராகி வருகின்றன. நாட்டில் அந்நிய நேரடி முதலீடு அதிகரித்து வருகிறது. இது, 88 பில்லியன் டாலரை எட்டும் என்றார் அவர்.

புவி-அரசியல் பதற்றங்கள் மற்றும் வர்த்தகஸ்திரமின்மையால் கடந்த மார்ச்சில் சரக்கு ஏற்றுமதி 7.44 சதவீதம் குறைந்து, முந்தைய 5 மாதங்களில் இல்லாத அளவில் 38.92 பில்லியன் டாலராக சரிந்தது.

# காஷ்மீரை பாகிஸ்தானின் பகுதியாக காட்டி..நேபாள ஏர்லைன்ஸ் மேப் வெளியிட்டதால் சர்ச்சை

வாஷிங்டன், மே 1:

இந்தியாவின் அண்டை நாடுகளில் ஒன்று நேபாளம். இமயமலை அடிவாரத்தில் அமைந்துள்ள நேபாளம், இந்தியாவுடன் சுமார் 1,751 கிலோமீட்டர் தொலைவுக்கு எல்லையை பகிர்ந்து கொள்கிறது.

இந்தியாவின் நெருக்கமான நாடாக நேபாளம் இருந்தாலும், சமீப காலமாக இந்தியாவை சீண்டும் செயல்களில் அடிக்கடி அந்த நாடு ஈடுபட்டு வருகிறது. கடந்த ஆண்டு நேபாளம் வெளியிட்ட பணத்தாளில் இடம்பெற்ற வரைபடத்தில் இந்தியாவின் கலாபானி, லிபுலேக், லிம்பியதுரா ஆகிய பகுதிகளை தங்கள் நாட்டின் ஒரு பகுதியாக சித்தரித்திருந்தது. இது கடும் சர்ச்சையை கிளப்பியது.



இந்த நிலையில், இந்தியாவின் ஒரு அங்கமான காஷ்மீரை பாகிஸ்தானுக்கு சொந்தமானது என்று வரைபடம் ஒன்றை நேபாள அரசுக்கு சொந்தமான நேபாள ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் வெளியிட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் பகுதி, பாகிஸ்தானின் பிரதேசமாக காட்டப்பட்டிருந்தது.

அது சமூக வலைதளங்களில் உடனடியாக வைரலானது. வெளியுறவு அமைச்சகம் மற்றும் இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம், சம்பந்தப்பட்ட நேபாள ஏர்லைன்ஸ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியது.

இதையடுத்து அந்த பதிவை நேபாள ஏர்லைன்ஸ் விமான நிறுவனம் நீக்கியுள்ளது. மேலும், பிழையாக வெளியான அந்த வரைபடத்திற்காக மன்னிப்பு கோருவதாகவும் நேபாள ஏர்லைன்ஸ் கூறியுள்ளது.

## 146 ஆண்டுகளுக்குப் பின் ரஷ்யாவை உலுக்கிய பனிப்புயல்

வாஷிங்டன், மே 1:

1880 க்குப் பிறகு சுமார் 146 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சக்திவாய்ந்த பனிப்புயலை ரஷ்ய தலைநகர் மாஸ்கோ எதிர்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கடந்த சில தினங்களாக வீசிவரும் பனிப்புயல் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளது. இந்தப் பனிப்புயலானது மணிக்கு 82 கி.மீ என்ற அதிவேகத்தில் வீசியுள்ளது. இதனால் நகரின் பல பகுதிகளில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்து விழுந்ததால் பல இடங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

## டிரம்ப்பின் அதிகாரத்தைக் குறைக்க அமெரிக்க செனட் மறுப்பு

கியூபா மீதான அமெரிக்காவின் எரிசக்தி முற்றுகையை முடிவுக்குக் கொண்டு வரக்கோரி ஜனநாயகக் கட்சியினர் கொண்டு வந்த சட்டத் தீர்மானத்தைக் குடியரசுக் கட்சியினர் செவ்வாயன்று நிராகரித்தனர். நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இன்றி ஜனாதிபதி இத்தகைய பொருளாதாரத் தடைகளைத் தொடரக்கூடாது என்ற முயற்சி இதன் மூலம் தோல்வியடைந்துள்ளது. மசோதா மீதான விவாதத்தின் போது கியூபாவில் ஆட்சியை கவிழ்க்க டிரம்ப்பின் முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என செனட்டர் ரிக் ஸ்காட் வலியுறுத்தியுள்ளார்.

## மாலியில் இருந்து குடிமக்கள் வெளியேற பிரான்ஸ் உத்தரவு

மாலியில் பயங்கரவாதிகள் நகரங்களை கைப்பற்ற துவங்கியுள்ள நிலையில் அந்நாட்டின் பாதுகாப்பற்ற சூழல் மிகவும் மோசமாகியுள்ளது. இந்நிலையில் தங்கள் குடிமக்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமாக அந்நாட்டில் இருந்து வெளியேறுமாறு பிரான்ஸ் உத்தரவிட்டுள்ளது. அதுவரை பாதுகாப்பாக வீட்டிலேயே இருக்கவும், நடமாட்டத்தைக் குறைத்துக் கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், மாலிக்கான அனைத்து பயணங்களையும் தவிர்க்குமாறு பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## சீன ரோபோக்களுக்கு ஜப்பானில் வேலை




ஜப்பான் தலைநகர் டோக்கியோ விமான நிலையத்தில் ஜப்பான் ஏர்லைன்ஸ் நிறுவனம் சரக்குகளை கையாளும் பணிக்கு சீனாவின் யூனிட்ரீ (UNITREE) ரோபோக்களை சோதனை முறையில் பயன்படுத்தத் துவங்கியுள்ளது. இந்த சோதனை ஓட்டம் 2028 வரை சுமார் 2 ஆண்டுகளுக்கு நடைபெறும் வகையில் திட்டமிட்டுள்ளது. இந்த சோதனை வெற்றி பெற்றால், தூய்மை பணிக்கும், சிறிய ரக பேட்டரி வாகனங்களை இயக்குவது போன்ற பணிகளிலும் ரோபோக்கள் ஈடுபடுத்தப்படும் என கூறப்பட்டுள்ளது.

## மேற்கு ஆசிய அமைதிக்கு அனைவரும் முயற்சிக்க சீனா அழைப்பு

மேற்கு ஆசியாவில் அமைதியை மீட்டெடுக்க அனைத்துத் தரப்பினரும் தீவிர முயற்சி எடுக்க வேண்டும் என்று சீனா அழைப்பு விடுத்துள்ளது. ஐ.நா பாதுகாப்பு அவையில் நடைபெற்ற விவாதத்தில் பேசிய சீனாவின் நிரந்தரப் பிரதிநிதி ஃபூ காங், தற்போது போர் முடிந்து அமைதி திரும்புவதற்கான ஒரு முக்கியமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை பின்னோக்கித் தள்ளாமல், அனைத்துத் தரப்பினரும் மிகுந்த நிதானத்து டன் செயல்பட வேண்டும். அரசியல் ரீதியான தீர்வை நோக்கிச் செல்வதே பயனளிக்கும் என கூறியுள்ளார்.

# "கோஹினூர் வைரத்தை திரும்பத் தருமாறு மன்னர் சார்லஸை வலியுறுத்துவேன்" - நியூயார்க் மேயர் மம்தானி

நியூயார்க், மே 1:

வரலாற்று சிறப்பு மிக்க கோஹினூர் வைரத்தை மீண்டும் இந்தியாவிடம் வழங்குமாறு பிரிட்டன் மன்னர் சார்லஸிடம் வலியுறுத்த உள்ளதாக நியூயார்க் நகர மேயர் ஜோரான் மம்தானி கூறியுள்ளார்.



பிரிட்டன் மன்னர் சார்லஸ் மற்றும் அவரது மனைவி கமிலா ஆகியோர் அமெரிக்காவுக்கு சென்றுள்ளனர். அங்கு அந்நாட்டு அதிபர் டொனல்டு ட்ரம்ப்பை அவர்கள் சந்தித்தனர். வெள்ளை மாளிகையில் அவர்களுக்கு அமெரிக்கா அரசு முறை வரவேற்பை அளித்தது.

இந்நிலையில், செய்தியாளர்களை சந்தித்த நியூயார்க் நகர மேயர் ஜோரான் மம்தானி கூறியதாவது: "மன்னர் சார்லஸ் உடன் தனித்து பேசும் வாய்ப்பு கிடைத்தால், கோஹினூர் வைரத்தை திரும்ப தருமாறு வலியுறுத்துவேன்" என்றார். அவரது இந்த கருத்து அமெரிக்க அரசியலில் விமர்சனங்களை எழுப்பி உள்ளது. மேயர் மம்தானி இதுபோல தெரிவித்திருக்க கூடாது என நியூயார்க் நகர அரசியலில் அனுபவம் கொண்டவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேயர் மம்தானி இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்தச் சூழலில் கடந்த 2001-ல் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களின் நினைவிடத்தில் மன்னர் சார்லஸ் மற்றும் ராணி கமிலா தம்பதியர் அஞ்சலி செலுத்தினர். அப்போது மன்னர் சார்லஸை மம்தானி சந்தித்தார். இருப்பினும் அந்த சந்திப்பில் அவர்கள் பேசியது என்ன என்ற விவரம் எதுவும் வெளியாகவில்லை.

கோஹினூர் வைரம்: ஆந்திர மாநில சுரங்கத்தில் இருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மிகப்பெரிய வைரம் வெட்டியெடுக்கப்பட்டது. அதற்கு கோஹினூர் என்று பெயர் வைத்தனர். தற்போது உலகிலேயே மிகப்பெரிய வைரமாக (105 கேரட்) கோஹினூர் உள்ளது. அதன் மதிப்பு 200 மில்லியன் டாலர் என்று கூறப்படுகிறது. கோஹினூர் வைரம் உலகில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட வைரங்களில் மிகவும் விலை உயர்ந்ததாக கருதப்படுகிறது. இது 14 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது

# அருங்காட்சியகத்தில் கோடீஸ்வரர்களின் முகத்துடன் திரியும் நாய்கள்!

பெர்லின், மே 1:

உலக கோடீஸ்வரர்களின் முகங்களின் மாதிரியைக் கொண்டு அமெரிக்க கலைஞர் நாய் ரோபோக்களை உருவாக்கியிருப்பது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.



தொழில்நுட்பம் மற்றும் கலாசாரத் துறையில் பிரபலம் வாய்ந்த அமெரிக்க கலைஞர் மைக் வின்கெல்மேன், தொழில்நுட்பத் துறையில் கோடீஸ்வரர்களாக இருப்பவர்களின் முகங்களைக் கொண்ட ரோபோ நாய்களை உருவாக்கி கலைத் துறையில் கவனம் பெற்றுள்ளார்.

பெர்லின் கண்காட்சியில் எலான் மஸ்க், மார்க் ஸுக்கர்பெர்க், ஜெஃப் ஃபெசோஸ், வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் உள்பட வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தவர்களான ஆண்டி வார்ஹோஸ், பாப்லோ பிகாசோ போன்றோரின் சிலிக்கான் தலைகளுடன் பொருத்தப்பட்டு, ரெகுலர் அனிமல்ஸ் என்ற பெயரில் கலைக்கூடத்தின் வெளியில் ஓய்வில்லாமல் திரியும்படியாக உலாவ விட்டுள்ளனர்.

ஒவ்வொரு ரோபோவிலும், அதன் சுற்றுப்புறத்தைப் படம்பிடித்து, அவற்றை அச்சிட்டு வெளியிடும்படியான கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

## ஈரான் நாணய மதிப்பு இதுவரை இல்லாத அளவுக்கு கடும் வீழ்ச்சி

வாஷிங்டன், மே 1:

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுடனான போர்ப் பதற்றம் காரணமாக ஈரானின் நாணயமான ரியால் முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. நேற் றைய நிலவரப்படி, ஒரு அமெரிக்க டாலருக்கு நிகரான ஈரானிய நாணயமான ரியாலின் மதிப்பு 18.1 லட்சமாக சரிந்து புதிய உச் சத்தைத் தொட்டுள்ளது. கடந்த இரண்டு நாட்களில் மட்டும் ரியால் மதிப்பு 15 சதவீதம் சரிந்துள்ளது. இதன் காரணமாக பால், ரொட்டி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அதுபோல ஒரு யூரோவுக்கு எதி ரான ரியாலின் மதிப்பு 21.1 லட்சம் ரியால்களாகும், ஒரு பிரிட்டிஷ் பவுண்டுக்கு எதிரான மதிப்பு 24.4 லட்சம் ரியால்களாக அதலபாதாளத்துக்கு வீழ்ந்தது.

## ஒபெக் அமைப்பில் இருந்து வெளியேறுகிறது ஐக்கிய அரபு அமீரகம்

துபாய், மே.1:

முக்கிய எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக் மற்றும் ஒபெக் பிளஸ் குழுக்களில் இருந்து மே 1-ம் தேதி முதல் விலகுவதாக அமீரகம் அறிவித்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியதால் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகம் தடைபட்டு அதன் விலை உயர்ந்துள்ளது. இந்த சூழ்நிலையில் முக்கிய எண்ணெய் உற்பத்தி நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக் மற்றும் ஒபெக் பிளஸ் குழுக்களில் இருந்து மே 1-ம் தேதி முதல் விலகுவதாக ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) அறிவித்துள்ளது. தனது உற்பத்தித் திறனை அதிகரிக்க சமீபத்தில் மேற்கொண்ட முதலீடுகளைத் தொடர்ந்து, வளர்ந்து வரும் உலகளாவிய எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்ய இந்த முடிவு உதவும் என்று யுஏஇ தெரிவித்துள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தின் இந்த வெளியேற்றம், ஒபெக் அமைப்பு 'உலகையே ஏமாற்றுகிறது' என்று விமர் சித்த அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப்புக்கு கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது. அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான போர் தொடங்குவதற்கு முன்பு, ஜனவரி மாதத்தில், சவுதி அரேபியா மற்றும் பிற ஒபெக் நாடுகளிடம் எண்ணெய் விலையைக் குறைக்குமாறு ட்ரம்ப் கேட்டுக் கொண்டதுடன், இறக்குமதி வரிகளைப் பயன்படுத்துவேன் என்றும் எச்சரித்திருந்தார்.

## ஆப்பிரிக்க நாடுகளுக்கு 100% வரி விலக்கு: சீனா அறிவிப்பு; இன்று முதல் அமல்

சீனாவுடன் சுமூகமான ராஜீய உறவுகளைக் கொண்டுள்ள மேலும் 20 ஆப்பிரிக்க நாடுகளுக்கும், ஒரு குறிப்பிட்ட வரம்பு வரையிலான இறக்குமதிப் பொருள்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுவதாக சீனா அறிவித்துள்ளது.

இந்த வரிச் சலுகை வரும் வெள்ளிக்கிழமை (மே 1) முதல் 2028-ஆம் ஆண்டு, ஏப். 30 வரையில் 2 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2024-ஆம் ஆண்டு, டிசம்பரில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய 33 ஆப்பிரிக்க நாடுகளுக்கு மட்டும் சீனா இந்தச் சலுகையை வழங்கியிருந்தது. தற்போது, அந்தப் பட்டியலில் இல்லாத மேலும் 20 ஆப்பிரிக்க நாடுகளையும் இதில் இணைத்து, இந்தச் சலுகையை சீனா விரிவுபடுத்தியுள்ளது.

அதேநேரம், ஆப்பிரிக்காவில் இருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஒரு குறிப்பிட்ட வரம்பு (வரி ஒதுக்கீடு) நிர்ணயிக்கப்படும். அந்த வரம்புக்குள் இருக்கும் பொருள்களுக்கு மட்டுமே பூஜ்ஜிய வரி பொருந்தும்.

நிர்ணயிக்கப்பட்ட வரம்பைத் தாண்டி அதிகமான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டால், அந்த கூடுதல் பொருள்களுக்கு வழக்கம் போல வரி வசூலிக்கப்படும் என்று சீனாவின் சுங்க வரி ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

'வளர்ச்சிக்கான தங்கச் சாவி'...: இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் லின் ஜியான் கூறுகையில், 'மொத்தம் 53 ஆப்பிரிக்க நாடுகள் இந்த வரி விலக்கு திட்டத்தால் பயன்பெறும். இதன்மூலம், ஆப்பிரிக்காவின் தரமான பொருள்கள் சீன மக்களின் வீடுகளுக்கு நேரடியாக வந்தடையும். அதேபோல், ஆப்பிரிக்காவில் சீன நிறுவனங்களின் முதலீடுகளும், தொழில் வளர்ச்சியும் அதிகரிக்கும். ஒட்டுமொத்தமாக இந்த நடவடிக்கை, ஆப்பிரிக்க வர்த்தக செழிப்பு மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான 'தங்கச் சாவி'. ஆப்பிரிக்க நாடுகளுடனான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை மேம்படுத்தவும், இருதரப்பு பரஸ்பர வளர்ச்சியை உறுதிப்படுத்தவும் சீனா தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும்' என்று குறிப்பிட்டார்.

கடந்த 2025-ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி, சீனா-ஆப்பிரிக்கா இடையிலான மொத்த வர்த்தகம் 34,800 கோடி டாலரை எட்டியுள்ளது.

# அமெரிக்காவுக்கு மாரடைப்பு ஏற்படுத்தும் புதிய ஆயுதம் கொண்டு தாக்குவோம்: ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரான், மே 1:

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28-ந்தேதி தாக்குதல் நடத்தியது. இதில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இந்த தாக்குதல், ஏறக்குறைய 40 நாட்களாக நீடித்து வந்த நிலையில், கடந்த 8-ந்தேதி 2 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. போரால், கச்சா எண்ணெய் விநியோகத்தில் இடையூறு ஏற்பட்டு, உலக நாடுகள் பாதிக்கப்பட்டன. இந்த சூழலில் போர் நிறுத்தம் எதிரொலியாக, பதற்றம் சற்று தணிந்தது.



அதற்கான காலக்கெடு முடிந்த நிலையில் போர் நிறுத்தம் மீண்டும் நீட்டிக்கப்படுகிறது என டிரம்ப் கூறினார். எனினும், ஹார்மூஸ் ஜலசந்தியை திறக்க அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. ஆனால் அதற்கு ஈடாக அமெரிக்காவின் முற்றுகை வாபஸ் பெறப்பட வேண்டும் என ஈரான் முன்மொழிந்துள்ளது. எனினும், இதனை அமெரிக்க அரசு நிராகரித்து உள்ளது.

இந்த நிலையில், ஈரானின் கடற்படை தளபதியான ஷாராம் இரானி கூறும்போது, இஸ்லாமிய குடியரசான ஈரான், அதிக அச்சம் உண்டாக்குகிற ஆயுதம் ஒன்றை கொண்டு, மிக விரைவில் எதிரி படைகளை எதிர்கொள்வோம் என்று கூறினார்.

அந்த ஆயுதம் பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், அதனால் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படாது என்று நான் நம்புகிறேன் என்றார். ஈரானின் எண்ணெய் வர்த்தக நடவடிக்கைகளை முடக்கி பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி, ஈரானை கட்டாயப்படுத்தி பேச்சுவார்த்தைக்கு கொண்டு வந்து விடலாம் என்று டிரம்ப் நிர்வாகம் திட்டமிடுகிறது.

ஈரானுக்கு எதிரான முன்னறிவிக்கப்படாத ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு உள்ள அமெரிக்கா தன்னுடைய நடவடிக்கைகளில் வெற்றி பெற்று விடலாம் என தவறாக நினைத்து கொண்டு இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார். அரபிக்கடலில் இருந்து ஹார்மூஸ் ஜலசந்திக்கான பகுதியை ஈரான் மூடியுள்ளது. இந்த சூழலில், அமெரிக்கா எங்களை நெருங்கினால், சற்றும் தாமதிக்காமல் நாங்கள் அதிரடி நடவடிக்கையை எடுப்போம் என்றும் அவர் அதிரடி காட்டியுள்ளார். எங்களுடைய துறைமுகங்களில் இருந்து சில கப்பல்கள் புறப்பட்டு சென்றுள்ளன. சில திரும்பி வந்தடைந்து உள்ளன என கூறிய அவர், அமெரிக்காவின் முற்றுகையின் ஒரு பகுதியாக சில ஈரான் கப்பல்கள் சிறை பிடிக்கப்பட்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளார்.

இந்த விசயத்தில் சோமாலிய கடற்கொள்ளையர்களை விட அமெரிக்கர்கள் மிக மோசம். ஏனெனில் வறுமையால், சோமாலிய கடற்கொள்ளையர்கள் அந்த நிலைக்கு தள்ளப்பட்டனர். என்றும் குற்றச்சாட்டாக கூறினார்.

# வங்காளத்தில் 77 வாக்குச்சாவடிகளில் மறுதேர்தல்?: தேர்தல் ஆணையம்




# கொச்சி-தூத்துக்குடி: இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்துக்கு அனுமதி

# ரூ.4.70 கோடி ஜிஎஸ்டி செலுத்துமாறு ஓட்டுநருக்கு நோட்டீஸ்

# மே தினம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

# கீழடியில் சாய கிண்ணங்கள் கண்டுபிடிப்பு - ஆய்வாளர்கள் வியப்பு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 01.05.2026 வெள்ளிக்கிழமை | இலவச இ–பேப்பர்